பக்கங்கள்: இருபத்துநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 22 வெள்ளிக்கிழமை (08.10.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 316

# 13 ஆவது திருத்தம்: இந்தியா உரிய நடவடிக்கை எடுக்கும்

## ஆனால் தலையிட முடியாது; இல. தலைவர்களிடம் மாற்றம் தேவை என்கிறார் தூதுவர் காந்த்



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 8

பதின்மூன்றாவது அரசமைப்புச் சட்டத்திருத்தத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த இந்தியா உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். ஆனால் நேரடியாகத் தலையிடுவது சாத்தியமில்லை.

இலங்கையின் அரசியல் தலைவர்களிடம் மனமாற்றம் வேண்டும். அதன்மூலமே இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வைக் காண முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்த்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான அமைப்புடன், ஆயர் இல்லத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே இந்தியத் தூதுவர் இதனைக் கூறினார்.

பதினெட்டாவது அரசமைப்புச் சட்டத்திருத்தம் தமிழ் மக்களுக்கு அதிகாரம் எதனையும் வழங்காது என்று தமிழ் மக்கள் கருதுகிறார்கள். ஆகையால் பதின்மூன்றாவது சட்டத்திருத்தத்தை (இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை) மறைமுகமான நிகழ்ச்சி நிரல் கொண்டு அமுல் செய்யாமல், கௌரவமான ஆக்கபூர்வமான முறையில் அமுல் செய்வதற்கு இந்தியா தூண்டுதல் செய்ய வேண்டும்; அதனை விரைவுபடுத்துவது அவசியமும் அவசரமுமானது என்று தூதுக்குழு இந்தியத் தூதரிடம் வலியுறுத் தியது. அதற்குப் பதிலளிக்கும் வகையில் கருத்துக் கூறுகையிலேயே இந்தியத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்குவதில் இலங்கை அரசுக்கு உண்மையான கரிசனை இல்லை என்றும், இந்தியா இது விடயத்தில் இலங்கைக்கு அரசியல் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தூதுக்குழுவினர் கோரிக்கை விடுத்தனர்.

பதின்மூன்றாவது சட்டத்திருத்தத்தை அதாவது இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அமுல் செய்து தமிழர் பிரச்சினைக்கு விரைவாக தீர்வு காண உதவ வேண்டும் என்றும் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான தூதுக்குழுவினர் இந்தியத் தூதுவரிடம் வலியுறுத்தினர். (அ)

## மேலும் 500 சிங்களக் குடும்பங்கள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றன

யாழ்ப்பாணம்,ஒக்.8

மீளக்குடியேறும் நோக்கத்தோடு 180 சிங்களக் குடும்பங்கள் ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்துள்ள நிலையில் மேலும் 500 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 1500 சிங்கள மக்கள் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர். மாலைக்குள் அவர்கள் அனைவரும் யாழ். நகரை வந்தடைவார்கள் என்று ரயில் நிலையத்தில் முகாமிட்டுள்ள சிங்கள மக்கள் கூறுகின்றனர்.

ரயில் நிலையத்தில் தங்கி இருக்கும் சிங்கள மக்களுக்கு முழுப்பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. செய்தியாளர்கள் உட்பட யார் சென்றாலும் விவரங்கள் பதியப்பட்ட பின்னரே அவர்களை சந்திக்க அனுமதிக்கப்படுகிறது.

அனுராதபுரம், மிஹிந்தலை ஆகிய பிரதேசங்களில் இருந்து இன்று மாலைக்குள் 500சிங்களக் குடும்பங்கள் வந்து சேர உள்ளதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது'' - எனத் தெரிவித்தார் ஏ.சந்திரசிறி.

மீளக்குடியேறும் நோக்கத்தோடு ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்து ரயில் நிலையத்தில் தற்காலிகமாகத் தங்கி உள்ள சிங்கள மக்களில் ஒருவரே சந்திரசிறி. அந்த மக்களின் சார்பில் ஊடகங்களிடம் இவரே பேசுகின்றார்.

மூன்று நாள்களின் முன்னர் யாழ்ப்பாணம் வந்த இவருடன் 180 குடும்பங்களைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்ட சிங்கள மக்களும் வந்திருக்கின்றனர். இவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நிரந்தர வதிவிடங்கள் எவையும் இல்லாத போதும், (24 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே

**வலி.வடக்கு மக்களுக்கு மூன்று மாத நிவாரணமில்லை**

வலி.வடக்கு மக்களுக்கு கடந்த 3 மாதங்களுக்குரிய நிவாரணம் வழங்கப்படவில்லை. பக்கம் 5

**இராணுவ வசமுள்ள மைதானத்தை ஒப்படைக்க கோரிக்கை**

பரந்தனில் இராணுவத் தளமாக இயங்கும் விளையாட்டு மைதானத்தை ஒப்படைக்குக. பக்கம் 9

**42 பணியகங்கள், 3 பிரிவுகள் புலிகளின் அனைத்துலக வலையமைப்பில்**

விடுதலைப்புலிகள் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், நியூசிலாந்து மற்றும் அவுஸ்ரேலியாவில் 42 பணியகங்களை வைத்திருக்கிறது. பக்கம் 17

## தமிழ்க் கட்சிகளின் பிரமுகர்கள் கருத்து

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ்ப்பாணத்தில் குடியேறும் நோக்கில் சிங்கள மக்கள் வருகை தருவதை ஒட்டி தமிழ்க்கட்சிகளின் பிரமுகர்கள் கருத்துத் வெளியிட்டுள்ளனர்.

அவர்களின் கருத்துக்கள் வருமாறு:-

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தவை வருமாறு :-

யாழ்ப்பாணத்தில் தமக்குச் சொந்த நிலம் இருப்பதாக யாழ். வந்துள்ள சிங்களக் குடும்பங்கள் தெரிவித்துள்ளதாக தகவல் வெளி வந்துள்ளது. அவர்கள் பாரம்பரியமாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர்களா என்பதற்கான ஆதாரங்கள் குறித்து விசாரிக்க வேண்டும். ஏற்கனவே இங்கு வாழ்ந்தார்களா என்பது (24 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அகதிகளுடன் கனடாவுக்குள் நுழைவதற்கு தயாராகிறது மற்றொரு கப்பல்

கொழும்பு, ஒக். 08

இலங்கை அகதிகளை ஏற்றிய மற்றுமொரு கப்பல் கனடாவுக்குச் செல்ல இருப்பதாக வெளிவந்துள்ள தகவலையடுத்து, கனேடிய பொலிஸாரும், அந்நாட்டு இராணுவத்தினரும் இணைந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

செய்மதிகள் மற்றும் அதிநவீன கடலாய்வுக் கருவிகளின் உதவியுடன் கனேடிய அதிகாரிகள் தயாராக இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் 492 இலங்கை அகதிகளை ஏற்றிக்கொண்டு 'சன் சீ' என்ற கப்பல் கனடாவைச் சென்றடைந்தது தெரிந்ததே.

அதேபோன்றுதான் மேற்படி இரண்டாவது கப்பலும் கனடாவுக்குச் (24 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே

**கல்விச் சுடர்**

ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் 01இன் பகுதி-I, II-A, III-B, பாடமாதிரி வினாத்தாள்கள்

## எம்.பி. பதவியை பொன்சேகா இழந்துவிட்டாரென அறிவிப்பு

கொழும்பு, ஒக். 08

சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்துள்ளார் என்றும் அவருக்குப் பதிலாக வேறொருவரை நியமிக்கும்படியும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தேர்தல் ஆணையாளருக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இரண்டாவது இராணுவ நீதிமன்றத்தால் சரத் பொன்சேகாவுக்கு 30 மாதக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து, அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக தேசிய முன்னணியின் (24 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேரணை தோல்வி

கொழும்பு, ஒக். 08

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்றுத் தோல்வியடைந்தது.

ஆதரவாக 32 நாடாளுமன்ற உறுப்பினர்களும் எதிராக 139 பேரும் வாக்களித்தனர். 107 மேலதிக வாக்குகளால் நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி கண்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. (24 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பின் பிரபல
**கண்** சத்திர சிகிச்சை நிபுணர்
திருநெல்வேலி யாழ்.வைத்தியசாலையில்
5 நிமிட சத்திர சிகிச்சை

புதிய **PHACO** கண்சத்திர சிகிச்சை நிபுணரின் கண் வைத்திய ஆலோசனையும் கண் சத்திரச்சிகிச்சையும் தினமும் மாலை 4 மணிக்கு நடைபெறும்.

**புதிய யாழ்.வைத்தியசாலை**
315, பலாலி வீதி, திருநெல்வேலி.
தொ.பே: 021 222 3533

## அமைச்சர் பீரிஸுக்கு எதிராக சபையில் ஐ.தே.க. நம்பிக்கையில்லாப் பிரேரணை

கொழும்பு, ஒக். 08

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனுக்கு ஆலோசனை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட நிபுணர்கள் குழு மற்றும் சில விடயங்கள் ஆகியவை தொடர்பாக சர்வதேச ரீதியில் இந்த நாட்டின் கௌரவத்தையும், நற்பெயரையும் பாதுகாக்க வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தவறிவிட்டார்.

- இப்படிக் குற்றஞ்சாட்டி அவருக்கு எதிராக ஐ.தே.கட்சி நேற்று நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டுவந்தது.

ஐ.தே.கட்சி எம்.பியும், எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவுமான ஜோன் அமரதுங்க கட்சியின் சார்பில் இந்தப் பிரேரணையை சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார்.

இதுகுறித்து அவர் கூறியவை வருமாறு:-

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் விசேட நிபுணர்கள் குழுவொன்றை அமைக்க எடுத்த முயற்சியை (24 ஆம் பக்கம் பார்க்க)

# கொள்கைகளை மாற்றிக்கொள்ளும் அரசியல் பச்சோந்தியாகப் பீரிஸ்

## நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மீது மங்களசமரவீர

கொழும்பு, ஒக். 8

ஒருகாலத்தில் அதிகாரப் பரவல் பற்றி உறுதியான கொள்கையைக் கொண்டிருந்த இன்றைய வெளிநாட்டமைச்சர் ஜி.எல். பீரிஸ் இன்று அதே அழுத்தத்துடன் ஒற்றை ஆட்சியை வலியுறுத்துபவராக மாறிவிட்டார்.

இவ்வாறு ஐ.தே.க. உறுப்பினர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார். வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது பேசிய மங்கள சமரவீர மேலும் பேசுகையில், இந்தச் சபையில் விவாதிக்கப்படும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஜி.எல்.பீரிஸ் மீது நம்பிக்கையில்லை என்பதை மட்டும் குறிப்பதாக இல்லை. இது ராஜபக்ஷ ஆட்சியின் வெளியுறவுக் கொள்கைக்கு எதிரானது - என்றார்.

மங்கள சமரவீர மேலும் குறிப்பிட்டதாவது:-

குமாரதுங்க அமைச்சரவையில் டாக்டர் பீரிஸும் லக்ஷ்மன் கதிர்காமரும் தேசியப் பட்டியல் மூலம் இணைந்து கொண்டார்கள். லக்ஷ்மன் கதிர்காமர் உயர்தர அறிவாளியாகவும் புத்திஜீவியாகவும் திகழ்ந்தவர். இலங்கையின் மிகச்சிறந்த வெளியுறவு அமைச்சராக அவர் திகழ்ந்தார் - உயர்ந்தார். அவ்வாறான சிறந்த வெளியுறவு அமைச்சர் இலங்கையில் இருந்ததில்லை. ஆனால் டாக்டர் பீரிஸ் ஓர் அரசியல் பச்சோந்தி என்பதை நிரூபிப்பவராக உயர்ந்தார். தனது அரசியல் கொள்கைகளையும் அதிகாரங்களையும் தனது தகைமையையும் பேரம்பேசுபவராக மாறிவிட்டார்.

அவர் தனது தற்போதைய எஜமானரை மகிழ்ச்சிப்படுத்துவதற்காகத் தனது கொள்கைகள், நிலைப்பாடுகளை முரண்பாடுகளுக்குள் தள்ளிவிடுவபவராக மாறிவிட்டார். சந்திரிகா குமாரதுங்கவிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பின் அவரிடமிருந்து ராஜபக்ஷவுக்கும் தாவியவர் தனது உணவுக்காக ஒருவருக்கொருவர் எதிர்மறையானவர்களைப் புகழ்ந்து பாடுபவராக இருந்துவந்துள்ளார். மூன்று ஆண்டுகளுக்கு முன் ஆயுதத் தரப்புக்குப் பாய்ந்து அமைச்சராவதற்கு முன்னர் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை மிகத் தீவிரமாக எதிர்த்துப் பேசுபவராக இருந்தார். ஆனால் இன்று ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் அதிகரிக்க வேண்டும் என்ற சதி முயற்சியில் முன்நின்று உழைக்கின்றார்.

இவ்வாறு மங்கள சமரவீர தமது உரையில் குறிப்பிட்டார். (ப)

# கூட்டமைப்பு கலந்துகொள்ளவில்லை

கொழும்பு, ஒக். 8

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு எதிரான் நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கலந்து கொள்ளவில்லை.

இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த ஜி.எஸ்.பி. வரிசலுகையை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தியதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறினார் என்ற குற்றச்சாட்டின் கீழேயே பீரிஸுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றில் சமர்ப்பித்திருந்தது.

இலங்கையில் மனித உரிமைகளின் நிலை மிக மோசமாகி உள்ளது எனத் தெரிவித்தே ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை நிறுத்தியது.

குறிப்பாக இறுதிப் போரின் போது அனைத்துலகச் சட்டங்கள் மீறப்பட்டன எனவும் போர்க் குற்றங்கள் புரியப்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே ஒன்றியம் வரிச்சலுகையை ரத்துச் செய்திருந்தது.

இவ்வாறு வரிச் சலுகை ரத்துச் செய்யப்படுவதைத் தடுக்கத் தவறினார் என்ற அடிப்படையிலேயே பீரிஸுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றில் முன்மொழியப்பட்டிருந்தது.

எனவேதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதில் கலந்து கொள்ளவில்லை. அவ்வாறு கலந்துகொண்டு பீரிஸுக்கு எதிராக வாக்களிப்பது தார்மீக ரீதியில் தமிழ் மக்களுக்குச் செய்யும் துரோகம் என்பதால் விவாதத்தில் கலந்துகொள்ளவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்தனர். (உ)

# சமாதான பாத யாத்திரையுடன் ஞாயிறன்று அரச அதிபர் தலைமையில் சிறுவர் தினம்

## யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஒக்.8

யாழ்.மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நடத்தும் சர்வதேச சிறுவர் தினம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அரச அதிபர் திருமதி இமல்டா சுகுமார் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திர குமார், சில்வேஸ்திரி அலன்ரின் மற்றும் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்ட யுனிசெவ் தலைவர் டமஸ்கஸ் மச்சேரி, சிறுவர் பாதுகாப்பு திட்ட முகாமையாளர் கந்தையா மகேந்திரன், யாழ்.மாவட்ட டி.ஆர்.சி. அலுவலகப் பொறுப்பாளர் படியோலா புளோரஸ் ஆகியோர் பங்குபற்ற உள்ளனர்.

யாழ். மத்திய கல்லூரியிலிருந்து யாழ். வீரசிங்கம் மண்டபம் வரை சிறுவர்களின் உரிமைகளை விலியுறுத்தும் சமாதான பாதை யாத்திரையும் இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# நாளை மின் தடை

யாழ்ப்பாணம், ஒக்.8

திருத்த வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சி ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஒ-16)

# பொன்சேகாவை விடுவிக்குமாறு கோரி பிக்குகள் தலதாமாளிகையில் வழிபாடு

கொழும்பு, ஒக்.08

சரத் பொன்சேகாவை விடுவிக்கக் கோரி நேற்றுக் கண்டியில் பெருந்திரளான பிக்குகள் மத வழிபாட்டில் ஈடுபட்டனர். கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் மாமலுவ திடலில் மாதுலுவாவே சோபித்த தேரரின் தலைமையில் நேற்று மாலை 4.20 அளவில் இந்த வழிபாடு இடம்பெற்றது.

கண்டியைத் தளமாகக் கொண்டு இயங்கும் அஸ்கிரிய மற்றும் மல்வத்துவ பீட மகாநாயக்கர்கள் இந்த நிகழ் வில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கண்டி - தலதா மாளிகையில் இடம்பெற்ற மத வழிபாடுகளை அடுத்து மாமலுவ திடலில் பிக்குகளின் கூட்டம் மாதுலுவாவே சோபித்த தேரரின் தலைமையில் ஆரம்பமானது.

இந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிட்ட மாதுலுவாவே சோபித்த தேரர் கூறியவை வருமாறு:-

யுத்தத்தால் பெற்ற வெற்றி அனைத்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கே சென்றடைய வேண்டும். முன்னாள் பிரதமர் அமரர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் பின்னரரான தலைமைத்துவத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சிறப்பிடம் பெறுகிறார்.

யுத்தத்தை முன்னெடுத்தலிலும், அரசியல் கடமைகளிலும் ஜனாதிபதியின் தீர்மானங்கள் போலவே, சரத் பொன்சேகாவின் விடயம் தொடர்பிலும் நடுநிலையான தீர்மானத்தை ஜனாதிபதி எடுக்கவேண்டும். (சி)

# 100 மாணவர்களுக்கு வங்கியில் இன்று சேமிப்புக் கணக்குகள் ஆரம்பித்து வைப்பு

## சங்கானைவாசியின் முன்மாதிரியான செயல்

சங்கானை, ஒக். 8

வலி.மேற்குப் பிரிவில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 100 பாடசாலை மாணவர்களின் சுபீட்சமான வாழ்க்கைக்காக சங்கானை தேசிய சேமிப்பு வங்கியில் கணக்குகள் இன்று ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

சங்கானையைச்சேர்ந்த தேசிய லொத்தர் சபை முகவரான கதிரேசு ஜீவகன் இந்தக் கணக்கை ஆரம்பித்து மாணவர்களிடம் வழங்கவுள்ளனர். தமது தாயாரின் நினைவு நாளை முன்னிட்டு ஜீவகனின் இந்த முன்மாதிரியை வங்கி முகாமையாளர் பெரிதும் பாராட்டி, மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார். (ஒ-ஐ-29)

## 6½ லட்சம் சதுரகிலோ மீற்றர் கொண்ட

# யாழ். குடாநாட்டின் 8 பிரதேசங்களில் கண்ணிகள் முழுமையாக அகற்றப்பட்டன

யாழ்ப்பாணம், ஒக். 8

யாழ். மாவட்டத்தில் 8 இடங்களில் இதுவரை பூரணமாகக் கண்ணிவெடி அகற்றப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட கண்ணிவெடி அகற்றும் பிரிவின் தலைவர் வ.முருகதாஸ் தெரிவித்துள்ளார்.

டனிஸ் கண்ணிவெடி அகற்றும் பிரிவு, ஹலோ ட்ரஸ்ட், இராணுவத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவு ஆகிய மூன்றும் இணைந்து 16 லட்சத்து 57 ஆயிரத்து 504 சதுர கிலோ மீற்றர் பரப்பில் கண்ணிவெடிகளை அகற்றியுள்ளன.

மண்டைதீவு தெற்கு, இடைக்காடு, தம்பாலை புன்னாலைக் கட்டுவன் வடக்கு, அரியாலை வடக்கு, மத்தி, நாயன்மார்க்கட்டு, பருத்தித்துறை, நாவற்குழி முதல் கேரதீவு வரையான வீதியின் கரையோரங்கள், கிளிநொச்சி - சுன்னாகம் வரையிலான மின்சாரப் பாதைப் பகுதிகள் ஆகியவற்றிலேயே கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதாக சான்றிதழ் வழங்கப்பட்ட பிரதேசங்களாகும். (ஒ-15)

# மர்மப் பொருள் வெடித்து இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக். 8

சுழிபுரம், கல்விளான் பகுதியில் நேற்று முற்பகல் மர்மப் பொருள் வெடித்ததில் இளைஞர் ஒருவர் கையில் படுகாயமடைந்தார்.

அதேயிடத்தைச் சேர்ந்த ஏ.சுரேஷ் (வயது 17) என்பவரே காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வீட்டுக்கு முன்பாகவுள்ள கழிவு வாய்க்காலில் கிடந்த மர்மப் பொருளை எடுத்துச் சென்று அதைக் குத்தியபோது அது வெடித்ததால் அவர் காயமடைந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ-78)

## பண்ணைப் பால வீதியைப் புனரமைக்க

# ஐரோப்பிய ஒன்றியத்திடம் 1,000 மில். ரூபாவை கோருகின்றனர் யாழ். செயலக அதிகாரிகள்

## யாழ். வந்துள்ள வதிவிடப் பிரதிநிதியுடன் நேற்றுக் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், ஒக். 8

பண்ணைப் பாலத்தின் ஆறு கிலோ மீற்றர் வீதியைப் புனரமைக்க ஆயிரம் மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது. அதற்கான நிதியை ஐரோப்பிய ஒன்றியம் வழங்க ஏற்பாடு செய்யவேண்டும்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி விம் புட்ஹோமிடம் இந்தக் கோரிக்கையை யாழ். செயலக அதிகாரிகள் விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கையைச் சாதகமாகப் பரிசீலிப்பதாக அவர் பதில் அளித்தார்.

யாழ். அரச அதிபர் சார்பில் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் தலைமையிலான செயலக அதிகாரிகள் வதிவிடப் பிரதிநிதியுடன் கலந்துரையாடல் நடத்தினர்.

யாழ். மாவட்டத்தில் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டுவரும் வீடமைப்பு, உட்கட்டுமான வசதிகள், ஜீவனோபாயம் ஆகியன தொடர்பாக வதிவிடப்பிரதிநிதி கேட்டறிந்தார்.

கிராமங் கிராமமாகத் தேவைகள் குறித்து ஆராய்ந்து விவரம் சமர்ப்பிக்குமாறு வதிவிடப்பிரதிநிதி செயலக அதிகாரிகளிடம் கோரினார்.

இதுதொடர்பாக விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும் மிக விரைவாக அந்த விவரங்களைச் சமர்ப்பிப்பதாகவும் செயலக அதிகாரிகள் அவரிடம் தெரிவித்தனர். (ஒ-ஐ-15)

# காங்கேசன்துறைக்கான ரயில் பாதை பணிகளை ஆரம்பிக்க வருகிறார் இந்திய வெளியுறவு அமைச்சர் கிருஷ்ணா

## 29ஆம் திகதி மாங்குளத்தில் அங்குரார்ப்பண நிகழ்வு

இந்திய அரசால் புனரமைக்கப்படவுள்ள காங்கேசன்துறை - ஓமந்தை ரயில்பாதைக்கான அங்குரார்ப்பண நிகழ்வு இம்மாதம் 29ஆம் திகதி நடைபெறும். இந்திய வெளிவிவகார அமைச்சர் எம்.எஸ்.கிருஷ்ணா அன்று இந்தப்பாதை அமைப்பதற்கான பணியை வைபவரீதியாக ஆரம்பித்துவைப்பார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்த இந்தியத் தூதர் அசோக் கே.காந்த் இத்தகவலை வெளியிட்டார்.

யாழ். செயலகத்தில் வடக்கு மாகாண சபை ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார் காந்.

இந்தச்சந்திப்பின்போது மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு :-

இந்திய வெளியுறவு அமைச்சர் எம்.எஸ்.கிருஷ்ணா தலைமையிலான 20 பேர் கொண்ட குழுவினர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு எதிர்வரும் 29ஆம் திகதி விஜயம் செய்ய உள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் இந்திய தூதுவராலயத்தின் கிளைக் காரியாலயத்தைத் திறந்துவைத்தல், இந்திய அரசினால் மேற்கொள்ளப்பட உள்ள வீட்டுத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தல் என்பவற்றுடன் காங்கேசன்துறை - ஓமந்தை வரையிலான ரயில் பாதை புனரமைப்பை மாங்குளத்தில் ஆரம்பித்துவைக்கும் நிகழ்விலும் கலந்துகொள்வார்.

தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் மடு - தலைமன்னார் இடையிலான ரயில் பாதைப் புனரமைப்பையும் ஆரம்பித்துவைக்கப்படும் - என்றார். (ஒ-ஐ-15)



லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தின் சமூகப் பொறுப்புணர்வுக்கான ஒத்துழைப்புச் செயற்றிட்ட நிகழ்வு நேற்று யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த் மரக்கன்று நடுவதை முதலாவது படத்திலும், மாணவர் ஒருவருக்கு தூதுவர் மரக்கன்று வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள் - கவிநேசன்)

# தமிழ் மக்களின் காணி அபகரிப்புக் குறித்து ஆராய கூட்டமைப்பினர் அம்பாறை விஜயம்

நிந்தவூர், ஒக். 08

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவது குறித்து ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உயர் மட்டக் குழுவொன்று நாளை சனிக்கிழமை அம்பாறை மாவட்டத்துக்கு செல்ல உள்ளன.

கூட்டமைப்பின் செயலாளர் மாவை சேனாதிராஜா தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த பயணத்தை மேற்கொள்கின்றனர்.

நாளை அம்பாறை மாவட்டம் செல்லும் இந்த உயர் மட்டக் குழுவினர் எதிர்வரும் திங்கட்கிழமை வரை அங்கு தங்கியிருந்து கட்சி முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் கலந்துரையாடுவர்.

இதன்படி இக் குழுவினர் நாளை பொத்துவில், திருக்கோவில், ஆலையடிவேம்பு ஆகிய பிரதேசங்களுக்குப் பயணம் செய்து மக்கள் சந்திப்புகளை நடத்தவுள்ளனர்.

அத்துடன் நாளை மறுதினம் அம்பாறை மாவட்ட ரீதியாக கூட்டமைப்பு கட்சி முக்கியஸ்தர்கள், உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொள்ளும் முக்கிய கூட்டம் ஒன்று கல்முனையில் நடைபெறவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை மாலை கூட்டமைப்பு முக்கியஸ்தர் செல்லையா இராசையா தலைமையில் நடைபெறும் மக்கள் சந்திப்புக் கூட்டம் ஒன்றிலும் கூட்டமைப்பின் உயர்மட்டக் குழுவினர் கலந்துகொள்ளவுள்ளனர். (சி)

# இலங்கையின் கல்வித்துறை வளர்ச்சிக்கு ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்து உதவும்

## நகரில் நடந்த நிகழ்வில் வதிவிடப் பிரதிநிதி கருத்து

யாழ்ப்பாணம்,ஒக்.8

இலங்கையின் கல்வித்துறை வளர்ச்சிக்கு ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் தனது பங்களிப்பை வழங்கும். அதன் ஓர் அங்கமாகவே கடந்த காலப் போரின் போது பாதிக்கப்பட்ட சிறுவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு நடமாடும் நூலக சேவைக்கு நாம் நிதியுதவியளித்துள்ளோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி விம்பிரவுட் ஹெறாம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.பொது நூலகத்தில் நேற்று இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் தகவல் நிலைய ஆரம்பநிகழ்வு நடமாடும் நூலக சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு என்பவற்றின் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைச் சிறுவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டு பல செயற்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கி வருகிறது. பாடசாலைகள், சுகாதார பராமரிப்பு நிலையங்களின் கட்டுமானம், புனர்நிர்மாணப் பணிகளுக்காக நிதியுதவி வழங்கி வருகிறது. சுற்றுச்சூழல் முகாமைத்துவம், மிதிவெடி அபாய விழிப்புணர்வூட்டல், உடல்நல ஆரோக்கியம் உள்ளிட்ட சேவைகளுடன் சிறுவர் உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதிலும் அக்கறை கொண்டு செயற்பட்டு வருகிறது.

சர்வதேச் சிறுவர் தினத்தை முன்னிட்டு 'கடவுளின் சொந்தக் குழந்தைகள்' நிறுவனம் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் நடமாடும் நூலகசேவை இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் யாழ்.மாவட்டத்திலுள்ள சிறுவர்கள் தமது அறிவு விருத்தியை மேம்படுத்த முடியும் - என்றார். (த-14)




யாழ்.பொது நூலகத்தில் நேற்று இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் தகவல் நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வின்போது எடுத்த படங்கள் இவை. இந்த நிகழ்வில் யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.சரவணபவ மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை முதல் படத்திலும் இந்தத் தகவல் நிலையத்துக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி விம்பிறவுட்ஹோம், யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் பரிமாறிக் கொள்வதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: உமா)

# 'ஒறிபிளேம்' நிறுவனம் இன்று யாழ். நகரில் திறப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.8

'ஒறிபிளேம்' லங்கா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தனது கிளை நிறுவனத்தை முதன்முதலாக யாழ். நகரில் இன்று காலை 9 மணிக்குத் திறந்துவைக்கவுள்ளது.

இல.187/30, யூனியன் லேன், ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இந்த நிறுவனத்தை 'ஒறிபிளேம்' நிறுவனத்தின் இலங்கைக்கான நிர்வாகப் பணிப்பாளர் பிரே மார்டின்சன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்துவைப்பார். (த)

# தடையை மீறி நகரில் நடைபாதை வியாபாரம்; பொலிஸாரும் மாநகர சபையினரும் அதிரடி!

## 20 வியாபாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ்.நவீன சந்தைப் பகுதி நடைபாதைக் கடைகள் மற்றும் நகர வீதிகளில் பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறாக வர்த்தகத்தில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட வியாபாரிகள் நேற்று முன்தினம் பொலிஸாரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

யாழ்.மாநகர சபையினரும் பொலிஸாரும் இணைந்து இந் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்த வியாபாரிகள் மாநகர சபை வாகனங்களில் ஏற்றப்பட்டு யாழ்.பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர். புடைவைக் கடைகளுக்கு முன்னால் வைக்கப்பட்ட உருவ பொம்மைகள் மற்றும் பொருள்கள் மாநகர சபை வாகனங்களில் ஏற்றப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

குறித்த வியாபாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்பட்டனர். வீதியோரங்களில் நடைபாதை வியாபாரம் செய்வதற்கு யாழ்.மாநகர சபையால் தடைவிதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-15-16-319-86)

# வடக்கு மாகாண சபை அலுவலகத்தை நாவற்குழியில் இயக்குவதற்கு ஆலோசனை

திருகோணமலை, ஒக். 8

வடக்கு மாகாண சபையின் அலுவலகத்தை நாவற்குழியில் இயக்குவதற்கு ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி அறிவியல் நகரில் மாகாண சபையை இயக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது.

அந்தப் பகுதியில் மாகாண சபையை முழுமையாக இயக்க முடியாமைக்கான காரணங்கள் தெரிவிக்கப்பட்டதை அடுத்து மாகாண சபையின் பிரதம செயலாளர் அமைச்சுச் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடினார்.

மாகாண சபையின் அலுவலகங்களை கிளிநொச்சியில் இயக்குவதில் உள்ள சிக்கல்களை ஆராய்ந்தபோது, அலுவலகங்களை யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களில் இயக்கும் சாத்தியங்கள் குறித்து ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.

நாவற்குழியில் உள்ள கட்டடங்களில் அமைச்சு அலுவலகங்களைச் செயற்படுத்துவது குறித்தும் ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

எனினும், இறுதி முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை. (ஒ-ஐ)

# சாயி நிலையத்தில் இரத்த தானம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

பகவான் பாபாவால் பிரகடனப்படுத்தப்பட்ட இரத்ததான தினத்தை ஒட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இரத்ததானம் நடைபெறும். இத்தினத்தில் அன்புத் திரவத்தை தானம் (இரத்ததானம்) செய்ய ஆர்வமுடையவர்களையும் கலந்துகொள்ளுமாறு நிலையத்தினர் கேட்டுக்கொண்டனர்.

### திருநெல்வேலி வங்கியில் நிதிமோசடி முயற்சி

# வங்கி ஊழியருக்கு பிணை அனுமதி மற்றைய நபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,ஒக்.8

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி திருநெல்வேலியில் உள்ள தனியார் வங்கி ஒன்றில் நிதி மோசடி செய்ய முயன்றதாக கைது செய்யப் பட்ட இருவரில் ஒருவருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றத்தால் நேற்று பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி 2 லட்சத்து 10 ஆயிரம் ரூபாவைப் பெற முயற்சித்த போது நபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அந்த நபர் கொடுத்த தகவலின்படி குறித்த வங்கி உத்தியோகத்தரும் கைது செய்யப்பட்டு கடந்த 27ஆம் திகதி யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார் .

விசாரணைகளை மேற் கொண்ட நீதிவான் இரண்டு பேரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

அந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்காக எடுக்கப்பட்டது.

இதன் போது குறித்த சம்பவத்தின் இரண்டாவது நபரான வங்கி உத்தியோகத்தரை 2 லட்சம் ரூபா காசுப் பிணையும்,ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 2 ஆள் பிணையிலும் செல்ல நீதிவான் உத்தரவிட்டார்.அத்துடன் இவர் நாட்டைவிட்டு வெளியேற அனுமதி வழங்கக் கூடாதென்று குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

முதலாவது சந்தேக நபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-9)

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
ஐப்பசி 07, 2010
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,770.74↓
மிலங்கா(MPI) 7,412.94↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2,606.98Mn
பங்குகளின் அளவு(No.) 63.56Mn
வியாபாரம்(No.) 18,588
சந்தை முதல்(Mkt.Cap)Rs. 2,234.68Bn
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
ரேணுகா சிற்றி ஹொட்டல் 406.40
போகல கிறபைட்(f)ற் 61.20
சிலோன் காடியன் 1277.50
தங்கிறீன் 105.80
பெ(f)கர்ஸ் ஹொட்டல் 78.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
கொழும்பு பார்மசி 1607.00
சி.டி.பி 75.60
அலயன்ஸ் 702.00
ஓணலி 62.00
கெ(ട)ஸ்ற் அனேர்ஸ் 62.10
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# தடை நீடிப்பு விசாரணையில் புலிகளைத் தவிர ஆதரவாளர்கள் எவரையும் அனுமதிக்கமுடியாது

## மத்திய தீர்ப்பாயம் உத்தரவு

சென்னை,ஒக்.8

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தடை நீடிப்பது குறித்த விசாரணையில் அந்த இயக்கத்தின் உறுப்பினர்களைத் தவிர அதன் ஆதரவாளர்களை அனுமதிக்க முடியாது - என்று தீர்ப்பாயம் உத்தரவிட்டது.

புலிகள் இயக்கத்தின் மீதான தடையை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கான அறிவிப்பாணையை கடந்த 5 ஆம் மாதம் 14 ஆம் திகதி மத்திய அரசு பிறப்பித்தது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அந்த இயக்கத்தின் உறுப்பினர்கள், நிர்வாகிகள் யாராவது ஆஜராகி, தடையை நீடிப்பது அல்லது விலக்குவது குறித்து விளக்கம் அளிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதற்காக நியமிக்கப்பட்ட தீர்ப்பாயத்துக்குத் தலைவராக டில்லி உயர்நீதிமன்ற நீதிபதி விக்ரம்ஜித் சென் நியமிக்கப்பட்டார். அவர் தனது விசாரணையை டில்லியில் தொடங்கினார். டில்லியில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ஆஜராகி விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்ற முறையில் தன்னை இந்த விசாரணையில் இணைக்க அனுமதிக்க வேண்டும் என்று வாதிட்டார். ஆனால் அவரது கோரிக்கையை ஏற்க நீதிபதி மறுத்து விட்டார்.

இந்த நிலையில், சென்னையில் விசாரணை நடத்தப்படும் என்று தீர்ப்பாயம் அறிவித்தது. அதைத்தொடர்ந்து கடந்த 5 ஆம் திகதி விசாரணை நடைபெற்றது. பழ.நெடுமாறனும், தமிழக மக்கள் உரிமைக் கழகமும் தங்களையும் வழக்கில் இணைத்துக் கொள்ளும்படி மனுத் தாக்கல் செய்தனர்.

புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் என்ற நிலையில் வெளிநாட்டில் வாழும் ஜோசப் ரொபின்சன் என்பவரும் சட்டத்தரணி எம்.ராதாகிருஷ்ணன் மூலமாக தீர்ப்பாயத்தில் மனுத் தாக்கல் செய்தார். ஆனால் மின்னஞ்சல் கடிதத்தையும், போதிய ஆவணங்கள் இல்லாத நிலையிலும் அவர் தரப்பில் யாரையும் அனுமதிக்க முடியாது என்று நீதிபதி கூறியிருந்தார்.

போதிய ஆவணங்களைத் தாக்கல் செய்தால் ரொபின்சன் தரப்பில் அவர் நியமித்துள்ள சட்டத்தரணியை ஆஜராக அனுமதிப்பது பற்றிப் பரிசீலிக்கலாம் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், சென்னையில் நேற்றுமுன்தினமும் விசாரணை நடைபெற்றது. தமிழக மக்கள் உரிமைக் கழகத்தின் தலைவர் புகழேந்தியின் தரப்பில் சட்டத்ரணி எம்.இராதாகிருஷ்ணன், பழ.நெடுமாறன் தரப்பில் சட்டத்தரணி சந்திரசேகரன், வைகோ ஆகியோர் ஆஜரானார்கள்.

மத்திய அரசுத் தரப்பில் கூடுதல் சொலிஸிட்டர் ஜெனரல் சந்தியோக், தமிழக அரசின் சார்பில் கியூப் பொலிஸ் அதிகாரி அசோக்குமார் ஆகியோர் ஆஜரானார்கள்.

சாட்சி விசாரணையைத் தொடங்க நீதிபதி உத்தர விட்டார். அதைத் தொடர்ந்து சாட்சிக் கூண்டில் அசோக்குமார் ஏறினார். அவரிடம் சந்தியோக் விசாரணை நடத்தினார்.

அப்போது வைகோ கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழகத்துக்குப் புகலிடம் தேடி வந்த இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகப் போலி ஆவணங்களைத் தயார் செய்து அவர்களை விடுதலைப் புலிகள் என்று முத்திரை குத்திவிட்டனர். ஆனால் ஆவணங்கள் இருந்தால் மட்டுமே எங்களால் குறுக்கு விசாரணை செய்ய முடியும் - என்று கூறினார்.

## இந்தியச் செய்திகள்

### இணையத்தளத்தில் எந்திரன்; அதிர்ச்சியில் தியேட்டர் அதிபர்கள்

சென்னை,ஒக்.8

இணையதளத்தில் எந்திரன் திரைப்படம் தெளிவான காட்சிகளாக வெளியாகி இருப்பதால் பல திரையரங்கு அதிபர்கள் அதிர்ச்சியில் ஆழ்ந்திருக்கிறார்கள்.

பல லட்ச ரூபாய் கொடுத்து தங்கள் தியேட்டர்களில் இந்தப் படத்தைத்திரையிட்டுள்ளதியேட்டர் அதிபர்கள் படம் வெளியாகி ஒரு வாரமே ஆகியிருக்கும் நிலையில் எந்திரன் திரைப்படத்தால் பெருத்த நஷ்டம் ஏற்பட்டு விடுமோ என்று பயப்படுவதாகவும் கூறப்படுகிறது.

30 நாள் ஓட வேண்டிய படம் மூன்றே நாளில் வரவேற்பை இழந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. (ற)



இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள விஜயதசமி பூஜைக்கான சிலைகளை ஹைதராபாத்தில் தயார் செய்யும் இறுதிப்பணிகள்.

# அயோத்தி விவகாரத்தில் மத்திய அரசு தலையிடத் தேவையில்லை - சிபல்

புதுடில்லி,ஒக்.8

அயோத்தி விவகாரம் தனிப்பட்டவர்களின் விவகாரம். அதில் மத்திய அரசு தலையிட வேண்டியதில்லை. பேச்சுவார்த்தை என்பது சம்பந்தப்பட்டவர்கள் தொடர்புடைய விடயம் என மத்திய மனித வளத்துறை அமைச்சர் கபல் சிபல் கருத்து தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் செயற்குழு விடுத்த அறிக்கையில் அயோத்தி விவகாரத்தில் அலகாபாத் தீர்ப்பை காங்கிரஸ் வரவேற்கிறது. பிரச்சினையை சுமுகமான முறையில் பேசித் தீர்த் துக் கொள்வதை கட்சி வரவேற் கிறது என்று கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில் செய்தியாளர்களுக்கு நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில் கபல் சிபல் கூறியதாவது:-

அயோத்தி விவகாரத்தில் மத்திய அரசுக்கு வேலையில்லை. அது தனிப்பட்டவர்கள் தீர்த்துக் கொள்ள வேண்டியது என்ற நிலையை மத்திய அரசு தெளிவாக எடுத்துக் கொள்ளலாம். தனிப்பட்ட ஒரு விவகாரத்தில் அரசு ஏன் தலையிட வேண்டும்? சம்பவம் நடந்த 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் சொத்துரிமை விவகாரங்கள் குறித்த சட்டங்கள் எப்படி இருந்தன? உரிமையாளர்கள் தங்கள் உரிமையை நிலை நாட்ட சட்டப்படி அறிவுரைக்கப்பட்டவை என்ன? என்பது போன்ற கேள்விகள் உள்ளன. இவற்றை உயர் நீதிமன்றம் பார்த்துக் கொள்ளும் என்று நம்புகிறேன். இந்த பிரச்சினை மிகவும் சிக்கலானது. அலகாபாத் உயர் நீதிமன்றத் தீர்ப்பை மிகவும் கவனத்துடன் ஆராய்ந்து அரசியல் சாசன ரீதியாக உயர் நீதிமன்றம் ஒரு தீர்வுக்கு வரவேண்டும். அதற்காக அது நீண்ட காலம் கூட எடுத்துக் கொள்ளலாம். (ற)

# பிரதமர் மன்மோகனுக்கு திறமை அதிகம் : ராகுல் பாராட்டு



பிரதமர் மன்மோகன் சிங் என்னை விட மிக மிகத் திறமையானவர். அவர் தன் பணியை சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார். இளைஞர் காங்கிரஸை, தேசிய மாணவர் காங் கிரஸை பலப்படுத்துவதே எனது பொறுப்பு. அதை நான் செய்து கொண்டிருக்கிறேன் என காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுல் தெரிவித் துள்ளார்.

பிரதமர் பதவியை ராகுல் அடையலாம் என்று தொடர்ந்து பேசப்படுவதற்குப் பதிலாக சாமர்த்தி யமாக நழுவல் பதிலளித்தார்.

மத்திய பிரதேச மாநிலம் போபாலில் நிருபர்களிடம் பேசிய ராகுல் கூறியதாவது

நாம் மிகவும் திறமையான பிரதமரை கொண்டி ருக்கிறோம். அவர் என்னை விட மிகமிக திறமை யானவர். அவர் தன் பணியை சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார். இளைஞர் காங்கிரஸை மாண வர் காங்கிரஸை பலப்படுத்துவதே எனது பணி. அதை செய்துகொண்டிருக்கிறேன்.

காங்கிரஸ் கட்சி என்பது ஒரு வெளிப்படையான அமைப்பு. இந்த அமைப்பில் ஒரு குறிப்பட்ட அளவு வரை விவாதத்திற்கு இடமுண்டு. அந்த விவாதங்கள் கட்சியின் வெற்றி வாய்ப்பை பாதிக்கும் போது தான் பிரச்னை வருகிறது. அத னால் ஒரு எல்லைக்கோடு வரைந்து அதற் கேற்ப செயற்பட வேண்டும். இருந் தாலும் காங் கிரஸ் கட்சியின் பொறுப்பு என்னுடை யது அல்ல.



அயோத்தி யில் சர்ச்சைக்குரிய கட்டடம் இடிபட யார் காரணமோ, அவர் களைத் தப்பிக்க விடக் கூடாது. இந்த மண்ணின் சட்டப்படி அவர்கள் தண்டிக்கப் படவேண்டும். விதி யின் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. கடின உழைப்பையே நான் நம்புகிறேன். கடின உழைப்புக்கு ஈடு இணை எதுவும் இல்லை. கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்புடன் பணி யாற்றினால் நாம் முன்னேற முடியும். - இவ்வாறு ராகுல் கூறினார். (ற)

# தி.மு.க., காங்கிரஸுக்கு எதிராக அனைத்து கட்சிகளையும் ஓரணியில் திரட்ட முடிவு

சென்னை,ஒக்.1

தமிழகத்தில் தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணிக்கு எதிராக உள்ள அனைத்து கட்சிகளையும் ஓரணியில் திரட்டுவோம் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய செயலர் ஏ.ப. பரதன் மாநில செயலர் தா.பாண்டியன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியின் போது தெரிவித்ததாவது:-

கடந்த 60 ஆண்டுகளாக நடைபெற்று வந்த அயோத்தி வழக்கில் சமீபத்தில் தீர்ப்பு கூறப்பட்டது. பெரும்பான்மை மக்களின் நம்பிக்கை அடிப்படையில் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆவணங்களின் அடிப்படையில் வழங்கப்படவில்லை. இதனால் ஒரு பிரிவினருக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை மேல்முறையீடு செய்யும் போது நல்ல முடிவு ஏற்படலாம். தமிழ கத்தில் தி.மு.க., - காங்கிரசை வீழ்த்துவதற்கு எண்ணமுள்ள அனைத்து கட்சிகளையும் ஒருங் கிணைக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தயாராக உள்ளது. நெய்வேலி ஒப்பந்தத் தொழிலாளர்கள் போராட்டத்தில் உடனடியாக அரசு தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். (ற)

# ஏ.ஆர்.ரஹ்மானுக்கு இந்திரா காந்தி விருது

டில்லி,ஒக்.8

இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானுக்கும், சத்தீஸ்கர் மாநிலம், இராமகிருஷ்ண மடத்தின் நாராயண்பூர் கிளைக்கும் 2009 ஆம் ஆண்டுக்கான இந்திரா காந்தி விருது வழங்கப்பட உள்ளது.

தேசிய ஒருமைப்பாட்டுக்கு சிறப்பான பங்காற்றியவர்களைக் கௌரவிப்பதற்காக கட்சியின் நூற்றாண்டில் (1985) இந்த விருதை காங்கிரஸ் கட்சி நிறுவியது.

இந்திரா காந்தியின் நினைவு தினமான ஒக்ரோபர் 31இல் டில்லியில் நடைபெறும் விழாவில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி இந்த விருதை வழங்குவார்.

பாராட்டுப் பத்திரமும், 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் இந்த விருதில் அடங்கும்.

ராஜீவ் காந்தி (மறைந்த பின்), பஞ்சாப் முன்னாள் முதல்வர் பியாந்த் சிங், குடியரசு முன்னாள் தலைவர்கள் அப்துல் கலாம், சங்கர் தயாள் சர்மா, திரைப்பட இயக்குநர் ஷியாம் பெனகல், பாடலாசிரியர் ஜாவேத் அக்தர், எழுத்தாளர் மகாஸ்வேதா தேவி ஆகியோர் ஏற்கனவே இந்த விருதைப் பெற்றுள்ளனர்.

# 'சிமி'யுடன் ஒப்பிடுவதா? ராகுல் மீது பா.ஜ.க., பாய்ச்சல்

போபால்,ஒக்.8

தடை செய்யப்பட்ட சிமி அமைப்புடன் ஆர்.எஸ்.எஸ். அமைப்பை ஒப்பிட்டுப் பேசிய காங்கிரஸ் பொதுச் செயலர் ராகுலுக்கு பாரதிய ஜனதா கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. ராகுலின் விமர்சனம் தேச அபிமானத்தின் மீதான தாக்குதல் என்றும் கூறியுள்ளது.

மத்திய பிரதேச பா.ஜ. தலைவர் பரபாத் ஜா கூறியதாவது:

ஆர்.எஸ்.எஸ். அமைப்பையும் 'சிமி' அமைப்பையும் ராகுல் ஒப்பட்டுப் பேசியது தேசியத்தின் தேச அபிமானத்தின் மீதான தாக்குதல். ஆர்.எஸ்.எஸ். ஒரு உண்மையான தேசியவாத அமைப்பு என்பதை ஒவ்வொருவரும் நன்கறிவர். சிமி யோ தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பு. ராகுலின் அறிவுக்கூர்மையை அளவிட என்னிடம் அளவுகோல் எதுவும் இல்லை. துதி பாடிகளுக்கு இளைஞர் காங்கிரஸில் இடமில்லை. அவர்கள் பா.ஜ.க.வில் சேரலாம் என ராகுல் கூறியுள்ளார். பரம்பரை பரம்பரையாக நிர்வகிக்கப்படும் கட்சி எது ஜனநாயக ரீதியாக செயல்படும் கட்சி எது என்பதை மக்கள் நன்கறிவர். ராகுலின் அறிக்கை காங்கிரஸின் நோயாளி மனோபாவத்தை காட்டுகிறது என்றார். (ற)

# 16 வயது பையனுக்கு குடும்பக் கட்டுப்பாடு!

ராஞ்சி,ஒக்.8

ஜார்கண்ட் மாநிலத்தில் 16 வயது சிறுவனுக்கு குடும்ப கட்டுப்பாடு செய்த கொடுமை அம்பலமாகியுள்ளது.

ராஞ்சி அருகேயுள்ள சுகுர்ஹுட் கிராமத்தைச் சேர்ந்தவர் பவன் நாயக் (16). இவர் உடல்நலக் குறைவு காரணமாக அவதிப்பட்டுள்ளார். இவரை பக்கத்து வீட்டுக்காரர் ராஞ்சியில் உள்ள கான்கே ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றுள்ளார். அப்போது, அங்கு இருந்த சுகாதார நிலைய ஊழியர் பவன் நாயக்கிற்கு சிகிச்சையளித்து மருந்து மாத்திரைகளை எழுதிக் கொடுத்துள்ளார். அப்போது அவரிடம் காகிதம் ஒன்றில் கையெழுத்து வாங்கிக் கொண்டனர்.

இந்நிலையில் சமீபத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பவன் கையெழுத்து போட்டு கொடுத்த காகிதம் அக்கம் பக்கத்தினர் கையில் கிடைத்தது. அதில் பவனுக்கு குடும்ப கட்டுப்பாடு செய்யப்பட்ட விடயம் அம்பலமானது. இதில், அவருக்கு வயது 28 எனவும் மனைவி மற்றும் இரண்டு குழந்தைக்கு தந்தை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதையறிந்த பவன் அதிர்ச்சியில் உறைந்துள்ளார்

மேலும் பக்கத்து வீட்டுக்காரர் அரசாங்கம் கொடுக்கும் பணத்திற்கு ஆசைப்பட்டு இந்த கொடுமையை நயவஞ்சகமாக செய்ததையும் தெரிந்து கொண்டார். உடனடியாக அருகிலிருந்த அரசு மருத்துவமனை டாக்டர்களிடம் சென்று நடந்தவற்றை கூறியுள்ளார். அதில் பவனுக்கு குடும்ப கட்டுப்பாடு செய்யப்பட்டது உறுதியானது. அது தற்காலிக குடும்ப கட்டுப்பாடு செய்ததால் அவருக்கு குழந்தை பெற்றுக் கொள்ள வாய்ப்புள்ளதாக தெரிவித்துள்ளனர்.(ற)

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அவசரகாலச் சட்டத்தின் தேவைகள் பலப்பல...

உலகிலேயே பல விடயங்களில் சாதனை நிலை நாட்டும் ''பெருமைக்கு'' உரியதாக எமது இலங்கை இப்போது மிளிரத் தொடங்கி உள்ளது; அந்தப் பட்டியல் நீண்டு வருகிறது. மெச்சத்தக்க ஆக்கபூர்வமான விடயங்களைவிட கண்டனத்துக்குரிய பல விடயங்களே அந்தப் பட்டியலில் கூடுதல் இடத்தைப் பிடித்துள்ளன. அந்த வகையில் ஆகப் பிந்தி இடம்பெற்று இருப்பது சட்ட விரோதச் சிறைச்சாலைகளின் எண்ணிக்கை.

சர்வதேச மட்டத்தில், அதிக சட்ட விரோதச் சிறைச்சாலைகளைக் கொண்ட நாடு இலங்கை என்று சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அந்தச் சட்டவிரோதச் சிறைச்சாலைகளில் சுமார் எண்ணாயிரம் (8,000) அரசியல் கைதிகள் சட்டத்துக்கு விரோதமான விதத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அதாவது, சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படாத நிலையிலும், நீதிமன்றத்தின் பிடியாணை எதுவும் இன்றியும் குறிப்பிட்ட 8,000 பேர்களையும் சிறைகளில் தடுத்து வைத்திருப்பதாக சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு பகிரங்கப்படுத்தியுள்ளது.

இவர்கள் அனைவரும் தமிழ் இளைஞர்கள். இவர்கள் தடுத்து வைக்கப்பட்டு இருப்பதற்கு, சட்டரீதியான ஏற்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை. குற்றம் சாட்டப்பட்டவர்களாகவோ, சந்தேக நபர்களாகவோ நீதிமன்றம் எதிலும் முன்னிலைப்படுத்தப்படாமல், பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்று வெறுமனே தெரிவித்து அடைத்து வைக்கப்பட்டு உள்ளவர்களே இவர்கள்.

இத்தகைய தகவல்களை சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு ஆதாரங்களுடன் தனது அறிக்கையில் வெளிப்படுத்தியிருக்கிறது.

இங்கே கொழும்பில், ஜனநாயகத்துக்கான பல்கலைக்கழக விரிவுரையாளர் அமைப்பு நடத்திய செய்தியாளர் மாநாட்டில், அதன் அங்கத்தவர்களில் ஒருவரான பேராசிரியர் குமார் டேவிட் இந்த விவரங்களைத் தெரிவித்திருக்கிறார்.

இவ்வாறு சட்டவிரோதமான முறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளில், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நன்கு அறியப்பட்டவர் என்றும்-

அவரைப் போன்று ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டு இருக்கின்றனர் என்றும் பேராசிரியர் குமார் டேவிட் எடுத்துக் காட்டி உள்ளார்.

அரசாங்கம் மாதாந்தம் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதும், அதன் கீழ் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நடைமுறையில் வைத்திருப்பதும் இத்தகைய ஜனநாயகவிரோத, சர்வாதிகாரத்தனமான ஏற்பாடுகளுக்கே என்பதனை இப்பத்தியில் நாம் பல தடவைகள் சுட்டிக் காட்டி உள்ளோம்.

குறிப்பிட்ட 8,000 தமிழ் இளைஞர்களும் விடுதலைப்புலிச் சந்தேக நபர்கள் என்றும், அவர்கள் எங்கே தங்க வைக்கப்பட்டு உள்ளனர் என்ற விவரத்தையோ அல்லது அவர்களின் பெயர் விவரங்களையோ வெளியிட முடியாது என்றும் அரச தரப்பு அடம் பிடித்து வருகிறது.

அதுமட்டுமன்றி இறுதிப் போரின் பின்னர் இராணுவத்திடம் சரண் அடைந்த ஆயிரக்கணக்கான தமிழர்கள், இளைஞர்கள், வயதானவர்களின் நிலையை அரசாங்கம் மூடு மந்திரமாக வைத்திருக்கிறது.

போர் முடிவுக்கு வந்து பதினைந்து மாதங்களுக்கு மேலாகிவிட்டது. பயங்கரவாதத்தை நாட்டில் இருந்து பூண்டோடு அழித்து விட்டதாக அரசு வெற்றிவிழாக்கள் வைத்துக் குதூகலித்தும் பல மாதங்கள் ஆகிவிட்டன.

இதற்கிடையில் அமைச்சர்களும், பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளும் இராணுவத் தரப்பின் முக்கியஸ்தர்களும் நாட்டுக்கு இன்னமும் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாகவும் அடிக்கடி திருவாய் மொழிந்து வருகிறார்கள்.

அதற்கான ஆதரங்கள் உண்டோ இல்லையோ என்பதனை மக்கள் அறியார். ஆனால் மேற்கூறியவர்களின் கூற்றுக்களை ஆதாரமாக வைத்து, நாடாளுமன்றத்தில் பிரதமர் மற்றும் மத்திரிப் பிரதானிகள் அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதன் அத்தியாவசியத்தை தர்க்க ரீதியாகவும், புனுகு பூசியும் கமகமக்கப் பேசுகிறார்கள்.

அங்கு எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் பாவம். அரசாங்கத்துக்கு உள்ள அதீத பெரும்பான்மையால் மாதாந்தம் அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்படுகிறது.

சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டிய சட்டவிரோதச் சிறைச்சாலைகள், புனர்வாழ்வு முகாம்கள் என்ற பெயரில் மூளைச்சலவை செய்யப்படும் நிலையங்கள், அரசுக்கு எதிராக ஜனநாயக ரீதியில் போராடுபவர்களைச் சிறைக்கம்பி எண்ண வைத்தல், சட்டவிரோதக் கைதிகள் எனத் தடுத்து வைத்தல் போன்ற காரியங்களை நியாயப்படுத்துவதற்காகவே அவசரகாலச் சட்டத்தையும் (அதன் பால் கிளைவிடும் பயங்கரவாதச் சட்டத்தையும்) தக்க வைப்பதற்கான தந்திரோபாயமே இது என்று கொள்வதில் தப்புண்டோ? எல்லாமே கம்பளத்தின் கீழ் விடப்படும் நச்சுப்பாம்புகளே. மக்கள் நலன் நாடாத ஏற்பாடுகளே!

# யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணத்துக்கு ஒரு கோடி யூரோவை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானம்

கொழும்பு,ஒக்.8

இலங்கைக்கு ஒரு கோடி யூரோவை வழங்க ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு இந்த நிதி பயன்படும் என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த பல குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்ட போதிலும், பல்வேறு நெருக்கடி நிலைமைகளை எதிர்நோக்கி வருகின்றன எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

குறிப்பாக தங்குமிடம் மற்றும் நிலக்கண்ணிவெடி ஆகிய பிரச்சினைகளை இடம்பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர் என ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் இலங்கைக்கான மனிதாபிமான உதவியாக ஒரு கோடியே முப்பது லட்சம் யூரோ ஒதுக்கீடு செய்யப்பட்டதாக ஒன்றியத்தின் மனிதாபிமான உதவி மற்றும் சிவில் பாதுகாப்பு ஆணையாளர் கிறிஸ்டினா ஜோர்ஜியா தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களுக்குத் தொடர்ச்சியாக உதவிகளை வழங்கும் நோக்கில் ஐரோப்பிய ஒன்றியம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ள போதிலும், இன்னமும் பெரியளவில் முன்னேற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் -

தங்குமிடம், உணவு, சுகாதாரம், குடிதண்ணீர் போன்ற தேவைகளை பூர்த்தி செய்வதற்கு சர்வதேச தொண்டு நிறுவனங்கள் உதவிகளை வழங்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தி உள்ளார்.

2007ஆம் ஆண்டு முதல் இதுவரையில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கான மனிதாபிமான உதவியாக 5 கோடியே 80 லட்சம் யூரோவை வழங்கியுள்ளது. (சி)

# கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதிகளை மீண்டும் பரிசோதித்து உறுதிப்படுத்துக

## யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.8

வலிகாமம் உயர் பாதுகாப்பு வலயப்பகுதிகளில் கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்களில் மீண்டும் ஒருமுறை அவற்றை பரிசோதித்து உறுதிப் படுத்தி ஒரு வார காலத்தினுள் கண்ணிவெடி அகற்றப்பட்டமைக்கான சான்றிதழை மீள உறுதிப்படுத்தித் தருமாறு மிதிவெடி அகற்றும் நிறுவனங்களிடம் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

வலிகாமம் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் மக்களை மீள் குடியேற்றுவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று பலாலி இராணுவத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போது மேற்கண்டவாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

பலாலி இராணுவ முகாம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மக்களை படிப்படியாக மீள்குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன. அதற்காகப் பின்வரும் பிரதேசங்களில் ஒரு வார காலப்பகுதியினுள் கண்ணி வெடி அகற்றப்பட்டமைக்கான சான்றி தழை மீள உறுதிப்படுத்தித் தருமாறு 'ஹலோ ட்ரஸ்ட், டெனிஷ்' இராணுவ கண்ணிவெடி அகற்றும் பிரிவு ஆகியவற்றைக் கட்டளைத் தளபதி கோரியுள்ளார்.

கட்டுவனின் ஒரு பகுதி (ஜே/239), தெல்லிப்பழை (ஜே/228), துர்காபுரம் ஒரு பகுதி (ஜே/229), வித்தகபுரம் ஒரு பகுதி (ஜே/223), இளவாலை வடக்கு மேற்கு (ஜே/222) ,மாவிட்டபுரம் தெற்கு (ஜே/ 232), மாவிட்டபுரம் (ஜே/231), கொல்லங்கலட்டி (ஜே/225), நகுலேஸ்வரம் (ஜே/236), தந்தை செல்வாபுரம் ஆகிய பகுதிகளே முதற்கட்டமாக கண்ணிவெடி அகற்றபட்டதை மீண்டும் உறுதிப்படுத்துமாறு கோரப்பட்ட பிரதேசங்களாகும்.

இந்தக் கலந்துரையாடலில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-201-15)

# வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோருக்கு மூன்று மாத நிவாரணம் வழங்கப்படவில்லை

## வறுமையான குடும்பங்கள் இக்கட்டு நிலையில்

சண்டிலிப்பாய்,ஒக்.8

வலி.வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் வாழ்ந்து வரும் மக்களுக்கு கடந்த 3 மாதங்களுக்குரிய நிவாரணம் வழங்கப்படவில்லை. இதனால் நிவாரணத்தை நம்பியே வாழும் குடும்பங்கள் உணவின்றிக் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வலி.வடக்கிலிருந்து கடந்த இருபது வருடங்களுக்கு முன் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றரர்கள். தொழிலின்றி, வருமானமின்றி நிவாரணத்தை நம்பி வாழ்ந்துவரும் குடும்பங்களுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படாமையால் அவர்கள் வாழ்க்கை நடத்த முடியாமல் திண்டாடுகிறார்கள்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள இந்த நேரத்தில் நிவாரணம் வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதம் அவர்களை மேலும் பாதிப்புக்கு உள்ளாக்கியுள்ளது.

கணனி மயப்படுத்தப்படுவதாகக் கூறி இடம்பெயர்ந்த மக்களின் பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு செய்யப்பட்டு இருமாதங்களுக்கு மேலாகியும் நிவாரணம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

(த-115)

# இந்தியாவில் மேலும் ஒரு புதிய மொழி; ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பு

புதுடில்லி,ஒக்.8

வடகிழக்கு இந்தியாவில் ஒரு புதிய மற்றும் தனித்துவமான மொழி புழக்கத்தில் இருப்பது கண்டுபிடிக் கப்பட்டிருப்பதாக மொழியயிலாளர்கள் குழுவொன்று அறிவித்துள்ளது.

'கோரோ' என்றழைக்கப்படும் இம்மொழி வேகமாக அழிந்து வருவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

திபெத் - பர்மிய மொழியாகக் கருதப்படும் இம்மொழியைப் பேசுபவர்கள் சுமார் 800 பேர் மட்டுமே இருப்பதாகவும் இவர்களில் சிலர் 20 வயதுக்கு குறைந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய புவிகற்பவியல் மற்றும் குரல் வகை ஆய்வில் ஈடுபட்டிருக்கும் குழுவினரே இப்புதிய மொழியொன்று புழக்கத்தில் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர். (ப)

## நாளை

| | | |
|---|---|---|
| புரட்டாதி 23 | | 09.10.2010 சனிக்கிழமை |
| திதி: | : | துதியை மு.இ 09.12 வரை |
| நட்சத்திரம் | : | துவாதி பி.இ. 04.27 வரை |
| சுபநேரம் | : | 03.02-04.32 வரை |
| ராகுகாலம் | : | 09.02-10.32 வரை |

# நவாலி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 8

நவாலி மகா வித்தியாலய நூற்றாண்டு விழாவின் முதலாம் நாள் நிகழ்வு பாடசாலை முதல்வர் இரா. வசந்தகுமார் தலைமையில் நாளை சனிக்கிழமை நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொண்டு பாடசாலையின் புதிய இரு மாடிக் கட்டடத்தைத் திறந்து வைப்பதுடன் நிறுவுநர் சிலைக்கு மாலை அணிவித்து கௌரவிப்பார்.

சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவமும் கௌரவ விருந்தினர்களாக சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி, பொருளியல்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ.சந்திரசேகரம், சண்டிலிப்பாய் ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.தனபாலசிங்கம், சுழிபுரம் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

வாழ்த்துரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும், நிறுவுநர் உரையியை கொமர்ஷல் வங்கியின் முன்னாள் முகாமையாளர் ச.ரவீந்திராவும் வழங்குவர்.

இரண்டாம் நாள் நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும். இதில் மலர் வெளியீடும், கலைநிகழ்வும் இடம்பெறும்.

அதிபர் இரா.வசந்தகுமார் தலைமையில் இடம்பெறும் நிகழ்வுக்கு முன்னாள் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் கொமர்ஷல் வங்கி முகாமையாளர் ச.ரவீந்திராவும், கௌரவ விருந்தினராக நவாலி மகா வித்தியாலய முன்னாள் அதிபர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன், ஓய்வுபெற்ற உப அதிபர் திருமதி திரேஷா ஹென்றி, க.கௌரிகாந்தன் ஆகியோர் கலந்துகொள்வர்.

நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீட்டுரையை முகாமைத்து வக்கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா வழங்குவார். சிறப்புப் பிரதியினை முன்னாள் அதிபர் திருமதி சி.விஸ்வலிங்கம் பெறுவார். மலர் ஆய்வுரையினை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை இளைப்பாறிய உப அதிபர் நா.பாலகிருஷ்ணன் வழங்குவார்.

(த-302)

## கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 8

நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த கட்டட ஒப்பந்தகாரர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று மேலதிக மகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரட்ணம் அறிவித்துள்ளார். (ஒ-ஐ)


### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
03.02.1934
விண்ணில்
06.10.2007

திருமதி
சரஸ்வதி சம்பந்தசரணாலயம்

ஆண்டுகள் மூன்றானாலும்
அம்மா உனை மறக்கமுடியவில்லை
இப்புவியில் எங்களுயிர் நீதானே

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இணுவில்.


# யாழ்.ஆஸ்பத்திரி கடமைக்கு வந்த பரிசாரகருக்கு பொல்லடி; சங்கிலி அபேஸ்

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ்.போதனா வைத்தியசாலைப் பரிசாரகர் ஒருவர் வேலைக்கு வந்துகொண்டிருந்த போது வழிமறித்த முகமூடி அணிந்த இருவர் அவரை பொல்லால் தாக்கி அவரின் சங்கிலி, மோதிரம் ஆகியவற்றை அபகரித்துள்ளனர்.

அல்வாய் வடக்கைச் சேர்ந்த எஸ்.அருந்ததவராசா (வயது 50) என்பவரே தாக்குதலுக்கு உள்ளானவர் ஆவார்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது:-

பிரஸ்தாப பரிசாரகர் மோட்டார் சைக்கிளில் நேற்று அதிகாலை 4 மணிக்கு வீட்டிலிருந்து வேலைக் குப் புறப்பட்டார்.

அல்வாய் வேவிலந்தை அம்மன் கோயிலுக்கு பின்பக்கமாக வந்துகொண்டிருந்த போது, அவரை முகமூடி அணிந்த இருவர் மறித்தனர். கையில் வைத்திருந்த பொல்லால் தாக்கினர்.

கீழே விழுந்த அவர்வசம் இருந்த 3 பவுண் சங்கிலி, மோதிரம் ஆகியவற்றை அபகரித்துக்கொண்டு இருவரும் தப்பி ஓடிவிட்டனர்.

தலையில் படுகாயம் அடைந்த அவர் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-ஐ-78)

## முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு

மானிப்பாய்,ஒக்.8

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் 85 பேர் பிரதேச சபையால் கௌரவிக்கப்பட்டனர்.

முன்பள்ளி கல்விச் சேவையில் ஈடுபட்டுவரும் ஆசிரியர்களுக்கு பிரதேசசபை செயலாளர் சு.புத்திசிகாமணி பரிசில் வழங்கி கௌரவித்துள்ளார். இந்த நிகழ்வில் முன்பள்ளி சிறார்கள் உட்படபலர் கலந்துகொண்டனர். (ஒ-302)


### வெளிவிவகார அமைச்சு
### இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
### யாழ். மாவட்ட பயிற்சிக் காரியாலயம்

## காரியாலய இடம் தேவை

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் யாழ்.மாவட்ட பயிற்சி நிலையத்திற்காக அவசரமாக பொருத்தமான வீடு/ கட்டடம் அண்ணளவாக 4,000-7,000 சதுர அடி விஸ்தீரணமான இடமொன்றை வாடகைக்கு/குத்தகைக்கு எதிர்பார்க்கின்றது. நகர எல்லைக்குள் அல்லது நகரத்திலிருந்து 3 கி.மீ. க்குள் இருப்பது விரும்பத்தக்கது.

### காரியாலய வசதிகள்

* காரியாலய பொறுப்பதிகாரிக்கான அறை
* ஏனைய பணியாளர்கள், காரியாலய உபகரணங்களுக்கான அறை
* களஞ்சிய அறை
* இணைந்த மலசல கூடங்கள் (பணியாளர்களின் பாவனைக்கு)

### பயிற்சி நிலையத்திற்கென எதிர்பார்க்கப்படும் வசதிகள்

1. ஆறு பயிற்சி வகுப்புக்கள் நடத்துவதற்கான அறைகள்
2. குறைந்தது 50 பயிற்சியாளர்களை கொள்ளக்கூடிய விரிவுரை மண்டபம்
3. நவீன வரவேற்பறை
4. நவீன சாப்பாட்டறை
5. பயிற்சியாளர்களுக்கான மலசலகூடம், வடிகால் அமைப்பு
6. ரைல் (Tile) பதித்த நிலம், உள்சீற் அடித்த கூரை
7. பயிற்சியாளர்கள் உடற்பயிற்சிக்கான திறந்த வெளி
8. நவீன படுக்கை அறை, நவீன குளியலறையுடன்

### அவசியமான ஏனையவை

1. கட்டடம்/வீடு 6 அடி சுவரினால் சூழப்பட்டதாயும் பாதுகாப்பான கதவினையும் கொண்டிருத்தல்
2. கட்டடம் பிரதான வீதிக்கு அண்மையிலும் ஆகக் குறைந்தது 2 வாகனங்களை நிறுத்தக்கூடிய வசதியை கொண்டிருத்தல் வேண்டும்.
3. 3 தள மின்சார வசதி, சரியான தண்ணீர் வசதி,
4. குழாய் நீருடன் உயரமான தண்ணீர் தாங்கி
5. தொலைபேசி வசதி

தயவுசெய்து உங்களுடைய விலைப் பட்டியலை (Quatation) கட்டடம் பற்றிய விபரங்களுடன் அலுவலக பொறுப்பதிகாரி, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், மாவட்ட காரியாலயம், 61/6, குறுக்குவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாக காரியாலயத்திற்கு வந்து (14.10.2010 அன்று 10.30 இற்கு முன்னர்) ஒப்பந்த பெட்டியில் இடுவதன் மூலமாகவோ சமர்ப்பிக்க முடியும்.

விவரங்களுக்கு காரியாலய தொலைபேசியூடாக தொடர்புகொள்வதன் மூலமாகவோ(0212229302) அல்லது 0773265788 இல் தொடர்புகொள்வதனூடாக பெற்றுக்கொள்ளமுடியும்.

(குறிப்பு: மாத வாடகை அரசாங்க மதிப்பீட்டு திணைக்கள தலைவரினால் முடிவுசெய்யப்பட்டதே இறுதியானதாகும்)

தலைவர்:
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
இல.234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, கொஸ்வத்த,பத்தரமுல்ல.
தொ.பே: தொ.நகல்: 0112880550/0112864132
web site:www.slbfe.lk

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
மாவட்ட பயிற்சி நிலையம்,
இல.61/6, குறுக்குவீதி,
நல்லூர். யாழ்ப்பாணம்.
021 222 9302


## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 531
சீட்டிழுப்பு திகதி: 06.10.2010

வெற்றி எழுத்து: V
வெற்றி இலக்கங்கள்: 05 23 42 53

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரு.10,549,308.80 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 1,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 50,000/- | 11 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 2,000/- | 222 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரு. 1,000/- | 444 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 100/- | 11266 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரு. 40/- | 6527 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 162993 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரு. 20/- | 26023 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரு. 7,606,000.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அழை : 2470662, 2470663
தேவைக்கு: 4607000, 2433631

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரு.10,739,456.00


## சேவை நலன் பாராட்டு



### திரு.நாகநாதன் மகாநாதன்

(J.P., All Island) (SLTS - 1, Maths Trained ),
ஆசிரிய ஆலோசகர் (கணிதம்)
யாழ்ப்பாணக் கல்வி வலயம்.

**சேவை விவரம்**

★ நு/ இறம்பொடை தமிழ் ம.வி 02.06.1977 - 31.12.1980 (ஆசிரியர்)
★ யா/ பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரி 01.01.1981 - 31.06.1982 (ஆசிரியபயிற்சி)
★ கிளி/ கனகபுரம் தமிழ் ம.வி - 01.07.1982 - 31.04.1986 (ஆசிரியர்)
★ யா/ கோண்டாவில் இராமகிருஸ்ண ம.வி - 01.05.1986 - 06.09.1992 (ஆசிரியர்)
★ யா/ வைத்தீஸ்வரா கல்லூரி - 07.09.1992 - 04.10.1994 (ஆசிரியர்)
★ யாழ்ப்பாணக் கல்வி வலயம் - 05.10.1994 - 07.10.2010 (ஆசிரிய ஆலோசகர்)

17ஆண்டுகள் ஆசிரியராகவும் 16 ஆண்டுகள் கணித பாட ஆசிரிய ஆலோசகராகவும் கல்விப்பணியைச் சிறப்பாக ஆற்றி இன்றுடன் (08.10.2010) ஓய்வு பெறும் திரு.நா. மகாநாதன் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரின் எதிகால வாழ்க்கை வளமுடன் அமைய மனதார வாழ்த்துகின்றோம்.

கணித ஆசிரியர் சமூகம்,
யாழ். கல்வி வலயம்.

(104366)



25 ஆவது வருடம்
உதயன்
வெள்ளிவிழாவை முன்னிட்டு

## மின்னல் வேக கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி



உதயன் நிறுவனம் தனது வெள்ளிவிழாவையொட்டி யாழ்.மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையே ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது இதில் பங்குகொள்ள விரும்பும் கழகங்கள் தமது அணியில் கலந்துகொள்ளும் வீரர்களின்/ வீராங்கனைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு 07.10.2010 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பங்களை உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

# பொன்னாலை கடல்வள நிறுவனத்தின் புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பம்

## எந்திரி இராமச்சந்திரன் தகவல்

யாழ்ப்பாணம்,ஒக்.8

கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் செயற்பட்டு வந்து, போர் காரணமாக இயங்காதிருந்த பொன்னாலை கடல்வளம் நிறுவனம் புனரமைக்கப்படவுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் பொருளாதார அபிவிருத்தி நிபுணர் எந்திரி ஆர்.ரி.இராமச்சந்திரன்-

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கடல்வளம் நிறுவனத்துடன் தொடர்புடையவர் அனைவரும் விரைவில் ஒன்று சேர வேண்டும்.

பொன்னாலையில் இயங்கிய மேற்படி கடல்வள நிறுவனம் வடக்கு மாகாண மீனவர்களின் சொத்தாக இயங்கியது.

போர் உக்கிரமடைந்ததால் கடல்வள நிறுவனமும் அழிந்தது.

இதனால் இறால் பதனிடும் தொழிற்சாலைச் செயற்பாடுகள் முற்றாக அழிவடைந்தன. இந்நிறுவனத்துக்கான நிலமும், வங்கிக் கணக்கும், நிலையான வைப்பும் தற்போதுள்ளன.

மீண்டும் கடல்வள நிறுவனச் செயற்பாட்டை மேற்கொள்ளுமாறு வடக்கு மாகாண ஆளுநர் கேட்டுள்ளார்.

எனவே மீண்டும் இயங்கும் போது அதற்காக செயற்பட்டவர்களை மீண்டும் இணைக்கவுள்ளோம். 1983 இல் வடக்கு, கிழக்கில் 40 வீதமாயிருந்த மீன் உற்பத்தி, 2009 வரை 0.5 வீதமாக இருந்தது. இவ்வருடம் 7 வீத வடக்கு, கிழக்கில் இருந்து கூடுகிறது. எதிர்வரும் காலங்களில் வடக்கு - கிழக்கு 35வீதமாக மாற வேண் டும். இதற்காக அனைத்து கரையோரப் பிரதேச மீன்பிடித் துறைகளும் மாற்றம் பெறவேண்டும்.

இன்று ஜப்பான் - சீனா- இந்தியா ஆகிய நாடுகள் எமது வடக்கு- கிழக்கு கடற்பிரதேசங்களை ஆக்கிரமித்துள்ளன.

நாம் தற்போது சிறுவள்ளங்களையும் படகுகளையுமே பயன்படுத்துகின்றோம்.

ஆழ்கடல் மீன் வள்ளங்களை நாம் விரைவில் அறிமுகப்படுத்தி வடக்கு- கிழக்கு மீன்பிடித் துறையை வளர்த்து அபிவிருத்தி செய்ய வேண்டும்.

மேற்கூறப்பட்ட விடயங்களை 2015 இற்குள் நிறைவேற்ற மீன்பிடித் துறைக்கு உதவ முன்வரும் சர்வதேச நிறுவனங்களும் சிறிய வள்ளங்களைத் தவிர்த்து பெரிய ஆழ்கடல் வள்ளங்களை வழங்கி அபிவிருத்தி செய்ய முன்வரவேண்டும்- என்றார் அவர்.

(த-201-302)

# சொந்தக் காணி உரியவர்கள் மட்டுமே மீள்குடியமர அனுமதிக்கப்படுவர்

## நல்லூர் பிரதேச செயலர் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.8

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அரியாலை தென்கிழக்கு (ஜே/89), அரியாலை கிழக்கு (ஜே/90) ஆகிய கிராம அலுவலர் பிரிவில் மீள்குடியமர வருவோர் மேற்படி பிரிவுகளில் சொந்தக்காணி உள்ளவர்கள் மட்டும் மீள்குடியமர அனுமதிக்கப்படுவர் என நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தன் அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

மீள்குடியமர்வோர் தமது சொந்தக் காணிக்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் ஆவணங்களோ, சான்றுகளோ இன்றிப் பிறரது காணிகளில் குடியேற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இதேவேளை மேற்கூறப்பட்ட சகல விடயங்களும் வேறு பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்துவருபவர்களுக்கும் பொருத்தமுடையதாகும் எனவும் அவர் கூறினார்.

இவ்விடயம் தொடர்பாக மேலதிக விடயங்களை பிரதேச செயலகக் காணிக்கிளையில் தொடர்பு கொண்டு காணி உரிமை தொடர்பான ஆவணங்களை உறுதிப்படுத்திய பின்பு பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

மேலும் (ஜே/ 89) கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட முதலாம், 2ஆம் குறுக்குத் தெருக்கள் (ஜே/90) கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பூம்புகார் கிராமம் ஆகியவை இதுவரைக்கும் கண்ணிவெடிகள் அகற்றப்படாத காரணத்தால் மீள்குடியேற அனுமதிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(த-201-7)




# பொலிஸாரின் உதவியுடன் மின்துண்டிக்கும் பணிகள்

சுன்னாகம்,ஒக்.8

வலிகாமம் மேற்குப் பகுதியில் இலங்கை மின்சார சபையினர் பொலிஸாரின் உதவியுடன் மின் துண்டிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த எல்லைக்கு அப்பால் நிலுவையுடைய மின் பாவனையாளர்களுக்கு மின்சார சபையினரால் எச்சரிக்கை அறிவுறுத்தல் விடப்படுகிறது. இந்த அறிவித்தலின் பின்னரும் நிலுவைகளைக் கட்டத் தவறியவர்களின் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் சில இடங்களில் மின் பாவனையாளர்களால் மின்னைத் துண்டிக்க வந்த மின்சார சபையினர் மீது அச்சுறுத்தல் விடுக்கப்பட்டும், தடுக்கப்பட்டும் இருந்தமையைத் தொடர்ந்து பொலிஸாரின் உதவியுடன் மின்னைத் துண்டிக்கும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. (த-38)

# இசைத்துறைப் பாரம்பரியம் வழிவந்த பஞ்சாபிகேசனுக்கு கலாநிதிப் பட்டம்




சுன்னாகம்,ஒக்.8

இலங்கைத் தமிழ் நாட்டுக்கு ஈடாகவும் சில சந்தர்ப்பங்களில் வழிகாட்டியாகவும் விளங்கிய இசைத்துறைப் பாரம்பரியத்தின் வழிவந்த மூத்த கலைஞர் மு.பஞ்சாபிகேசன் ஆவார். கையில் கொண்டு செல்லும் மந்திரக் குழலினால் இசையைப் பரப்பத் தனக்கெனத் தனித்துவத்தைக் கொண்டவராக அவர் விளங்கினார். இவ்வாறு புகழாரம் சூட்டினார் இலக்கிய கலாநிதி அ.சண்முகதாஸ்.

நாதஸ்வர, தவில் கலைஞர்களால் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடத்திய பாராட்டு விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

பட்டங்களைச் சிலர் தேடிச் செல்வர். பட்டங்கள் சிலரைத் தேடிவரும். அத்தகைய ஒருவரே பஞ்சாபிகேசன். அவர் இசைத் துறையில் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது - என்றார் அவர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் கூறுகையில்:- தமிழ் மக்கள் வாழும் இடமெங்கும் தனது இசை மேதமையால் இசை ரசிகர்களை வசீகரித்தவர் அவர். அவருக்குக் கௌரவ கலாநிதிப் பட்டம் அளித்ததனூடாக பல்கலைக் கழகம் பெருமை பெற்றுள்ளது என்று குறிப்பிட்டார்.

நல்லை ஆதீன முதல்வர், நாதஸ்வர வித்துவான் வீ.கே. பஞ்சமூர்த்தி, மகாதேவ சிவாச்சாரியார், சிவஸ்ரீ ச. ஸ்ரீகாந்தக் குருக்கள் ஆகியோரும் மேற்படி நிகழ்வில் உரையாற்றினர். தவில் கச்சேரி, வயலின் ,சோலோ கச்சேரி ஆகியனவும் இடம்பெற்றன.

(201-38)

## மீள்குடியேறியோருக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஒக்.8

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்குள் மீள்குடியமர்ந்தவர்களுக்கான அகதிகளுக்கான ஐ.நா தூதரகத்தின் 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

மீள்குடியமர்ந்த 83 குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாகவும், இதுவரை இக்கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தமக்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறும் நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் இ.சுரேந்திரநாதன் அறிவித்துள்ளார். (201-7)

## கைத்தொழில்பேட்டை வீதி துப்புரவு

யாழ்ப்பாணம்,ஒக்.8

சர்வோதய அமைப்பின் உதவியுடன் அச்சுவேலி கைத்தொழில் பேட்டை வீதி இலகு வேலைக்கான திட்டத்தின் கீழ் துப்புரவு செய்யப்படுகின்றது.

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்த 40 பேர் இத்திட்டத்தின் கீழ் வீதி துப்புரவுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஒவ்வொருவருக்கும் தினசரி கொடுப்பனவாகத் தலா 700 ரூபா வழங்கப்படுகின்றது.

(த-7)

# அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம்,ஒக்.8

வர்த்தக மற்றும் கைத் தொழில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகிறார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இன்று காலை இடம்பெறவுள்ள முஸ்லிம் கலாசார நிகழ்வில் பங்கேற்கும் அமைச்சர், யாழ். நகர், மானிப்பாய் வீதியிலுள்ள பெரிய முகைதீன் ஜூம்ஆப் பள்ளி வாசலில் மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ள முஸ்லிம் மக்களுடனான கலந்துரையாடலில் பங்கு கொள்வார்.

யாழ். வர்த்தகப் பிரமுகர்களையும் அவர் சந்தித்துக் கலந்துரையாடுவதுடன் அவர்களுடைய பிரச்சினைகள் குறித்தும் ஆராய்வார். (த-14)



இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்த மற்றும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம்.

ஆளுநர் மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம். (படம்: டிலீப்)

# சந்திரபுரத்தில் மானிய உரம் வழங்கல்

தென்மராட்சி,ஒக்.8

மட்டுவில், சந்திரபுரம் கமக்கார அமைப்பு பிரிவுக்குட்பட்ட நெற் செய்கையாளர்களுக்கான மானிய உரவகைகள் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் கைதடி விவசாய விரிவாக்க நிலையத்தில் விநியோகிக்கப்படவுள்ளன.

நெற் செய்கையாளர்கள் தமது அடையாள அட்டை, மூன்று வெற்று உரப்பை ஆகியவற்றுடன் ஒரு பரப்புக்கு இரண்டு கிலோ வீதம் உர வகைகள் விநியோகிக்கப்படுமெனவும் ஒரு கிலோ உரம் 7 ரூபாவென விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் உரிய தொகையினையும் கொண்டு வருமாறு அமைப்பின் தலைவர் வ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (201-207)

# சமூக பண்பாட்டு விழுமியங்களால் விழிப்புணர்வை ஏற்படுத்தி பொருளாதார வளர்ச்சிக்கு வழிகாட்டியவர் திருநாவுக்கரசு

## பேராசிரியர் குகபாலன் உரை

யாழ்ப்பாணம்,ஒக்.8

அரசியலூடாகத்தான் மக்களுக்குத் தொண்டாற்ற முடியும் என்பதல்ல. சமூக பண்பாட்டு விழுமியங்களூடாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி சமூக பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என்பதை உணர்த்தியவர் புங்குடுதீவு சர்வோதய வளாகத்தின் அறங்காவலர் திருநாவுக்கரசு என யாழ். பல்கலைக்கழக புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் கா. குகபாலன் தெரிவித்தார்.

அமரர் திருநாவுக்கரசுவின் 9 ஆவது நினைவு தினம் புங்குடுதீவு சர்வோதய வளாகத்தில் செல்வி ஜமுனாதேவி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஆரம்ப காலத்தில் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை மாவை சேனாதிராஜா, வண்ணை ஆனந்தன் ஆகியோருடன் இணைந்து சிறிய கிராமங்கள் வரை தமது பேச்சாற்றல் மூலம் எடுத்துச் சென்றவர் திருநாவுக்கரசு.

காலப்போக்கில் வட இலங்கை சர்வோதய அமைப்பை உருவாக்கி அதன் அறங்காவலராக தனது சொந்தக் கிராமமான புங்குடு தீவுக்கு மட்டுமல்ல, வட இலங்கை முழுவதுக்கும் அந்த அமைப்பின் மூலம் அளப்பரிய தொண்டாற்றியவர்.

வறுமையில் வாடும் மக்களுக்கு உதவித் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்தியதன் மூலம் எல்லா மக்களினதும் அன்புக்குரிய தொண்டராக விளங்கியவர் திருநாவுக்கரசு.

வட இலங்கை சர்வோதய அமைப்பு அரச சார்பற்ற நிறுவனங்களில் முதன்மை வாய்ந்த ஒன்று என்ற அரச அதிகாரிகளே பாராட்டுமளவுக்கு உயர்ந்துள்ளது.

அதற்குக் காரணம் தொண்டு சேவைகளில் ஈடுபடுபவர்கள் எவ்வாறு ஏனைய மக்களுக்கு அவற்றை வழங்க வேண்டும் என்ற யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு அவர் செயற்பட்டது மாத்திரமன்றி தனது வாரிசுகளுக்கும் அந்தந்த அடிப்படையில் பணியாற்றக்கூடிய தன்மையையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளமை தொடர்ச்சியான வளர்ச்சிப் பணிகளுக்கு உறுதுணையாகும்- என்றார் அவர். (201-7)

# இலங்கையுடன் இராணுவப் பயிற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கிறது இந்தியா

கொழும்பு,ஒக்.8

இந்திய - இலங்கை கூட்டுக்குழுவுக்கு புத்துயிர் கொடுக்கப்படவுள்ளதுடன் இரு நாடுகளுக்கும் இடையில் இராணுவப் பயிற்சிகளும் இடம்பெற வுள்ளன. இந்தமாத இறுதியில் இந்திய - இலங்கை கூட் டுக்குழுவின் கூட்டம் கொழும்பில் நடைபெறத் திட் டமிடப்பட்டுள்ளது.

அதேவேளை நான்கு இந்தியப் போர்க்கப்பல்கள் கூட்டுப் பயிற்சிக்காக இந்த வாரம் இலங்கைக்கு வரவுள்ளன.

இந்தியக் கடற்படையின் முதலாவது பயிற்சிப் பிரி வைச் சேர்ந்த ஐ.என்.எஸ் திர் (INS Tir) , ஐ.என்.எஸ் சர்துல் (INS Shardul) , ஐ.என்.எஸ் தரங்கினி (INS Tarangini) மற்றும் இந்திய கடலோரக் காவல்படைக் கப்பலாக வருண (Varuna) ஆகியனவே கூட்டுப் பயிற்சிக்காக இலங்கை வரவுள்ளன.

இவற்றில் ஐ.என்.எஸ் தரங்கினி கொழும்புத் துறைமுகம் வரவுள்ளது. ஏனைய மூன்று கப்பல்களும் திருகோண மலைக்குச் செல்லவுள்ளன.

நாளை 9ஆம் திகதி சனிக்கிழமை இந்தக் கப்பல் கள் திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடையும்.

அங்கு இந்தியப் போர்க்கப்பல்களில் சுமார் 150 சிறிலங்கா கடற்படையினருக்குப் பயிற்சிகள் அளிக்கப் படவுள்ளன. இதனிடையே இந்திய - இலங்கை கூட்டுக் குழுக் கூட்டம் இந்தமாத இறுதியில் நடைபெறவுள்ளது.

கடைசியாக நான்காவது கட்ட ஈழப்போர் வெடிப் பதற்கு முன்னர் 2005 ஜூனில் இந்திய - இலங்கை கூட்டுக் குழுக் கூட்டம் நடைபெற்றிருந்தது. அது ஆறாவது சந்திப்பாகும்.

தற்போது இருநாடுகளுக்கும் இடையிலான அரசி யல் உறவுகள் நெருக்கமாக இருப்பதாகவும், வர்த்தகம், முதலீடு, உட்கட்டுமானத் தொடர்புகள், பாதுகாப்பு உறவு களிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இந்திய - இலங்கை அரசதரப்புகள் தகவல் வெளியிட்டுள்ளன.

அத்துடன் பொதுவான பரந்த அடிப்படையிலான இருதரப்பு உறவுகள் பலமான நிலையில் இருப்ப தாகவும் அவை கூறியுள்ளன.

இந்தமாத இறுதியில் நடக்கவுள்ள கூட்டுக்குழுக் கூட்டத்தில் இருதரப்பு விவகாரங்கள், அனைத்துலக கடல் எல்லையை மீறும் மீனவர்களின் பிரச்சினை என்பன முக்கியமாக விவாதிக்கப்படவுள்ளதாகவும் அந்தத் தரப்புகள் தகவல் வெளியிட்டுள்ளன.(த)

## விஞ்ஞான பாட பயிற்சிப் பரீட்சை

சுன்னாகம்,ஒக்.8

வலிகாமம் கல்வி வலயத்தால் விஞ்ஞானபாட அடைவை மேம்படுத்தும் நோக்குடன் பயிற்சிப் பரீட் சைகள் நடத்தப்படவுள்ளன. 6,7,8,9ஆம் தரங்களில் இப்பயிற்சிப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

வலயத்திலுள்ள பாடசாலைகளில் விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரி யர்கள் இப்பயிற்சி வினாத்தாள் களைத் தயாரிக்கவுள்ளனர். ஆசி ரியர்கள் தாம் தயாரித்த வினாத் தாள்களுடன் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு மருதனார்மடம் இராம நாதன் கல்லூரிக்குச் சமுகம ளிக்குமாறு கேட்கப்பட்டுள் ளது.

1'ஏபி' தரப் பாடசாலை களிலிருந்து இரு ஆசிரியர்க ளும், ஏனைய பாடசாலையி லிருந்து ஒரு ஆசிரியரும் வருகை தரவேண்டுமென அறிவிக் கப்பட்டுள்ளது. அன்றை தினம் தரம் 9 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள் பொதிகளும் வழங்கப்படவுள் ளன. (த-38)

SHAMROCK
ஈச்சமோட்டை,யாழ்
A\L கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகளுடன் ஆங்கிலம், G.I.T
*2011 PAPERCLASS
ECON- NB.கஜீதரன் Mon, Fri 5 P.m
LOGIC-S. றொகேஷியன் Mon,Tuc, 4 P.m
* Gr I முதல் O/L வரை
*ENG.-MED.6 TO 11
*ENG.LIT.,I.C.T
*சிங்களம்

ජාතික සම්පත

சீட்டிழுப்பு இலக்கம் - 62
திகதி - 06.10.2010

ஜாதிக சம்பத Jathika Sampatha

உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து Q அதிர்ஷ்ட இலக்கம் 01 வெற்றி இலக்கம் 6 6 4 5 3

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Q | 01 | 6 | 6 | 4 | 5 | 3 | ரு. 18,508,345.00 | பரிசு - |
| 1 பரிசு | | 01 | 6 | 6 | 4 | 5 | 3 | ரு. 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | | | 6 | 6 | 4 | 5 | 3 | ரு. 100,000.00 | பரிசு 03 |
| 3 பரிசு | | | | 6 | 4 | 5 | 3 | ரு. 10,000.00 | பரிசு 27 |
| 4 பரிசு | | | | | 4 | 5 | 3 | ரு. 1,000.00 | பரிசு 270 |
| 5 பரிசு | | | | | | 5 | 3 | ரு. 50.00 | பரிசு 2658 |
| 6 பரிசு | | | | | | | 3 | ரு. 20.00 | பரிசு 25487 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசு | | | 6 | 6 | 4 | 5 | | ரு. 1,000.00 | பரிசு 25 |
| 8 பரிசு | | | 6 | 6 | 4 | | | ரு. 100.00 | பரிசு 263 |
| 9 பரிசு | | | 6 | 6 | | | | ரு. 50.00 | பரிசு 2672 |
| 10 பரிசு | Q | | | | | | | ரு. 20.00 | பரிசு 10641 |
| 11 பரிசு | Q | 01 | | | | | | ரு. 100.00 | பரிசு 1248 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரு. 2,005,160.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு
ரு. 18,909,138.00

பல்கலைக்கழக மாணவர்களுக்கு
Free English Workshop
காலம்: 09.10.2010 சனிக்கிழமை
பிரிவுகள் (நேரம்) : 1-2, 2-3, 3-4, 4-5, 5-6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)
அனுமதி இலவசம்
Keyboard, சான்றிதழ், Guide இலவசம்
MyWay English
182, Stanley Rd, Jaffna. Ph : 0773363456

வீடு விற்பனைக்கு
சுண்டிக்குளி, ஈச்சமோட்டைச் சந்திக்கு அண்மையாக சுவாமியார் வீதியில் ½ பரப்புக் காணியுடன் உள்ள வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776146434

மணமகள் தேவை
இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1979ஆம் ஆண்டு பிறந்த கணித ஆசிரியருக்கு மணமகள் தேவை. அத்தம் முதலாம் பாதம், பாவம் 21, சீதனம் ஓரளவு எதிர்பார்க்கப்படும்.
தொடர்பு: 071 1576097

கட்டட நிர்மாணப் பணியாளர்களுக்கான வெற்றிடங்கள்

குடாநாட்டிலும் தீவகத்திலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டட நிர்மானப் பணிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் உடனடியாக சேர்க்கப்படவுள்ளனர்.

01. தொழில்நுட்ப அலுவலர்கள்
N.D.T + 3 வருடங்கள் முன் அனுபவம்
அல்லது
N.C.T + 7 வருடங்கள் முன் அனுபவம்
02. வேலை மேற்பார்வையாளர்கள்
N.C.T + 5 வருடங்கள் முன் அனுபவம்
03. களஞ்சியப் பொறுப்பாளர்கள்
கல்வித் தகைமையுடன் கூடிய முன் அனுபவம்
04.காவலாளிகள்
வேலைத் தலத்தில் தங்கியிருக்கக் கூடியவர்கள் மட்டும் விண்ணப் பிக்கவும். முன் அனுபவத்துடன் சிங்கள மொழியில் உரையாடக் கூடியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்ட பணியாளர்களுக்கான விண்ணப்பதாரிகள் சுயவிவரக் கோவையுடனும், தகைமைச் சான்றிதழுடனும் 10.10.2010 ஞாயிற்றுக்கிழமை காலை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் சமூ கம் தரவும். அல்லது உட னடியாக விண்ணப்பிக்கவும்.

மேலும் மேசன்மார், தச்சுவேலை செய்வோர், கம்பி வளைப்போர்க ளும் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர். அவர்களும் 10.10.2010 ஞாயிற் றுக்கிழமை காலை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் சமூகம் தர வும்.

முகாமையாளர்
வி.வி.இராமநாதன் & கொம்பனி (வ-து)
கிளை அலுவலகம் (குடாநாடு)
23, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.
(104348)



பாராட்டி வாழ்த்துகின்றோம்

சிறந்த சமூக சேவையாளனும் விளையாட்டு ஆர்வலருமாகிய யாழ்.பாசையூர் மண்ணின் மைந்தன், சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழையமாணவன், முன்னாள் யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவ பேரவை மற்றும் விளையாட்டுப் பேரவையின் தலைவர், யாழ். பல்கலையின் கலைப் பீடத்திற்கான சகலதுறை விற்பன்னருக்கான பேராசிரியர் துரைராஜா தங்கப் பதக்கத்தை வென்றவருமான ஜனசக்தி காப்புறுதியின் யாழ்.பிராந்திய மேலாளருமாகிய

தேசமான்ய இம்மானுவேல் ஆனல்ட்
BA (Hons) SPL Phy, mss Limra International (USA)
AMTC Limra International (USA),
Justice of the Peace (Whole Island)

அவர்கள் 25.09.2010 அன்று இரத்தினபுரி நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற சாமசிறி பட்டமளிப்பு விழாவில் உயர் கௌரவவிருதான 'தேசமான்ய' என்ற பட்டத்தை பெற்றமையையிட்டு அகமகிழ்கின்றோம். இவர் இன்னும் பல பட்டங்கள் விருதுகளைப் பெற்று எமது ஊருக்கும் மண்ணுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று அவரைப் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

யுப்பிற்றஸ் குழு, பாசையூர்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்

மண்டான், கரணவாய் மேற்கு, கரவெட்டியைச் சேர்ந்த
வேலன் கல்பனா
அவர்கள்
யாழ்.பல்கலைக்கழகத்தில்
06.10.2010 அன்று
கலைமாணி பொருளியல்
சிறப்புப்பட்டம்
(B.A (Hons) Economiec Spl)
பெற்றமைக்காக அவரைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கல்பனா ஸ்ரோர்ஸ் & பேக்கரி
பிரதான வீதி,
அச்சுவேலி.
(104353)

# இராணுவம் வசம் இருக்கும் பரந்தன் மைதானத்தை ஒப்படைக்குமாறு இளைஞர் வட்டம் கோரிக்கை!

கிளிநொச்சி,ஒக்.8

பரந்தனில் இளைஞர் வட்ட விளையாட்டுக் கழகத்தின் மைதானம் தொடர்ந்தும் இராணுவத் தளமாக இயங்கி வருவதால் வீரர்கள் பயிற்சி பெறுவதற்கு மைதான வசதி இல்லாது பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தமது கழகத்திடம் விளையாட்டு உபகரணங்கள் இருக்கின்ற போதிலும் வீரர்கள் பயிற்சி பெறுவதற்கு மைதானம் இல்லாத நிலைமை காணப்படுவதால் விளையாட்டு அமைச்சோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய அமைப்புக்களோ வழங்கும் உதவிகளையும் தாம் பெற முடியாதுள்ளதாக இளைஞர் வட்ட உறுப்பினர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பரந்தன், குமரபுரம் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களின் பொழுது போக்கு மையமாகவும் கூட்டங்கள் இடம்பெறும் தலைமைப் பீடமாகவும் விளங்கிய இந்த மைதானம் இக்கிராமங்களின் அபிவிருத்திக்குப் பெரும் பங்களிப்பு வழங்கியது.

எனவே இக்கிராமங்களின் வளர்ச்சிக்கும் வீரர்களின் வெற்றிக்கும் பங்களிப்புச் செய்யும் வகையில் மைதானத்தை இராணுவத்தினர் இளைஞர் வட்டத்திடம் வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(த-6-301)

# பரப்பங்கண்டலில் குடியமர்ந்த குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள்

## இராணுவத்தினர் வழங்கினர்

மன்னார்,ஒக்.8

மன்னார் பரப்பங்கண்டல் கிராமத்தில் மீளக்குடியமர்ந்த 60 குடும்பங்களுக்கு இராணுவத்தினர் நுளம்பு வலைகளை வழங்கியுள்ளனர்.

கத்தோலிக்க, இந்து ஆலயங்களுக்கும் சமூக சேவைகள் அமைப்புக்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டதுடன் 6 மின் பிறப்பாக்கிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இராணுவத்தின் 542 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி லெப்டினன்ட் கேணல் விக்கும் லியனகே, சிவில் நிர்வாக அதிகாரி லெப்டினன்ட் கேணல் நலிந்த மஹாவிதாரண, பரப்பங்கண்டல் பொறுப்பதிகாரி சஜீவ ஜெயசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர். (த-6-80)

# கிளிநொச்சிப் பாடசாலைகளில் ஆசிரியர் தினக் கொண்டாட்டம்

வட்டக்கச்சி,ஒக்.8

சர்வதேச ஆசிரியர் தினம் நேற்று முன்தினம் புதன்கிழமை கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலையின் ஆசிரியர் தின விழா பாடசாலை மண்டபத்தில் மாணவர் மன்றத் தலைவி இ.டினோசா தலைமையில் இடம்பெற்றது.

வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் ஆசியர் தின விழா உயர்தர வகுப்பு மாணவி த.யாழினி தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சுவிட் சென்ரர் இராணுவப் பொறுப்பதிகாரி மேஜர் பெரேரா, வட்டக்கச்சி சூசையப்பர் தேவாலய பங்குத் தந்தை ஆகியோர் கலந்து கொண்டனர்.

(த-6-450)

# வன்னி வலம்

## ஐ.ஓ.எம். நிறுவனம் கடனுதவி

வட்டக்கச்சி,ஒக்.8

ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் மாயவனூர் மாதர் சங்கம் ஊடாக மாயவனூர் கிராமசேவை அலுவலர் பிரிவில் வசிக்கும் ஊனமுற்றோர், விதவைகள் என 50 பேருக்குத் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் சுயதொழிலுக்கென வழங்குவதற்கான பதிவுகள் இடம் பெற்றுள்ளது. இக்கடனில் 30 ஆயிரம் ரூபா மானியமாகவும், 20 ஆயிரம் ரூபா மீளவும் செலுத்தப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-6-450)

## வட இலங்கை சங்கீத சபை தேர்வுக்கான விண்ணப்பங்கள்

வட்டக்கச்சி,ஒக்.8

2011 ஆம் ஆண்டுக்கான வட இலங்கை சங்கீத சபை தேர்வுக்கான அறிவுறுத்தல்களும், விண்ணப்பப் படிவங்களும் கிளிநொச்சி வலய கல்விப் பணிமனையில் பெற்றுக் கொள்ள முடியும். மேற்படி விண்ணப் படிவங்களை தேவையான பாடசாலை அதிபர்கள் 40ரூபா செலுத்திப் படிவத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் முடிவு திகதி எதிர்வரும் 13 ஆம் திகதிவரை எனவும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (த-6-450)

## மன்னாரில் கருத்தரங்கு

மன்னார்,ஒக்.8

'இலங்கையில் சர்வமத ஒத்துழைப்பு மற்றும் சமூக வெளிப்பாட்டினூடாக மனிதநேயத் தீர்வுகளைச் சாத்தியமயமாக்கல்' சம்பந்தமான முழுநாள் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை மன்னாரில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய சமாதானப் பேரவையும் மன்னார் சமாதானத்துக்கும் மீளிணக்கத்திற்குமான வளங்கள் நிறுவனம் ஒன்றிணைந்து இந்த நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளது.

மன்னார் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பி.ப 2 மணிவரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-80)

# கிளி.,முல்லை. மாவட்டங்களுக்கு உள்ளூராட்சி ஊழியர் இடமாற்றம்

கிளிநொச்சி,ஒக்.8

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் முன்னெடுக்கப்படும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் 'நெல்சிப்' திட்டங்களை முன்னெடுப்பதற்கு வசதியாக யாழ்ப்பாண உள்ளூராட்சி திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் பணிப்புக்கமைய இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளன. இந்த இடமாற்றம் குறித்து மேன்முறையீடு எதுவும் செய்ய முடியாது-- என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(த-6)

# கிளிநொச்சியில் சீனித் தொழிற்சாலை

கொழும்பு,ஒக்.8

கிளிநொச்சியில் சீனித் தொழிற்சாலை ஒன்றை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதற்கேற்றாற்போல் அப்பிரதேசத்தில் கரும்பு உற்பத்தியை மேம்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதேவேளை இம்முறை பெரும்போகத்தின் போது யாழ்ப்பாணத்தில் 2 லட்சத்து 45 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள வயல் பரப்புகளை நெற்செய்கைக்காக உரியவர்களிடம் ஒப்படைக்க அரசாங்கம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது.

15 வருட இடைவெளிக்குப் பின்னர் பல பிரதேசங்களில் இம்முறை நெறசெய்கை மேற்கொள்ளப்படுவதால் அறுவடையின் போது பெருமளவு நெல் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (த)

# வீடுகளைப் புனரமைப்பதற்கான பணம் கிடைக்கவில்லையென முறைப்பாடு

ஒட்டுசுட்டான்,ஒக்.8

ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் பிரிவில் கற்சிலைமடு கிராம அலுவலர் பிரிவில் வீடு திருத்த வேலைகளுக்காக 47 வீடுகள் தெரிவு செய்யப்பட்டு திருத்த வேலைக்கான பணக் கொடுப்பனவுக்கான 'வவுச்சர்' ஒப்பமிடப்பட்டுள்ள போதிலும் 3 மாதங்களாகியும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் கூரை இல்லாத வீடுகள் சுவர், கதவுகள் இடிந்துள்ள நிலையிலும் தற்போது பெய்து வரும் மழையினால் மக்கள் அவஸ்தைப் படுகின்றனர்.

ஒரு வாரத்துக்குள் பணம் வங்கியில் வைப்பிலிடப்படும் வேலைகளைத் தொடக்கலாம் என்பதிற்கமைய சிலர் ஓடு, கூரை தடிகள் சிமெந்து என்பவற்றை கடன் அடிப்படையில் கொள்வனவு செய்திருந்தனர். இதனால் கடனை திருப்பச் செலுத்த முடியாத நிலையில் வங்கியை நாடிச் சென்று ஏமாந்து வருகின்றனர். சில குடும்பங்கள் வீட்டில் இருக்க முடியாத நிலையில் உறவினர் வீடுகளை நாடிவருகின்றனர். (த-6-341)

# கிளிநொச்சி தொண்டராசிரியர்கள் நிரந்தர நியமனம் கோரிப் பேரணி

வட்டக்கச்சி,ஒக்.8

கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் எனக்கோரி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினை ஆசிரியர் தினமான நேற்றுமுன்தினம் புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு கிளிநொச்சியில் நடத்தினர்.

கிளிநொச்சி மத்தியகல்லூரிக்கு முன்பாக இருந்து சுலோகங்களைத் தாங்கியவாறு ஏ-9 வீதியூடாககிளிநொச்சி கல்வி வலயத்தை வந்தடைந்தனர். அங்கு கிளிநொச்சி கல்விவலயப் பணிப்பாளர் த.குருகுலராஜாவிடம் தமது மகஜரினை கையளித்தனர்.

அதனைப் பெற்றுக் கொண்ட பணிப்பாளர் தான் உடனடியாக உரிய அதிகாரிகளிடம் கையளித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து மகஜரினை பெற்றுக் கொண்டார். (த-6-450)

# மலசல கூடம், கிணறு இல்லை; அவதியில் கற்சிலைமடு மக்கள்

ஒட்டுசுட்டான், ஒக்.7

ஐ.ஓ.எம் நிறுவனத்தால் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் சிலருக்கு மலசலகூடம், கிணறு என்பன இல்லாமையால் அவர்கள் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். குடியிருக்கும் வீடுகளுக்குப் பருவ மழை பெய்துவரும் இவ்வேளை மலசலகூடம் மிகவும் அவசியமாக உள்ளது. மலசல கூடத்தினை உடனடியாக அமைக்க ஏற்பாடு செய்து தரப்பட வேண்டுமென மக்கள் கோரியுள்ளார்கள்.

மேலும் கற்சிலை மடுச் சந்தியில் சங்கக் கடைகள் இருக்கும் பிரதான சந்தியில் ஏராளமான மக்கள் கூடும் இடத்தில்மலசல கூடம் இன்மையால் அவ்விடத்தில் சுகாதாரச்சீர்கேடுகள் காணப்படுகிறது. பஸ்ஸுக்காக காத்து நிற்கும் மக்கள் சலம் கழிப்பதற்கு பெரும் அவஸ்தை அடைகின்றனர். இதனை ஒட்டிசுட்டான் பிரதேசசபை கவனத்திற்கு கொண்டு ஆவன செய்ய வேண்டும் என கற்சிலைமடு கிராம அபிவிருத்தி சபை கேட்டுள்ளது. (த-6-341)

# சட்டவிரோதமாக மின்; 175 பேர் கைது!

மன்னார், ஒக்.8

மன்னாரில் கள்ளத் தனமாக மின்சாரம்பெறமுயன்ற 175பேர் கைது செய்யப்பட்டு மன்னார் நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர்.

இவர்களுக்கு ரூபா 8ஆயிரம் ரூபாமுதல் 26 ஆயிரம் ரூபாவரையில் தண்டம் அறவிடப்பட்டது.

சமீபகாலமாக மன்னாரில் அதிக அளவில் கள்ளத்தனமாக மின்சாரம் பெறப்படுவதாகக் கிடைத்ததையடுத்து கொழும்பிலிருந்து மன்னார் வந்த மின்சாரசபையின் திடீர் சோதனைப் பிரிவினர் மேற்படி நபர்களை கைது செய்தனர்.

இவர்கள் நீதிமனறில் ஆஜர் செய்யப்பட்ட வேளை,மன்னார் நீதிமன்ற நீதவான் திருமதி ஜீவராணி இவர்களைத் தண்டப் பணம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (த-80)

# மன்னாரில் தொடர் மின்வெட்டு

மன்னார், ஒக்.7

மன்னாரில் மாதாந்த தொடர் மின்வெட்டு நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது.

இம்மாதம் ஐந்து தினங்கள் பின்வரும் திகதிகளில் அமுல் செய்யப்படும் என்று உள்ளூர் ஒளிபரப்புக்கள் மூலம் மன்னார் மின்சாரசபை அறிவித்துள்ளது.

இதன்படி இம்மாதம் 10ஆம், 12ஆம், 14ஆம், 19ஆம் திகதிகளில் காலை 8 மணிமுதல் பி.ப 6 மணிவரையில் சுமார் 10 மணி நேர மின்வெட்டு அமுலிலிருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பெரிய மின்கோபுரங்களில் ஏற்பட்டுள்ள மின்சீர்கேட்டைச் சீர் செய்வதற்காகவே மின் வெட்டு அமுல் செய்யப்படுவதாகத் தொடர்ந்து கூறப்பட்டு வருகின்றது. (த-80)



ஜனாதிபதி தங்கக் கிண்ணத்துக்காக கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற கரப்பந்தாட்டப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் சம்பியனான கரைச்சி கிருஷ்ண பாரதி அணியினரையும், பெண்கள் பிரிவில் சம்பியனான கரைச்சி புதிய பாரதி அணியினரையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்:- கிளிநொச்சிச் செய்தியாளர்)*

# மன்னாரில் தொடரும் சீரற்ற காலநிலை

மன்னார், ஒக்.8

மன்னாரில் சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

சிலநேரம் கடும் வெயில் கொளுத்துகின்றது. சில நேரம் கடும் மழை பெய்கின்றது. நாள் முழுதும் மப்பும், மந்தாரமுமாகக் காட்சியளிக்கின்றது. அடிக்கடி சூறைக்காற்றும் வீசுகின்றது.

சென்ற மாதம் ஆரம்பமாக வேண்டிய வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்று வீசாமையால் மழை வீழ்ச்சியில் மாறுபாடு தெரிகின்றது.

இடைக்கிடையே பெருமழை பெய்ததனால் அறுவடைக்குத் தயாரான நிலையிலுள்ள நெல் வயலில் நீர் நிறைந்துள்ளது.

இதேவேளை மன்னார் மக்கள் காலபோகத்துக்குத் தயாராகி வருகின்றனர். மன்னாரில் இவ்வாண்டு சுமார் 15 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் காலபோகம் செய்யப்படும் என விவசாய விசாலிப்பு நிலையம் அறிவித்துள்ளது.

(த-80)

# நவராத்திரித் தினத்தில் ஸ்ரீ மகாலட்சுமி வழிபாடு

'பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி
மின்னு நவரத்தினம் போல் மேனி அழகுடையாள்
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே'

என்கிறார் - [மகாகவி பாரதியார்]

மனிதரொருவனைப் பரிபூரணமான நிறை மனிதனாக்குவது வீரம், செல்வம்,கல்வி என்பன வாகும். பொருள்வளம், செல்வவளத்துக்கு அதிபதியாக விளங்குபவள் மகாலட்சுமியாவாள். அத்தகைய மகாலட்சுமி அம்சங்களைக் கொண்டவர்கள் பெண்களே யாவர். எனவேதான் பெண்களை வீட்டுக்கு விளக்கேற்ற வந்த இல்லத்தரசி, மகாலட்சுமி யென்று இன்றும் கூறும் மரபு உண்டு. அத்தகைய பெண்கள் தெய்வீகம் வாய்ந்த பெண்தன்மையான மென்மைக் குணங் களுக்கு மீறி நடப்பார்களேயானால் அவர்கள் பேய்களுக்குச் சமம் என அறிவாளிகள் - சான்றோர் கூறுவர்.

**இன்று (09.10.2010) வெள்ளிக்கிழமை இவ்வாண்டுக்கான நவராத்திரி விரதம் ஆரம்பமாகின்றது. அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

மகாலட்சுமியானவள் அதிகமாக - அநேகமாக - பசுவின் பின்புறம், யானையின் முகம், தாம்பூலம், மலர், திருவிளக்கு, நறுமணமுள்ள சந்தனம், கன்னிப் பெண்கள், உள்ளங்கை, பசுமாட்டின் காற்றூசி, வேள்விப்புகை போன்ற இடங்களையெல்லாம் தனது வதிவிடமாக்கிக் கொண்டாள். ஸ்ரீ மகாலட்சுமியானவள் ஸ்ரீரங்க ஷேத்திர விருட்சம், வில்வம் போன்றவற்றை நாடுபவள். வில்வ மரத்தில் ஸ்ரீ மகாலட்சுமி வாசம் செய்கிறாள். வில்வத்தால் அர்ச்சனை செய்வதும், வில்வமரத்தையே பேணுவதும் ஸ்ரீ மகாலட்சுமிக்குப் பிரியமானதாகும். சூரியனைப் போன்ற ஒளியுடைய ஸ்ரீ மகாலட்சுமியே உன்னருளால் உண்டாகிய 'வனஸ்பதி' என்று புகழ்பெற்ற வில்வமரம், அதனுடைய பழம் எங்கள் மனதையும் புற இந்திரியங்களையும் பற்றியுள்ள அஞ்ஞானத்தையும், மங்களமற்றவற்றையும் நீக்கி விடும்.

தேவர்கள் சாவா மருந்தாகிய தேவாமிர்தம் பெறுதற்பொருட்டுத் திருப்பாற்கடலைக் கடைய விரும்பி, மேருமலையை மத்தாகவும், வாசுகி யென்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு ஒருபுறம் தேவர்களும், மறுபுறம் அசுரர்களுமாக நின்று திருப்பாற்கடலைக் கடைந்தபோது, ஸ்ரீ மகாலட்சுமியுடனே சந்திரன், கௌத்துவமணி, காமதேனு முதலியன வெளிவந்தன. இவைகள் யாவும் ஸ்ரீ மகாலட்சுமி தேவியுடன் பிறந்தவைகளாகும்.

தாமரைமலர் ஸ்ரீ மகாலட்சுமியுடன் பிறந்தவனான சந்திரனைக் கண்டதும் அவனை வெறுத்து இதழ்களைக் குவிக்கும் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டது. இதனைக் கண்ட மகாலட்சுமி, தாமரை மலரில் அதிகமாக வசிக்காது தன்னுடன் பிறந்த கௌத்தவமணிக்குப் பெருவாழ்வு கொடுக்க எண்ணி அதனை அணிகின்ற திருமாலின் மார்பில் நித்திய வசிப்பிடம் கொண்டாள். இதனால் மக்கள் - உலகவரர் உடன் பிறந்தோரை வெறுத்துச் சினக்காது நேசமாகவும், அன்னியோன்னிய உறவுடன் இருப்பதனையுமே ஸ்ரீமகாலட்சுமி அதிகம் விரும்பிப் பேரருள் புரிவாள். மகாலட்சுமியானவள் நெல்லி மரத்திலும், நெல்லிக்கனியிலும் அதிக விருப்பமுடையவள். இவை எங்கெங்கெல்லாம் காணப்படுமோ அங்கங்கெல்லாம் ஸ்ரீ மகாலட்சுமி வாசம் செய்வாள். நெல்லிக்கனி சாப்பிடுவதால் ஆரோக்கியமும், புண்ணியமும் கிடைக்கின்றன. ஆனால் வெள்ளிக்கிழமைகளிலும், இரவிலும் உண்ணக்கூடாது. நெல்லிமர நிழலிலே அன்னமளிப்பது மிகவும் சிறப்பானது. துவாதசியன்று நெல்லிக்காயை உணவிலே சேர்த்தால் ஏகாதசிப் பலனுண்டு.

வெண்ணிற மாடப்புறாக்கள் வாழும் இடங்கள் கலகம் என்பதையே அறியாத பெண்கள் வதியும் வீடுகள், தானியக் குவியல்கள், உமிசிறிதுமில்லாத அரிசிக் குவியல், எல்லாருடனும் பகிர்ந்துண்டு வாழும் மனிதன், இனிமையோடும், கனிவோடும் இருக்கும் மனிதன் நாவடக்கம் உள்ளவன். உணவு உண்பதிலே அதக நேரம் போக்காதவன். பெண்களைத் தெய்வமாக மதிப்பவன். இவர்களிடத்தில் ஸ்ரீ மகாலட்சுமி நித்திய வாசம் செய்வாள். வலம்புரிச் சங்கு, நெல்லிக்காய், கோமயம், தாமரை வெண்மை, பரிசுத்தமான ஆடை அணிகளிலும் ஸ்ரீ மகாலட்சுமி நித்தியவாசம் செய்வாள்.

**ஸ்ரீ மகால்ட்சுமிக்கு வேண்டத்தகாதவை**

பூசைகளில் பயன்படுத்தப்பட்ட மலர்கள், கெட்ட மணம் வீசும் மலர்கள், அழுக்கான இடத்தில் பயன்படுத்தல், உடைந்த ஆசனப் பலகையை உபயோகித்தல், அவலட்சணமான பெண்ணின் உறவு என்பனவற்றை அறவே வெறுத்து நீக்க வேண்டும். மயானக்கரி, சுடுகாட்டெலும்பு, அக்கினி, விபூதி, அந்தணன், பருத்திவிதை, பசு, உமி, குருவின் திருவடி, எச்சில் இவைகளைக் காலால் மிதித்தல் கூடாதாம்.

தன்னுடைய ஒருகாலை மற்றொரு காலாலே தேய்த்துக் கழுவுதல், ஈரக்காலுடன் படுத்தல், இருக்கும் போதும் படுக்கும்போதும் கால்களை ஆட்டுதல் கூடாது.

வில்வம்,விலக்கப்பட்ட காய்கறிகள்,தயிர் ஆகியவற்றை இரவில் உண்ணுதல் ஆகாது. இருட்டில் படுத்தல் கூடாது. எச்சிற்கையால் தலையைத் தொடுதல் ஆகாது. இடதுகையால் தீண்டிக் கொண்டும் சோம்பேறிபோல் இருப்பதும் ஆகாது. ஆண்கள் வெள்ளிக்கிழமையில் எண்ணெய் தேய்த்து முழுகக் கூடாது. அமாவாசையில் வாசனைப் பொடி தேய்த்துக் குளித்தல் ஆகாது. அசுத்தமாக இருக்கும் போது சூரிய சந்திரரைப் பார்த்தல் கூடாது. சூரிய உதயத்துக்கு முன் படுக்கை விட்டு எழுதல் வேண்டும். நகம், முள், இரத்தம், மண்கட்டி, கரி இவற்றால் நிலத்தில் கீறுதல் கூடாது. சந்தனம், சுகந்தம், புஷ்பம், தண்ணீர், இரத்தினம், கடல் இவற்றைக் கண்டால் வணங்குதல் வேண்டும்.



நீங்காத செல்வம் நிறைந்து வாழ விரும்பின், பிறர் தேடிவைத்த பொருளிலும், பிறர் மணந்த மாதரிடத்தும் மனத்தைச் செலுத்துதலாகாது.

பெருந்தீனியின்றி மனிதர் அளவோடு உண்ண வேண்டும். அன்னத்தை - சோற்றைக் கவளமாக உருட்டி விளையாடுதல் ஆகாது. முகம், செவி, மூக்கு, பாதம், முதுகு, இருகால்கள், இருகண்கள் ஆகிய இடங்களிலே சந்தனம் பூசுதல் ஆகாது. முற்கூறப்பட்டவற்றை அவதானித்து, அனுசரித்து ஒழுகிவந்தால் ஸ்ரீ மகாலட்சுமியின் பேரருள் கிடைக்கும்.

**அஷ்டலட்சுமி எழுந்தருளியிருக்கும் இடங்கள்**

அபயம் தரும் திருக்கரங்களுடையவளாய், தாமரை மலரில் வீற்றிருப்பவள் ஆதி லட்சுமி எனப்படுவாள். இரண்டு சக்திகளால் அலங்கரிக்கப்பட்டவளும், தாமரை மலரிலே வீற்றிருப்பவளும் சந்தானலட்சுமி என்று அழைக்கப்படுவாள்.

இரண்டு திருக்கரங்களிலும் இரு தாமரை மலர்களையும் தாங்கிக் கொண்டு இருப்பவள் கஜலட்சுமி எனப்படுவாள்.

சங்கு, சக்கரம், குடம், தாமரைமலர், வில், அம்பு, கூடை, அபயம் இவற்றைத் தாங்கும் எண் கரத்தினளும், தங்கம் போன்ற திருமேனியுடையவளும் தனலட்சுமி எனப்படுவாள்.

வரதம், அபயம், தாம ரைமலர், கரும்பு இவைகளைத் தரிக்கும் நான்கு திருக்கரங்கள் உடையவளாயும், சம்பாநெற்பயிர், வாழை மரங்கள் முதலியவற்றால் சூழப்பட்ட வளாயும் தானியச் செல்வத்தை அளிப்பவளாயும் இருப்பவள் தான்யலட் சுமி எனப்படுவாள்.

சக்கரம்,சங்கு, வரதம், அபயம், பாசம், அங்குசம், கத்தி, கேடயம் இவற்றை எட்டுக்கரங்களில் தரித்திருபவளும், விஜயா என்ற பெயர் கொண்டவள் இராஜ்ய லட்சுமி எனப்படுவாள்.

இரண்டு தாமரை மலர்களையும் வரத, அபயங்களையும் தாங்குகின்ற நான்கு கரத்தினளாய், இரண்டு யானைகளால் பூசிக்கப்படுபவளாய், வெண்ணிறப் பட்டாடை தரிப்பவளாய், தாமரை மலரில் வீற்றிருப்பவளாய் இருப்பவள் சௌபாக்கியலட்சுமியாவாள்.

வரதம், அபயம், வில், அம்பு, சங்கு, சக்கரம், சூலம், கபாலம் இவற்றைத் தரித்திருப்பவள் வீரலட்சுமி எனப்படுவாள்.

உலகிலேயுள்ள பெரிய வணிக நிறுவனங்கள், நகைமாளிகைகள், வர்த்தக நிலையங்கள், சைவாலயங்கள், விஷ்ணுவாலயங்கள் என்பனவற்றிலே ஸ்ரீ மகாலட்சுமி தேவியின் திருவுருவப் படங்கள் இடம்பெற்றிருப்பதனைக் காண முடியும். வங்கிகளிலும், கல்லூரிகளிலும், பாடசாலைகளிலும்கூட ஸ்ரீ மகாலட்சுமி தேவியின் திருவுருவம் காணப்படும். செந்தாமரை மலரை உறைவிடமாகக் கொண்ட உருவமே பெருமளவிலே காணப்படுகின்றன. மகாலட்சுமி ஸ்ரீதேவி; 'அலைமகள்', பொன்னரசி, இலட்சுமி, செல்வமகள்,செந்தாமரை ராணி, திருமகள், மங்கள லட்சுமி என்றெல்லாம் அழைக்கப்படுகிறாள். மகாலட்சுமியின் துணைவர் மகாவிஷ்ணு மூர்த்தியாவார். நாமும் நவராத்திரித் தினத்திலே ஸ்ரீ மகாலட்சுமிதேவியை பக்தியுடன் தொழுது செல்வவளம் செழிக்கப்பெற்று ஆனந்த வாழ்வு வாழ்வோமாக.

**கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்**
**முதுநிலை விரிவுரையாளர்,**
**சப்பிரகமுக பல்கலைக்கழகம்**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/புங்குடுதீவு மகா வித்தியாலய அதிபர்
**திரு.ச.கணேஸ்வரன்**
அவர்கள் 06.10.2010இல்
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில்
நடைபெற்ற பொது பட்டமளிப்பு
விழாவில் முதுகல்விமாணி (M.Ed)
பட்டம் பெற்றதையிட்டு பாராட்டி
வாழ்த்துகின்றோம்.
**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,**
**யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம், புங்குடுதீவு.**
(104319)

## பருத்தித்துறை - பளை மினிபஸ் சேவை

வடமராட்சி,ஒக்.8

பருத்தித்துறையிலிருந்து பளைக்கு தனியார் மினிபஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் ஊடாக இடம்பெற்றுவரும் இச் சேவையில் ஈடுபடும் பஸ் வண்டிகள் தினமும் காலை 6.45 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்கும் பருத்தித்துறையிலிருந்து பளைக்கும் காலை 8.45 மணிக்கும் பிற்பகல் 3.30 மணிக்கும் பளையிலிருந்து பருத்தித்துறைக்குப் புறப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை - கொடிகாமம் சிற்றூர்தி சேவைச் சங்கம் இச் சேவையை ஆரம்பித்துள்ளது.

(த-236)

**A/L எழுதிய மாணவர்களுக்கு**
**Free English Workshop**
காலம்: 08.10.2010 வெள்ளி (இன்று)
பிரிவுகள் (நேரம்) : 9-11, 11-1, 1-3, 3-5
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)
**அனுமதி இலவசம்**
Keyboard, சான்றிதழ், Guide இலவசம்
**MyWay English**
182, Stanley Rd, Jaffna. Ph : 0773363456

**விற்பனைக்கு வந்துவிட்டது**
**"அறிவூற்றுகள்"**
கலாநிதி வே.யுகபாலசிங்கம்
சென்.ஜோன்ஸ் கல்லூரி நூலகம், யாழ்.நூலகம், உலகப்
புகழ்பெற்ற நூலகங்கள் தொன்மைக்கால கிரேக்க,
பாபிலோனிய, சீன, இந்திய, இலங்கை நூலகங்கள் பற்றிய
சுவையான வரலாறும், தகவல்களும்.
நூலின் விலை 250/=
தேடல் உடையோர் நாடவேண்டிய முகவரி:-
மெய்யியற் கல்வி அகம்,
46/2, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(104346)

**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**

செல்வராஜ் - ரஞ்சினி தம்பதியரின்
செல்வப்புதல்வன் **அட்சயன்** தனது முதலாவது
பிறந்தநாளை வல்வெட்டித்துறையில் உள்ள தனது
இல்லத்தில் இன்று (08.10.2010) வெள்ளிக்கிழமை
வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
அட்சயனை வாழ்த்தும் உள்ளங்கள் ஐயா, அம்மா,
அப்பம்மா, அம்மம்மா, பெரியண்ணா
டசிகரன், சின்னண்ணா டிலக்ஷன், மாமா, அத்தை,
சஜீவன் அத்தான், மவிஸ்ராமச்சாள், சித்தப்பாமார்,
பெரியப்பா, சித்திமார், பெரியம்மா,
அக்காமார் விதுஷா, அபிநயா, மதுமிதா,
பகீரதி, வர்ஷிகா, சைந்தவி, திவ்யா
அண்ணாமார் சுகிர்தன், நிசாந்தன்,
லக்ஸ்மென், சரவணன், கிருத்திக்ராஜ்,
பிரவீன், நவீன், மதுஷன் மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள்
ஆகியோர் அருள்மிகு வல்வை
முத்துமாரியம்மன்
அருள்கொண்டு பல்கலையும்
பெற்று பல்லாண்டு காலம்
வாழ்க என வாழ்த்துகின்றோம்.




தகவல்:
அண்ணாமார்
செல்வராஜ் டசிகரன்,
செல்வராஜ் டிலக்ஷன்.
தெணியம்பை,
வல்வெட்டித்துறை.
(104187)

## சைவநெறித் தேர்வு

சுன்னாகம்,ஒக்.8

சைவ பரிபாலன சபையால் நடத்தப்படும் அகில இலங்கை மட்டத்திலான சைவ நெறித் தேர்வு இம் மாதம் 30ஆம் திகதி நடைபெறவுள்ளது. தரம் 2 முதல் சகல வகுப்பு மாணவர்களுக்கும் இப் பரீட்சை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை- தமிழ் மொழித் துறையில் மாணவர்களது அடைவை மதிப்பிடும் வகையில் தமிழ்மொழிப் பரீட்சையும் தரம் 6 முதல் இச்சபையால் நடத்தப்படுகிறது. இப்பரீட்சை இம்மாதம் 29ஆம் திகதி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(த-38)

**பிறந்தநாள் வாழ்த்து**



அல்வாய், பொன்னகத்தைச்
சேர்ந்த
**கணபதிப்பிள்ளை**
**தங்கவேல்**
(ஓய்வு பெற்ற மருந்துக் கலவை
யாளர், சுகாதாரத் திணைக்களம்)
அவர்களின் 65ஆவது பிறந்த
தினத்தில் அல்வாய்
ஆலடியான் இறையருள் பெற்று
சகல சுகங்களுடனும் நல்லாரோக்கியத்துடனும்
சிறப்புக்களுடனும் நீடூழிவாழ மனதார
வாழ்த்துகின்றோம்.



கவிஞர்
செல்லையா வீதி,
அல்வாய்.
(104342)

இனிது வாழ்த்துவோர்:
★ திரு.செ.வீரராசா குடும்பம்
★ திரு.மா.அனந்தராசன் குடும்பம்
★ திரு.க.வரதவேல் குடும்பம்
★ திரு.அ.வைகுந்தன் குடும்பம்
★ திரு.வீ.கிரிதரன் குடும்பம்
★ திரு.கி.பாரதிராஜ் குடும்பம்
★ திரு.அ.தேவமதன் குடும்பம்.

# பொன்சேகாவை விடுவிப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமுண்டு

## எவரிடமும் ஆலோசனை பெறத் தேவையில்லை என்கிறார் ரணில்



கொழும்பு,ஒக்.8

''முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவை விடுதலை செய்ய இராணுவச் சட்டத்தின் 65ஆவது சரத்தின் கீழ் ஜனாதிபதிக்கு சகல அதிகாரங்களும் இருக்கின்றன. இதற்கு எவரிடமும் ஆலோசனை பெறத் தேவையில்லை.'' - என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சித் தலைமையகமான ஸ்ரீகோத்தாவில் நேற்றுமுன்தினம் பகல் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

''எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் எதிர்க் கட்சி உறுப்பினர்களது சிறப்புரிமை குறித்தும் அவர்களது பிரச்சினைகள் குறித்தும் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு எனக்கு இருக்கின்றது.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு எவரும் வேண்டுகோள் விடுக்கலாம். அவர்கள் மதத் தலைவர்களாக இருக்கலாம் அல்லது ஏனைய முக்கியஸ்தர்களாக இருக்கலாம்.

இதன் அடிப்படையிலேயே நான் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்திலும் வாசித்தேன்.

இராணுவ நீதிமன்றம் தீர்ப்பு வழங்கும்போது ஜனாதிபதி அத்தீர்ப்புக்கு ஒப்புதல் வழங்காதிருக்க முடியாதென்றும், சட்டம், ஒழுங்கைக் காப்பாற்ற அத்தீர்ப்புக்கு ஒப்புதல் வழங்கும் வகையில் கைச்சாத்திட வேண்டிய நிலையில் ஜனாதிபதி உள்ளார் என்றும் அமைச்சர்கள் தெரிவிக்கின்றனர். எனினும், சம்பந்தப்பட்டவர் கோரிக்கை விடாமலேயே ஜனாதிபதி விடுதலை செய்யமுடியும். அதற்கான முன்னுதாரணங்கள் பல இருக்கின்றன.

1974 செப்டெம்பர் 8 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ஜெரால்ட் போர்ட் 4311 சரத்தின்படி தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி முன்னாள் ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்ஸன் சட்டத்தை மீறி இருந்தால் மன்னிப்பு வழங்குவதாக அறிவித்திருந்தார்.

'வோட்டர் கேற்' சம்பவம் தொடர்பில் ரிச்சர்ட் நிக்ஸன் சட்டத்தின் மூலம் குற்றவாளியாகக் காணப்படுவதற்கு முன்னரும் கூட அரசியல் எதிராளி எனப் பாராமல் அமெரிக்க ஜனாதிபதி நடந்து கொண்டார்.

சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்தபோது இராணுவ நீதிமன்றத்தால் 5,088 இராணுவ வீரர்கள் தண்டிக்கப்பட்டனர் என்றும் அச் சந்தர்ப்பத்தில் எவருமே அது குறித்துப் பேசவில்லை என்றும் பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார். அவருக்கு ஞாபக மறதி அதிகம் போலும். அச் சந்தர்ப்பத்தில் அது குறித்து ஐ.தே.கட்சி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியது. இதனால் சிலர் விடுவிக்கப்பட்டனர்.- இவ்வாறு ரணில் தெரிவித்தார். (உ-சி)



நெடுந்தீவு மகாவித்தியாலய நவோதய வார நிகழ்வில் பிரதமர் விருந்தினராகக் கலந்துகொண்ட நெடுந்தீவு வைத்திய அதிகாரி செல்வி மகேஸ்வரி நன்னித்தம்பி வித்தியாலய அதிபர் மற்றும் விருந்தினர்கள் ஆகியோர் நிற்பதை படத்தில் காணலாம்.

(படங்கள் : லக்ஸ்மன்)

# தரம் 5 புலமைப் பரிசில் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,ஒக்.8

யாழ். கல்வி வலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து கொடுப்பனவுகளைப் பெறுவதில் பிரச்சினை உள்ளவர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளதால் சம்பந்தப்பட்ட மாணவரின் பெற்றோர் ஆவணங்களுடன் வருகைதருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

மத்திய கல்வியமைச்சில் இருந்து வருகை தரும் அலுவலகர்களுடன் காலை 8.30-10.00 மணிவரை கலந்துரையாடி உரிய கொடுப்பனவுகளைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும். அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஒ-319)

# சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தபோது தனக்கும் எந்தவித வசதியும் வழங்கப்படவில்லையாம்!

## புனர்வாழ்வளிப்பு அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.8

''என்னை சிறைச்சாலையில் அடைத்து வைத்திருந்தபோது எனக்கு எவ்வித வசதியும் இல்லை. முறையாக சாப்பாடு கூட வழங்கப்படவில்லை'' என்று தனது கடந்த கால சிறை அனுபவத்தை நாடாளுமன்றத்தில் கூறினார் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு - புனர்வாழ்வளிப்பு அமைச்சர் டியூ.குணசேகர.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் சரத் பொன்சேகாவின் பாதுகாப்பு தொடர்பாக கேட்கப்பட்டபோதே அமைச்சர் தனது அனுபவங்களையும் கூறினார்.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம் பிற்பகல் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தலைமையில் கூடியது.

வழமையான சபை நடவடிக்கைகளின் பின் எதிர்க்கட்சி உறுப்பினர்களான ஜோசப் மைக்கல் பெரேரா நாடாளுமன்ற உறுப்பினர்களான சரத் பொன்சேகா, வசந்த அலுவிகார ஆகியோரின் சிறப்புரிமைகள் மீறப்பட்ட விடயம் தொடர்பாக ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட மனுக்களை சிறப்புரிமைகள் குழுவுக்கு ஆற்றுப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். அதற்கு சபாநாயகர் அங்கீகாரம் வழங்கினார்.

தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபையில் கவனஈர்ப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

சரத் பொன்சேகாவுக்குப் பெரும் அச்சுறுத்தல்கள் இருக்கின்றன. அவரை நீதிமன்றத்துக்கு அழைத்து வரும்போது விசேட அதிரடிப் படையினரின் பாதுகாப்புடன் கொண்டு வரவேண்டும். இப்பொழுது சாதாரண சிறைச்சாலைக் காவலர்களின் பாதுகாப்புடன் அழைத்துவரப்படுகின்றார் எனச் சுட்டிக்காட்டினார். அத்துடன், அவரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டும். சிறைச்சாலையில் அவருக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் - என்றார் ரணில் விக்கிரமசிங்க.

இதற்கு உடனடியாகவே பதில் அளித்த அமைச்சர் டியூ.குணசேகர.

சரத் பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பாக எந்தப் பிரச்சினையும் இல்லை. தேவையான - அவசியமான பாதுகாப்புடனேயே நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்படுகின்றார்.

அதேவேளை, சிறைச்சாலைக்குள் அவருக்கு விசேட சலுகையளிக்க முடியாது. சிறைச்சாலையில் கைதிகள் எல்லோரும் சமமாகத்தான் நடத்தப்படுவார்கள். எவருக்கும் சலுகை கிடையாது.

நான் ஒரு சமயம் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்தபோது எவ்விதமான வசதிகளும் இல்லை. உண்மையைக் கூறினால் முறையாகச் சாப்பாடு கூட வழங்கப்படவில்லை. எனக்கு சிறைச்சாலை அனுபவம் நிறைய உண்டு. சரத் பொன்சேகாவின் உடல்நிலை தொடர்பாக வைத்தியர்கள் சிபார்சு செய்தால் அப்போது தேவையானவை தொடர்பாக மறுபரிசீலனை செய்யப்படும் என்று கூறினார் அமைச்சர் டியூ.குணசேகர. (சி)

# பருத்தித்துறை நீதிமன்றக் கட்டடத் தொகுதி 63 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு

வடமராட்சி, ஒக்.7

பருத்தித்துறை நீதிமன்ற வளாகமும், நீதிமன்றக் கட்டடங்களும் மிக வேகமாக 63.3 மில்லியன் ரூபா செலவில் நிதிச்சேவை ஆணைக்குழுவால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

இப்புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் நிறைவடைந்ததும், அவ்வளாகத்தில் நீதிமன்றப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து சுமார் 1984ஆம் ஆண்டளவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு அருகில் செயற்பட்டு வந்த பருத்தித்துறை நீதிமன்றம் பெருமளவில் சேதமடைந்தது. நீதிமன்ற நடவடிக்கைகள் யாவும் முடங்கியதுடன் நீதிமன்ற வளாகமும் படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயமாகியது.

முடங்கிய நீதிமன்ற நடவடிக்கைகள் யாழ்.குடாநாடு 1997ஆம் ஆண்டு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வந்ததையடுத்து ஆரம்பமானவேளை பருத்தித்துறை நீதிமன்ற நடவடிக்கைகள் கரவெட்டி, வதிரியில் உள்ள தனியார் கட்டடத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் யுத்தம் முடிவுக்கு வந்ததினால் பருத்தித்துறை நீதிமன்றத்தை மீண்டும் பருத்தித்துறை நகரில் உள்ள பழைய இடத்துக்கு மாற்ற உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பருத்தித்துறை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற்றி நீதிச்சேவை ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இக்கோரிக்கையை பரிசீலனை செய்த ஆணைக்குழு சேதமடைந்த நீதிமன்றக் கட்டடங்களை நேரில் பார்வையிட்டு, கட்டடப் பொறியியலாளர் குழுவைக் கொண்டு ஆய்வுகளை மேற்கொண்டது.

1940ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் கட்டப்பட்ட இந்த மன்றக் கட்டடம் எதுவித தாக்கத்துக்கும் உள்ளாகததுடன், கட்டடம் எதிர்காலத்திற்குரிய தரநிர்ணயம் கொண்டதாக இருக்கின்றது என பொறியியலாளர் குழு சிபாரிசு செய்தது. அத்துடன் அன்றைய காலத்தில் கட்டப்பட்ட இக்கட்டடம் நீதிமன்றத்திற்குப் பொருத்தமாக இருப்பதனால் இதே கட்டடத்தைப் புனரமைப்புச் செய்வது என தீர்மானிக்கப்பட்டு அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டது.

மாவட்ட நீதிமன்றம், அதற்கான அலுவலகம், பதிவேட்டு அறை, சட்டத்தரணிகள் பதிவேடுகளை பரிசீலிக்கும் அறை, மலசலகூடம் என்பன ஒரே கட்டடத்தில் அமைந்துள்ளதுடன், அருகருகே சிறைச்சாலை விடுதி, சட்ட நூலகம் என்பவற்றைக் கொண்டுள்ளதாக பருத்தித்துறை நீதிமன்ற வளாகம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-236)



கோப்பாய் பிரதேசத்தில் குடியேறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஐ.நா. உணவு விவசாய நிறுவனம்(UNFAO) பயனாளிகளுக்கு கோழிக்குஞ்சுகளை அண்மையில் வழங்கிய போது எடுக்கப்பட்ட படம். நிகழ்வில் நிறுவனத்தின் பிரதிநிதி பயனாளி ஒருவருக்கு கோழிக்குஞ்சு வழங்குவதைக் காணலாம்.

# எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரதேச மக்கள் சொந்த இடங்களைப் பார்வையிட்டனர்

தென்மராட்சி, ஒக்.8

எழுதுமட்டுவாழ் தெற்குப் பிரதேச மக்கள் கடந்த வாரம் அப்பகுதியிலுள்ள தமது வீடுகளைப் பார்வையிட்டுள்ளனர். இதற்கான அனுமதியை பாதுகாப்புப் படையினர் வழங்கியிருந்தனர்.

மிகுந்த சிரமத்தின் மத்தியில் சுமார் 50இற்கும் மேற்பட்டோர் மேற்படி பிரதேசத்துக்குச் சென்று தமது இருப்பிடங்களைப் பார்வையிட்டனர்.

இது தொடர்பாக அந்த மக்கள் தெரிவித்தவை வருமாறு:-

பெருமளவான வீடுகளின் கட்டடங்கள் அழிவடைந்த நிலையிலும் வீட்டு மரங்கள் அற்ற நிலையிலும் காணப்பட்டன. எழுதுமட்டுவாழ் சிவன்கோயில் மற்றும் ஸ்ரீ கணேச வித்தியாலயம் ஆகியவையும் அழிவடைந்த நிலையில் உள்ளதாகவும் பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் இப்பகுதியில் ஏற்பட்ட யுத்த மோதல் காரணமாக இப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து குடாநாட்டில் பல்வேறு இடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் மேற்படி பிரதேச மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் தமது இருப்பிடங்களைப் பார்வையிடச் சென்றபோதும் அவ்விருப்பிடங்களைப் பார்வையிட முடியாமல் திரும்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

(த-201-122)

# தென்மராட்சியில் நலிவுற்ற குடும்பங்களுக்கு சைக்கிள்களை வழங்கியது 'யுனிசெவ்'

தென்மராட்சி,ஒக்.8

தென்மராட்சிப் பிரதேசத்தில் நலிவுற்ற 16 குடும்பங்களுக்கு யுனிசெவ் அனுசரணையுடன் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினரால் சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன.

பயனாளிகள் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டைகளுடன் எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை தென்மராட்சிப் பிரதேச சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.

பயனாளிகள் விவரம் வருமாறு:-

செ.விமலேஸ்வரி(சரசாலை வடக்கு), க.நவாதேவி(வேம்பிராய்), இ.சிவநந்தினி(அல்லாரை தெற்கு), கு.தங்கராணி(இடைக்குறிச்சி), செ.விஜயராணி(சாவகச்சேரி, கச்சாய் வீதி),இ.கனகேஸ்வரி(சரசாலை வடக்கு), த.சுந்தரலிங்கம்(சரசாலை வடக்கு), செ.கந்தசாமி(சரசாலை வடக்கு), ச.சிறிலதா(சரசாலை வடக்கு), மா.சிவச்செல்வி(கைதடி, நுணாவில்), ஆ.ஜெகதீஸ்வரன் (இராமாவில்), ப.லோகேஸ்வரி (நுணாவில் மேற்கு), ய.ஜெயமதி (நுணாவில் மேற்கு), யோ.கௌரி (குமரநகர்,கைதடி), ந.ஜெயக்குமாரி (பாலாலி வடக்கு), மீ. நிஷாந்தினி (இராமாவில்) ஆகியோரைத் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201-207)

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
புதியவர்களின் உதவி கிடைக்கலாம். மனைவி, குழந்தைகள் மீதான பாசம் அதிகரிக்கும். சுபகாரிய முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. நேற்று வராத பணவரவு ஒன்று இன்று கிடைக்கலாம். நண்பர்களுக்கு நல்ல யோசனை சொல்லி அவர்களின் அன்பைப் பெறுவீர்கள். சவால்விட்டு, சில காரியங்களைச் சாதிப்பீர்கள். ஆறுதல் அனுபவம் உண்டு.

**இடபம்:**
பிள்ளைகள் வழியில் செலவுகளைச் சந்திக்கலாம். கணவன் மனைவி இடையே மனஸ்தாபம் ஏற்படலாம். உங்களை ஏமாற்றிய ஒருவரை பழி வாங்க முற்படுவீர்கள். சிலர் உங்களிடம் கடனுதவி கேட்டு வரலாம். ஒவ்வாத பொருட்களைச் சாப்பிட வேண்டாம். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி விடுமோ என கவலை அடையலாம்.

**மிதுனம்:**
எதிலும் சுயசிந்தனை, தெளிவான புத்தியோடு செயற்படும் நாள். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். கடன் மிகுதி ஒன்றை வசூலிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்களுக்காக சில விடயங்களில் விட்டுக் கொடுத்து செல்வீர்கள். மற்றவர்கள் தொடர்பான வேலைகளுக்காக அவர்களுடன் நீங்களும் அலையலாம். வெறுப்பு, விரக்தி உண்டாகும்.

**கடகம்:**
மனதில் உயர்வான சிந்தனைகள் குடிகொள்ளும் நாள். உறவு, பகை பாராமல் உதவி செய்வீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் எளிதில் வரலாம். வெளியூர் பயணங்களால் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். வெளிநாட்டு தொடர்புடையவர்கள் நல்ல செய்திகளைக் கேட்கலாம். நாளைய வேலைகளுக்காக முன்னேற்பாடு செய்வீர்கள்.

**சிங்கம்:**
கனவுகளால் மனக்குழப்பங்கள் ஏற்படலாம். குடும்பத் தேவைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். கடன் சொல்லி சிலரிடம் ஏதாவது வாங்கலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது பொருள்களை கவனமாக எடுத்து செல்ல வேண்டும். சேமித்த பணம் ஒன்றை தாராளமாகச் செலவு செய்வீர்கள். உல்லாசமாகஇருப்பதில் நாட்டம் செல்லும்.

**கன்னி:**
எந்த விடயத்திலும் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அமைதியாக செயற்பட்டு காரியம் சாதிப்பீர்கள். பிள்ளைகள், குடும்ப உறுப்பினர்களுக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். எதிர்கால சேமிப்பை அதிகரிக்க முற் படுவீர்கள். உற்சாகமான அனுபவங்களால் மனதில் இனம் புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். நினைத்தது நினைத் தபடி நடக்கும்.

**துலாம்:**
சோதனைகளை எதிர்கொள்ளும் நாள். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களால் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். தண்டச் செலவுகள் ஏற்படாமல் இருக்க கவனம் அவசியம். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறுவது தள்ளிப் போகலாம். மற்றவர்களை பார்த்து சில விடயங்களில் பொறாமைப்படுவீர்கள்.

**விருச்சிகம்:**
அதிர்ஷ்ட வாய்ப்புகளை பெறும் நாள். அயலார் மத்தியில் உங்களின் மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும். திட்டமிட்ட விடயங்களில் எதிர் பார்த்தது நடக்கலாம். ஆதாயகரமான பணவரவுகளை பெறலாம். உறவினர் ஒருவர் தங்களின் வேலை ஒன்றை உங்களை நம்பி ஒப்படைக்கலாம். சேமிப்பை அதிகரிப்பதில் நாட்டம் செல்லும்.

**தனுசு:**
கணவன், மனைவி இடையே பாசம் அதிகரிக்கும். உறவினர்கள் உங்கள் மனம் போல் நடந்து கொள் வர். நீண்ட நாள்களாக வராத கடன் மிகுதி ஒன்று இன்று எதிர்பாராமல் கிடைக்கலாம். மாமன், மைத்துனர்கள் வழியில் உதவிகள் கிடைக்கும். பெரியவர்களை மதித்து அவர்களின் அன்பை, ஆசிகளைப் பெறுவீர்கள். சுலபமாக சில வேலைகள் முடியும்.

**மகரம்:**
உங்களின் யோசனைகளே சிறந்தது என பிறரிடம் வாக்குவாதம் செய்யும் நாள். தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். பிள்ளைகள் செயற்பாட்டால் பெருமை அடையலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிந்து வெளியிடங்களுக்குச் செல்வீர்கள். செய்ய நினைத்த வேலை ஒன்றை சோம்பல் காரணமாக மாற்றி அமைக்கலாம்.

**கும்பம்:**
அதிக எதிர்பார்ப்புடன் இருந்த விடயம் ஒன்று ஏமாற்றத்தைத் தரலாம். எதிலும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். குடும்ப உறுப்பினர்கள் செய்த தவறால் நீங்கள் பிரச்சினைகளை சந்திக்க நேரிடலாம். கடும் பிரயத்தனம் மேற்கொண்டும், சில விடயங்களில் பலன் கிடைக்காமல் போகலாம். பயணங்களில் தடை, தாமதம் நேரும்.

**மீனம்:**
அனைவரிடமும் கலகலப்பாகப் பழகி செல்வாக்கு, கௌரவத்தை அதிகரித்துக் கொள்வீர்கள். திடீர் பயணங்கள் செல்ல நேரிடலாம். கொடுக்கல் வாங்கல்களில்சீரான நிலைமை காணப்படும். உறவுப் பெண்கள் மூலம் சந்தோஷ மான அனுபவங்களை பெறலாம். பொழுதுபோக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். கூட்டு முயற்சி வெற்றி தரும்.

# தானங்களில் தலையாயது இரத்ததானம்

நாளை மறுதினம் (10.10.2010) ஞாயிற்றுக் கிழமை திருநெல்வேலி சேர் பொன். இராமநாதன் வீதியில், யாழ்.பல்லைக்கழகத்துக்கு முன்பாக உள்ள ஸ்ரீ சத்தியசாயி சேவாநிலையத்தின்ஏற்பாட்டில் அந்த நிலையக்கட்டடத்தில் இரத்ததான நிகழ்வொன்று இடம்பெறவுள்ளது. அதனையொட்டி இந்த ஆக்கம் இங்கு இடம்பெறுகிறது.

கலியுகத்திற்கு மிகவும் உன்னதமான ஆன்மீக சாதனை, தொடர்ச்சியான நாமஸ்மரணையும் (இறை நாம உச்சானம்) தாராள கொடையுமேயாகும். இவ்விரண்டினாலும் மானிடப்பிறப்பின் குறிக்கோளான பிறப்பிலிருந்து விடுபடல் அல்லது மெய்ப்பொருளை அறிதலை அடையலாம்.

எமது உடல்உடைமை திறன்கள் அன்பு ஆகியவற்றால், தேவையானோருக்கு, தேவையறிந்து,தக்க சமயத்தில் காலம் தாழ்த்தாது சேவை செய்ய வேண்டும். இந்நோக்குடன் எமது உடலில் ஓடும் இரத்தத்தில் பத்தில் ஒரு பங்கை கொடை செய்யலாம் . இதானல் எமது உடலுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படமாட்டாது. இக்கொடையின் மூலம் இன்னொரு உயிர் புத்துயிர் பெறுகின்றது. நாம் தானம் செய்த இரத்தம் 48 மணித்தியாலங்களில் முழுமையாக நிரப்பிவிடும்.

இரத்தத்தில் இருக்கும் எல்லாக் கூறுகளில் ஏதாவதொன்று இன்னொருவரில் குறைவாகக் காணப்பட்டால் கொடையினால் நிவர்த்தி செய்யலாம்.இதனால் குருதியைப் பெறுபவர் மட்டுமல்ல அவரில் தங்கியிருக்கும் அவரது குடும்பமே நலனடையும். ஆண்,பெண், இளைஞர், முதியோர் எல்லோரும் கொடையாளிகளாகலாம். தானம் செய்ய முன்பு, தானம் செய்பவரை வைத்தியர்கள் சோதித்து கொடை செய்யத் தகுதியடையவரோ இல்லையோ எனத் தீர்மானிப்பார்கள். நாம் ஏன் பரிசோதனையின் முன்பே விலகிக் கொள்ள வேண்டும்? கொடை செய்வதற்குச் சகலரும் முன்வர வேண்டும். சகலரும் ஒத்தாசையும் உற்சாகமும் அளிக்க வேண்டும்.

எவ்வாறு நாம் கொடை செய்யும் உதிரத்தை அன்புத் திரவமாக மாற்றலாம்?

"தானம் செய்யும் பொழுது,அன்புணர்வுடனும் இறை நாமத்தை உச்சரித்துக் கொண்டும் இருந்தால் அன்பு அதிர்வுகள் இரத் தம் மூலம், அதைப் பெறுபவரின் ஆரோக்கியத்தையும் நலனையும் அதிகரிக்குமென பகவான் கூறியுள்ளார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் மாதம் 600 முதல் 700 பைன்ற் இரத்தம் நோயாளிகளுக்கு ஏற்றப்படுகிறது. மனிதக் குருதிக்கு மாற்றாகச் செயற்கைத் திரவம் ஏதும் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. இருப்பவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுத்துதவி அவர்களைக் காப்பாற்ற வேண்டும். கொடுப்பவருக்கு ஆண்டவனின் அருளும் ஆசியும் தேகாரோக்கியமும் கிடைக்கும்.

**மருத்துவர் இ.கணேசமூர்த்தி**

# யாழ். பாடசாலைகளின் புலமைப் பரிசில் முடிவுகள்

**உடுவில் மகளிர் கல்லூரி**

தாரணி பாலேந்திரன்- 187, சஜீவன் ஜெயக்குமார்-177, துவாரகன் குணபாலசிங்கம்-176, குகேசன் சிவசோதிநந்தன்- 175, பிரஜிகன் சுந்தரமூர்த்தி- 174, தர்சிகா சிவநந்தன்- 172, டிறோஜா மரியடிறன்ஸ்- 172, அபிலாஷ் சிதம்பரநந்தன்- 170, மதுசாயினி சாந்தகுமார்- 170, நிவேதா மகாலிங்கசிவம்- 170, யாதவன் பிரபாகரன்- 169, யோகன் ஜீவதாஸ் அமலதாஸ்- 168, துவஸ்ரா குகதாசன்- 167,

அகிலன் ஜீவன்- 164 , ஆரணி குணதீசன்- 164, கிஷானி சுதாகரன்- 163, கஜனன் அமிர்தலிங்கம்- 163, ஜரனியா ராசேந்திரா-161, அபராஜிதன் குகதாசன்- 160, சங்கவி மகேஸ்வரன்- 160, பிரசாத் குணரத்னம்- 159, யதுசன் அருந்தவராஜ்- 156, டினோஜா மரியதாசன்- 156,மதுசாலினி ஜெயசிங்கம்- 156, கீதபிரியசர்மா சிவநந்தசர்மா- 154 , நவரூபனா நகுலேஸ்வரன்- 154, திவ்யா மகேந்திரராஜ்- 153,

நெப்போலியன் நிசான் பிரதிவிராஜ்- 151, அபிநயா சுகீர்தன்- 151, துதிகா பாலக்குமார்- 151, பிரியங்கா விக்னேஸ்வரன்- 150, அங்கஜன் சிவகுமார்- 148, சயந்தன் சுந்தரராஜன்- 148, யானுகா சிவனேஸ்வரன்- 148, சங்கீதன் மகேந்திரன்- 145, அட்சயா மகேந்திரராஜ்- 145, நர்மதா லிங்கமயம் -145, சோபிகா நவநீதன்- 145, தயப்பிரியா சிவராசா- 143, தேமதுரா கங்காசுதன் -143, நிதுலா முருகாநந்தன்- 142.

**உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி**

மனோகரன் ரசிகா- 165, ஜெகதீஸ்வரன் வேணுஜன் -159, கேதீஸ்வரநாதன் சங்கீர்த்தனன்- 157, திவாகரன் சுஜித்தா- 155, சிவகுமார் லக்ஷிகா- 154, சிவகுமார் கீர்த்திகா- 149, துளசீதரன் அச்சுதன்- 145.

**பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தி**

ச.மதுஹரி-175, த.ஸ்ரீபதி அதிகாரம்- 155, சி.வேணுகாந்- 146. *(முடிவுகள் தொடரும்)* (201-86-28)

# வெளிநாடுகளுக்கான ஆட்கடத்தலை தடுப்பதற்குச் சிறப்புச் செயலணி

கொழும்பு;ஒக்.8

வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாக ஆள்களைக் கடத்தும் நடவடிக்கைகளைத் தடுக்க இலங்கை அரசாங்கம்சிறப்புசெயலணி ஒன்றை நியமிக்கவுள்ளது.

நிதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடிவு செய்துள்ளது.

சட்டவிரோத ஆள்கடத்தல்களைத் தடுப்பதற்கான இந்த செயலணி மாதத்தில் இரண்டு முறை கூடி ஆராய்வதுடன் அறிக்கையையும் சமர்ப்பிக்கும்.

சட்டவிரோத ஆள்கடத்தல்களை முறியடிக்கும் துறைகள் சார்ந்த பல்வேறு அமைப்புகளினது பிரதிநிதிகள்இந்த செயணியில் இடம்பெறவுள்ளனர்.

அதேவேளை, இலங்கை இராணுவம் கேந்திர முக்கியத்துவம்மிக்க இடங்களில் நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கிலும் சட்டவிரோத ஆள்கடத்தல்களை முறியடிக்கும் நோக்கிலும் தளங்களை நிறுவவுள்ளது.

கடற்படையும் அண்மையில் அதிகாரமற்ற நபர்கள் இலங்கையின் கடல் மற்றும் தரைப்பகுதிகளைப் பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்கில் வடமேற்கு கட்டளைப் பீடம் ஒன்றை அமைத் துள்ளது.

மேற்கு நாடுகள் மற்றும் தென் கிழக்காசியாவுக்கு ஆட்களைக் கடத்தும் முக்கியமானதொரு இடமாக இலங்கை கருதப்படுகிறது.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் இலங்கை அரசுக்குப் பெரும் நெருக்கடியாக மாறியுள்ள நிலையிலேயே சிறப்புச் செயலணி ஒன்றை அமைத்து தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. (த)

# வறுமையின் விலை!



ஓர் ஊரிலே துணிக்கடை வியாபாரி இருந்தார். ஒருநாள் அவர் கடைக்கு ஒரு வயதான அம்மா ஒரு பழைய சேலையை எடுத்துக்காட்டி, இதை நீங்கள் விலைக்கு வாங்க முடியுமா? அந்தக் கடையில் வேலை பார்ப்பவர்கள் '' இந்த அம்மா விவரம் தெரியாமல் இங்கே வந்து கேட்கிறார்கள்'' அப்படி என்றார்கள்.

ஆமாம்! புதுப்புடைவை வியாபாரம் செய்பவர்கள் பழைய புடைவை வாங்குவார்களா?

இதனால் வேடிக்கையாகப் பார்த்தார்கள்.

அந்த மூதாட்டியை வியாபாரி ஏற இறங்கப் பார்த்தார்.

'' அம்மா இதற்கு என்ன விலை வேண்டும்?''

'' இதற்கு 100 ரூபா வேண்டும்''

'' வியாபாரி சிரித்துக் கொண்டே 400 ரூபா கொடுத்தார்''

அந்தப் பணியாளர்களுக்கு ஆச்சரியம்''

ஏன் இதற்கு இவ்வளவு அதிக விலை கொடுக்க வேண்டும்.

நான் துணியைப் பார்க்கவில்லை அவரின் வறுமையைத்தான் பார்த்தேன்.

இது எல்லோருக்கும் புரியாது! பெரியவர்களுக்குத்தான் புரியும்.

**கோ.சுவாமிநாதன்.**

# நெஞ்சக் கோயில்

காஞ்சிபுரத்தின் மேற்கே உள்ளது கைலாசநாதர் கோயில். கல்லுக்கு உளிகள் கொடுத்த முத்தத்தால் அல்லது கல்லும் உளியும் நடத்திய யுத்தத்தால் எழுந்தது அந்தக் கலைக் கோயில்.

அது ஒரு சிற்ப அற்புதம். கல்லின் நடனம். பல்லவன் கட்டிய அந்தப் பெருங்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த நாளும் கோளும் பார்த்து நேரம் கணித்தான் மாமன்னன். விடிந்தால் கும்பாபிஷேகம். பல்லவ அரசன் படுக்கப் போனான்.

இரவில் ஒரு கனவு. புலித்தோல் அணிந்த செஞ்சடை அண்ணல் சிவபெருமான் கனவில் தோன்றினார். மன்னவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

இறைவா உனக்காகவே சமைக்கப்பட்ட இந்தக் கலைக் கோயில் என் விந்தையும் செல்வமும் சேர்ந்து உருவாக்கிய படைப்பு . மகிழ்ச்சியா.



சிவபெருமான் சிரித்தார். சுவாமி ஏன் சிரிக்கிறீர்கள். நாளை குடமுழுக்கு மாற்ற வேண்டும் என்றார். காரணம் என்னவென்று சொல்வீர்களா என்றார்.

குறித்த அந்த நேரத்தில் என் அன்பன் பூசலார் என்பவன் கட்டிய கோயிலுக்கு கும்பாபிஷேகம். அங்கு செல்வதால் உன் கோயிலுக்கு வரமுடியாது என்றார் இறைவன்.

அரசன் கட்டியது கற்கோயில். பூசலர் கட்டியது மனக் கோயில். இதில் எந்தக் கோயில் இறைவனுக்கு ஏற்புடையது.

உள்ளத்தில் கோயில் கருவானது. உடம்பே கோயிலாய் உருவானது.

**சுகி.சிவம்.**

# தமிழருக்கு இழைக்கப்பட்ட காயங்களை குணமாக்க சொற்கள் அல்ல செயல்களே இன்றைய தேவை

**கொழும்பு ஆங்கில பத்திரிகையொன் றில் வெளியான கட்டுரையின் தமிழ் வடிவம் இது. எழுதியவர் எம்.எஸ்.எம்.அயூப்.**

இலங்கையில் இனிமேல் சமஷ்டி அரசியல் தீர்வு ஒன்றுக்கு அவசியமில்லை, என்றவாறு ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பி.பி.ஸி சிங்கள சேவையின் 'சந்தேசிய' நிகழ்ச்சிக்கு கடந்த செப்ரெம்பர் 26 ஆம் திகதி அளித்த ஒரு பேட்டியில் கூறியிருந்தார்.

இது தமிழர்களில் அனேகருக்கு ஏமாற்றமளிப்பதாக இருந்திருக்கும், குறிப்பாக கடந்த பல ஆண்டுகளில் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுள்ள வைகளுக்கு மேலாக அதிக அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்று கோரிவருகின்ற அரசியல் விழிப்புள்ள தமிழர்களுக்கு.

இன்றைய காலகட்டத்தில் இருக்கும் தேவை என்னவென்றால் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு பதிலாக வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பது தான் அவசியம் என்று அவர் மேலும் கூறியிருக்கிறார்.

இருந்தபோதிலும் அவர் மிகக்கவனமாக வார்த்தைகளைப் பிரயோகித்து மாகாண சபைகள் அமைவதற்கு வழிவகுத்த 13 ஆவது திருத்தத்தை மாற்றுவதையோ இல்லாமல் செய்வதையே ஐ.தே.கட்சி ஆதரிக்கப் போவதில்லையென்றும் அடித்து கூறியுள்ளார்.

### 13 ஆவது திருத்தம் அரசமைப்பின் ஓர் அம்சம்

13 ஆவது திருத்தமானது இலங்கை அரசமைப்பின் ஓர் அம்சமாகும். நாங்கள் தொடர்ந்து அதனை ஆதரிப்போம், ஆனால் இன்றைய காலத்தின் தேவை அந்த மக்களின் மாமூல் வாழ்வாதாரத்துக்கு வழிசமைப்பது தான் என்று அவர் கூறியிருந்தார்.

தமிழ்ப்புலிகளின் போர் முனைப்பு தோற்கடிக்கப்பட்டு விட்டதால் அரசியல் தீர்வொன்றுக்கு அவசியமில்லையென்று பி.பி.ஸிக்கு அவர் கூறியிருந்தார்.

இந்த பிரதான எதிர்க்கட்சியானது அதன் தலைமைத்துவம் தொடர்பாக பல்வேறு பிரச்சினைகளை இப்போது எதிர் கொண்டு வருகின்றது. கட்சியின் மூலோபாயம் சரியின்மையால் மீண்டும் மீண்டும் ஏற்பட்ட தேர்தல் தோல்விகளை அதனால் தடுத்துநிறுத்த முடியாமையால் எழுந்துள்ள நிலைமையாகும் இது. இதனால் மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வருவதற்கு முன்பிருந்தே கட்சியின் பெரிய உறுப்பினர்கள் பலர் பிய்த்துக் கொண்டு அரசாங்கத்தின் பக்கம் பாய்ந்து விட்டார்கள். இம்மாதிரியான ஒரு சூழ்நிலையில் அக்கட்சியின் தலைவர்களிடம் பி.பி.ஸி.சமஷ்டி பற்றிகேள்வி எழுப்பியிருப்பதானது உள்ளூர் வழக்கப்படி சொல்வதானால் தாடி பற்றி எரியும் போது பீடி பற்ற வைக்க நெருப்பு கேட்பது போன்ற நிலையாகும்.

முக்கிய இரண்டு கட்சிகளுக்கும் அரசியல் தீர்வு மற்றும் சமஷ் அமைப்பு என்பதெல்லாம் அவர்களின் தலைவர்களின் மனச்சாட்சிக்கு வெகுதூரத்திலான விடயங்கள். அதுவும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சிங்கள உணர்வுகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டுள்ள நிலையில் ஐ.தே.க.வைப் பொறுத்தவரை இவை கையாள்வதற்கு மிக சங்கடமான விடயமாகும். தமது கட்சியின் சமஷ்டி தொடர்பான நிலைப்பாட்டினை - அது 2003 இல் இருந்து மாறாமலே இருந்து வருகின்றது- உறுதிப்படுத்தி ஏதும் கூறியிருப்பாரானால் அரச தரப்பினர் தமது கட்சியை குற்றம் காண்பார்கள் என்று அத்தநாயக்க பயந்திருக்கலாம்.

ஐ.தே.க / ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் 2002 நவம்பரில் நடந்த அமைதி மகாநாட்டில் புலிகளுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்ட தென்பது எல்லாருக்கும் தெரிந்த விடயம்.

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி கட்டமைப்பொன்றின் மீது உள்ளக சுய நிர்ணய அரசியல் தீர்வொன்றை பற்றி அராய்வதற்கு இருதரப்பினரும் தீர்மானித்துள்ளனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அந்த நிலைப்பாட்டிலிருந்து விலகிச் சென்று விட்டதாக ஐ.தே.க.ஒருபோதும் அறிவித்தது கிடையாது.

அவமானத்துக்குரிய விதத்தில் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விட்டதை அடுத்து அதிகாரப்பகிர்வுக்கு எதிராக சிங்களவர்களின் கருத்து நிலை மிகவும் கூர்மையடைந்திருப்பதனால் அதனுடன் ஒருங்கிணையும் முயற்சியாகவே அத்தநாயக்காவின் அதிகாரப் பகிர்வு தொடர்பான கருத்து காணப்படுகின்றது.

ஒரு முக்கியமான பிரச்சினையில் பிரதான எதிர்க்கட்சியானது தனது கொள்கையில் துரோகம் இழைத்துவிட்டதாக அரச சார்பு ஊடகங்கள் கருத்து வெளியிட முயன்றுள்ளன.

### சமஷ்டி தீர்வை சந்திரிகாவும் ஆதரித்தார்.

எதுவானாலும் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி முறைதான் தீர்வு என்று ஐ.தே.கட்சி மட்டும் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. ஐ.தே.க/ ஐக்கிய தேசிய முன்னணி அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் சமஷ்டி தீர்வு குறித்து இணங்கி இருந்தவேளையில் அப்போதைய ஜனாதிபதியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவருமான சந்திரிக்கா குமாரதுங்காவும் அதனை வரவேற்றிருந்தார். தாம் ஏற்கனவே ஒரு சமஷ்டி அரசமைப்பு தொடர்பான முன்வரைவினை 2000 - ஆகஸ்ட் 3 ஆம் திகதி நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருந்ததாக அவர் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்றத்தில் அவர் தாமே முன்வந்து தாக்கல் செய்திருந்த ஆவணம் பற்றி குறிப்பிட்டிருந்தார். ஒற்றையாட்சிக்கு பதிலாக ''பிராந்தியங்களின் ஒன்றியம்'' என நாட்டின் ஆட்சிமுறை மாற்றி அமைப்பது தொடர்பாக அதில் அவர் தெரிவித்திருந்தார்.

அந்த ஆவணம் நாடாளுமன்றத்திலேயே ஐ.தே.கட்சியினரால் கிழித்தெறியப்பட்டது. தீமூட்டவும் பட்டது. அதனால் அன்றைய தினம் முழுவதும் சபையில் குழப்ப நிலை நீடித்திருந்தது.

1995 ஆண்டிலிருந்தே பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற கோட்பாட்டினை சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்னெடுத்து வந்துள்ளது. அப்போது அக்கட்சி தீர்வு பொதி என்று வர்ணிக்கப்பட்ட திட்டத்தை முன்வைத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவிரும்பியது. இத்திட்டம் பற்றி விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் 2003 ஆண்டு பிற்பகுதியில் புலிகளின் நீதிமன்ற கட்டடத் தொகுதியொன்றைத் திறந்து வைத்து கருத்து வெளியிடுகையில் ''புலிகள் அதனை ஏற்றுக்கொண்டிருக்கலாம்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

விடுதலைப் புலிகளுடனான அமைதிப்பேச்சுக்கள் குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்திருந்த போதிலும் இன்னொரு சமயத்தில் ஐ.தேசிய முன்னணி அரசாங்கம் புலிகளுடன் நடத்திய பேச்சுக்களின் முடிவுகளை வரவேற்றிருந்தனர். இருதரப்புகளுக்குமிடையிலான அமைதி ஒப்பந்தம் சட்ட விரோதமானது என்று அவர்கள் தெரிவித்திருந்த போதிலும் 2003 ஏப்ரல் 30 திகதி வெளியிட்ட அறிக்கைகளில் அமைதிப் பேச்சுக்களில் இருந்து புலிகள் விலகிக் கொண்டமை குறித்து ஆழ்ந்த கவலை வெளியிட்டிருந்தனர்.

# சமஷ்டி தீர்வினை பிரதான கட்சிகள் இரண்டுமே முன்னர் ஆதரித்துள்ளன

எதுவானாலும் பிரதான அரசியல் கட்சிகள் இரண்டும் இப்போது சமஷ்டித் தீர்வு தொடர்பான யோசனையைக் கைகழுவிட்டுள்ளன. எனவே ஐ.தே. கட்சி மட்டுமல்ல ஏனைய பல கட்சிகளும் இந்த விடயத்தில் தமது நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டு வருகின்றன. ஐ.தே.முன்னணி அரசுடனான ஒப்பந்தத்தை 2003 ஆண்டின் பிற்பகுதி அளவில் விடுதலைப் புலிகள் கைவிட்டிருந்தனர்.

அத்த நாயக்காவைவிட தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச இந்த விடயத்தில் அதிக தெளிவாக இருப்பது போல் தோன்றுகின்றது. தமிழ்ப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு விட்டதோடு அரசியல் தீர்வு ஒன்று தேவையில்லை என்கிறார்கள் இருவரும். ஆனால் 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை அத்த நாயக்க இப்பவும் ஆதரித்து நிற்கின்றார். வீரவன்ச அதனை எதிர்க்கிறார்.

### ஆயுதப் போராட்டம் சூனியத்திலிருந்து தோன்றவில்லை

அரசியல் தீர்வு ஒன்று அவசியம் இல்லையென்றால் 13 ஆவது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளை மக்கள் பணச்செலவில் தொடர்ந்து நிலைநிறுத்திக் கொண்டிருப்பதில் எதுவித அர்த்தமும் இல்லை.

இருதரப்பினருமே தமிழ் ஆயுத போராட்டம் என்பது ஏதோ சூனியத்திலிருந்து முளைத்தெழுந்தது போலும், காரணமின்றிதோன்றிய விளைவு போலும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தோன்றுகின்றது.

தமிழ் ஆயுதப் போராட்டத்துக்கு எதிராக ராணுவ நடவடிக்கைகளுக்கு அப்பால் சில விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி ராஜபக்ஷ அவ்வப்போது கூறிவந்துள்ளார். ஆனால் அது பின்னர் மிகக் கொடுமையான பயங்கரவாதமாக தலையெடுத்தது.

### ஜனாதிபதியின் கோட்பாடு

2007 ஆம் ஆண்டு ஐ.நா.பொது சபையில் ஜனாதிபதி பின்வருமாறு கூறினார். இந்த துரதிருஷ்டமான பிரச்சினைக்கு கௌரவமானதும் பேச்சுவார்த்தை மூலமானதுமான தீர்வே எமது குறிக்கோளாகும். இந்த முடிவை நோக்கி சர்வகட்சி மாநாடு வெற்றிகரமாக செயலாற்றி வருகிறது என்பதைக் கூறவிரும்புகிறேன் என்று.

ஆனால் சர்வகட்சி மாநாடு கௌரவமான முடிவுக்குவராமல் துக்ககரமான முடிவினை எட்டியது. பின்னர் 2008 ஆம் ஆண்டு ஐ.நா.பொது மன்றில் பேசுகையில் அவர் கூறினார்; இந்தப் பிரச்சினைகளை, காரணங்களை தீர்த்துக் கொள்வதற்கு எமது அரசாங்கம் எப்போதும் ஆயத்தமாய் இருக்கின்றது. சகல சமூகங்களதும் உரிமைகள் அபிலாஷைகளை நிவர்த்திக்கும் வகையில் அரசியல் மற்றும் அரசமைப்புத் தீர்வுகளை வலுவுடன் செயற்படுத்தவும் தயாராய் இருக்கிறோம்.

2010 ஆம் ஆண்டு அவர் ஐ.நா.பேரவையில் கூறியது வருமாறு:-

நிலைத்துநிற்கும் அமைதி, காயங்களை சுகப்படுத்துவது, பொருளாதார செழிப்பினை உறுதிபடுத்துவது, மற்றும் முழு நாடும் சௌஜன்யமாக வாழ்வதற்கு உரிமைகளை உறுதிபடுத்துதல்

இவைகள் மீதே எமது முழுக் கவனமும் இப்பொழுது செலுத்தப்படுகின்றது. இந்த அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு பொருளாதார வளர்ச்சியும் அரசியல் நல்லிணக்கமும் ஒன்றோடொன்று இணைந்து செல்ல வேண்டும் என்பதில் நாம் கவனமாக இருக்கின்றோம். இந்த முடிவை நோக்கி எமது மக்களின் அபிலாஷைகளை பொருத்தமாக பிரதிபலிக்கும் விதத்தில் அரசமைப்பு திருத்தங்கள் உருவாக்கப்படும். அந்தவகையில் சம்பந்தப்பட்ட அனைவரது பங்களிப்பும் பெற்றுக் கொள்ளப்படும். இந்த நோக்கில் இவ்வருட ஆரம்பத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. என்று.

இருந்தபோதிலும் காயங்களை குணமாக்கும் விதத்தில் குறிப்பிடக்கூடிய அளவு அரசமைப்பு திருத்தங்கள் கொண்டு வரப்படும் என்பதில் தமிழ் அரசியல் கட்சிகள் நம்பிக்கை இல்லாமல் இருக்கின்றன. குறித்த இரண்டு பிரதான கட்சிகளினதும் கடந்த கால கொள்கை உறுதிப்பாடின்மை குறித்த அனுபவமே இதற்குக் காரணம்.

எனவே இந்த இரு கட்சிகளும் காயமுற்றுள்ள மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டியது அவர்களின் பொறுப்பு. இது செயல் முறையில் அமைய வேண்டும் வெறும் வார்த்தைகளில் அன்று.*

தமிழில்: ரம்யன்

## காணி விற்பனைக்கு

யாழ்.நகருக்கு சுமார் 4Km தூரத்திலும் நல்லூர் கோயிலுக்கு அண்மையிலும் கல்வியங்காடு, 3ஆம் கட்டை வீதியில் பாதுகாப்புமிக்க அமைதியான சூழலில் தூய்மையான குடிதண்ணீர் உள்ள இரண்டு வீடுகள் கட்டக்கூடிய 4¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விரும்பினால் இரண்டாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்:
தொ.பே:- 0773364280
0776081693

(104235)


## நினைவஞ்சலி

25ஆவது ஆண்டு



செல்வி
கலைச்செல்வி தர்மலிங்கம்
தோற்றம் 01.10.1970 மறைவு 01.07.1985

11ஆவது ஆண்டு



திருமதி
மகேஸ்வரி தர்மலிங்கம்
தோற்றம் 08.03.1940 மறைவு 08.10.1999

உங்கள் பிரிவால் துயருறும்:
சி.தர்மலிங்கம் (அப்பா-கணவர்).
கல்வயல், சாவகச்சேரி.

(1041172)

## 13ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர்
**நமசிவாயம் நடராசா**
திதி: பிரதமை
மலர்வு: 17.03.1923
உதிர்வு: 02.10.1997

பாசம் மிகுந்த கணவனாக
அன்பான தந்தையாக
அன்புமிகு பேரனாக இருந்து
எங்களுக்கு வாழவழி வகுத்து விட்ட
எங்கள் இனிய ஐயாவே
எங்களை விட்டுப் பிரிந்து
அம்மன் பாதக் கமலங்களோடு
சேர்ந்து பதின்மூன்று ஆண்டுகள் சென்றதுவே
உங்கள் ஆத்மசாந்திக்காக
அம்பாளை வேண்டுகிறோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
ந.சிவக்கொழுந்து (மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

ஐயனார் கோயிலடி,
கல்வயல், சாவகச்சேரி.

(104246)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 10★01★1925
உதிர்வு 08★09★2010

**திருமதி திரேசம்மா அலோசியஸ்**
(நெல்லியடி - கரவெட்டி)

மாதம் ஒன்று போனதோ-அம்மா
ஆறவில்லை எம் இதயம்
இன்றுவரை நம்பவில்லை-நீர்
இறைபதம் சேர்ந்தீரென்று

உங்கள் ஆன்மா இறைவனடியில் இளைப்பாறிச் சாந்தியுற அனைவரும் பிரார்த்திக்கிறோம்.

அன்னாரின் இளைப்பாற்றலை வேண்டி (08.10.2010) வெள்ளிக்கிழமை இன்று காலை 6 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் இரங்கற் பலியில் பங்குபற்றுமாறு அன்புடன் வேண்டுகின்றோம். அவரின் யாழ்.இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.8, மணல்தரை வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212228045

(104242) குடும்பத்தினர்.

*வெள்ளைக்கொடி விவகார வழக்கு*

# கோத்தபாய குறித்துக் கூறிய கருத்தை பொன்சேகா ஒருபோதும் மறுக்கவேயில்லை

### சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் நீதிமன்றில் சாட்சியம்

கொழும்பு, ஒக். 8

வன்னி இறுதிக் கட்ட யுத்தத்தின்போது வெள்ளைக் கொடி ஏந்தி வந்தவர்களை சுட்டுக்கொல்லுமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குறித்துக் கூறிய கருத்தை சரத் பொன்சேகா தன்னுடன் இடம்பெற்ற சந்திப்புக்களின்போது ஒருபோதும் மறுத்திருக்கவில்லை என சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் பெட்ரிகா ஜேன்ஸ் தெரிவித்துள்ளார்.

வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெள்ளைக் கொடி விவகார வழக்கு நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதுடன், வழக்கின் பிரதான சாட்சியாளரான ஊடகவியலாளர் பெட்ரிகா ஜேன்ஸ் கொழும்பு மேல் நீதிமன்றின் மூன்று நீதியரசர்கள் குழு முன் நேற்று முன்தினம் சாட்சியமளித்தார்.

அவர் சாட்சியத்தில் தெரிவித்தவை வருமாறு:-

சரத் பொன்சேகா என்னிடம் வெள்ளைக் கொடி விவகாரத்தை கூறியதன் காரணமாகவே நான் அந்த விடயத்தை முதல் செய்தியாக வெளியிட்டேன்.

பொன்சேகாவின் அந்தக் கருத்து அவருடைய தேர்தல் நடவடிக்கையைப் பாதிக்கும் எனவும், அதனை சரிசெய்யுமாறும் நாடாளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் என்னிடம் கேட்டுக்கொண்டனர், நான் அதற்கு மறுப்புத் தெரிவித்தேன்.

எனினும் சரத் பொன்சேகாவின் வேண்டுகோளுக்கு இணங்க கடந்த டிசெம்பர் 20ஆம் திகதி எமது பத்திரிகையில் அவருடைய தெளிவுபடுத்தலும் செய்தியாக வெளியிடப்பட்டது.

''வெள்ளைக் கொடி ஏந்திவரும் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களைச் சுட்டுக்கொலை செய்யுமாறு கோத்தபாய ராஜபக்ஷ சட்டவிரோத அறிவுறுத்தல் வழங்கியிருந்தார். எனினும் எந்தவொரு விடுதலைப் புலி உறுப்பினரும் அவ்வாறு வெள்ளைக் கொடி ஏந்தி வரவில்லை. அனைவரும் யுத்தத்தின்போதே கொல்லப்பட்டனர்'' இவ்வாறே சரத் பொன் சேகாவின் தெளிவுபடுத்தல் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்தத் தெளிவுபடுத்தல் செய்தியின்போதும் சரத் பொன்சேகா தனது கருத்தை வாபஸ் பெறவில்லை.

வெள்ளைக் கொடி தொடர்பில் டிசெம்பர் 12ஆம் திகதி 58ஆவது படையணியுடன் இருந்த ஊடகவியலாளர்கள் மூலமே தான் தகவல் அறிந்து கொண்டார் எனச் சரத் பொன்சேகா கூறியிருந்தார்.

எனினும் டிசெம்பர் 8ஆம் திகதி என்னுடன் இடம்பெற்ற நேர்காணலின்போது சரத் பொன்சேகா அந்தக் கருத்தைக் கூறியிருக்கவில்லை.

- இப்படி அவர் சாட்சியமளித்தார்.

இந்த விசாரணைகளின்போது ஊடகவியலாளர் பெட்ரிகா ஜேன்ஸின் குறிப்புப் புத்தகமும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து குறித்த வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ளி)

## பறவைக் காய்ச்சல் விழிப்புணர்வு

சுன்னாகம், ஒக்.8

சண்டிலிப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அலுவலகத்தால் பறவைக் காய்ச்சல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

விவசாயிகள், பொது மருத்துவ மாதுக்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுக்கு இப்பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகிறன.

பறவைக் காய்ச்சல் நோயின் தாக்கம் குறித்து இப்பயிற்சி வகுப்பில் அறிவுறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-38)

## இஸ்லாமிய கலைவிழா

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் முஸ்லிம் மஜ்லிஸ் நடத்தும் இஸ்லாமியக் கலைவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெறும்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளையின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக கைத்தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் றிஷாட் பதியுதீன், சிறப்பு விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹீனைஸ் பாரூக் ஆகியோரும் கலந்துகொள்வர்.

இவ்விழாவின்போது புத்தளம் கலாசாலை மாணவி அ.சுஜா னாவின் 'செதுக்கப்படாத சிற்பங்கள்' என்ற கவிதை நூல் வெளியீடும் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (ற)


### வீட்டுக் கட்டடப் பொருள்கள் விற்பனைக்குண்டு

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் கட்டடப் பொருள்கள் கூரை, நிலை, கதவு, யன்னல், ஓடு, கொங்கிறீற் கல், அத்திபாரம் விற்பனைக்குண்டு. (ஒப்பந்தகாரர் உடைத்து அகற்ற வேண்டும்)
தொடர்பு: 077 7149666, 071 4090285

### ENGLISH

இலக்கணத்தினை கற்பதாலோ, தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு வசனத்தை மொழி மாற்றுவதாலோ நிச்சயமாக ஆங்கிலத்தினை பேச முடியாது

**ஆங்கிலம் பேசுதல் மிகமிக இலகுவானது**

சிந்தையிலிருந்து எண்ணங்கள் ஆங்கிலத்தில் உருவாகும்படி தமிழ் தொடர்பற்ற புதிய **Channel** உருவாக்குதல் மூலம் எழுத்துப்பயிற்சியோ, பாடமாக்கலோ இன்றி தமிழ் பேசுவதுபோல் ஆங்கிலத்தை மிக சரளமாக பேச கற்றுக்கொள்ளலாம்

**சனி, ஞாயிறு 3 மாத பயிற்சியின் புதிய பிரிவுகள் நாளை ஆரம்பம்**

பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், அரச, தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள் வங்கியாளர்கள், வெளிநாடு செல்லவிரும்பும் A/L எடுத்த மாணவர்கள் பயிற்சியில் சேரலாம்

**MyWay English**
182, Stanley Rd, Jaffna. 0773363456

### வீடு விற்பனைக்கு

16, அத்தியடி புது வீதியில் நிலப்பரப்பு1 குழி 5 கொண்ட காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0789119787

### தேவை

அரைக்கும் ஆலையில் வேலை செய்வதில் மில் வேலையில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.
தொடர்பு:- 0772292413

## Bsc மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

- மேற்படி பல்கலைக் கழகத்தினால் புதிய ஆண்டுக்கான பதிவுகள் கோரப் பட்டுள்ளன.
- A/L மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆகும்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- இப்பட்ட நெறியானது இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டமையாகும்.
- பரீட்சைகள் யாவும் எமது உயர்கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.

இப்பட்ட நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பம்
23/10/2010 காலை 8 மணி

குறிப்பு:-
MA, M.Com, MBA, M.Sc. ஆகிய கற்கை நெறிக்கான பதிவுகளும் நடைபெறுகின்றன.

வடமாகாண இணைப்பாளர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
T.P.NO- 2228148, 2223208 (104332)

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**
100%சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இலவசம் அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ-சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக்கொள்ளவும்.


## 7ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**அப்பாத்துரை நாகரத்தினம்**
(ஓய்வு பெற்ற அதிபர்)
திதி:பிரதமை (08.10.2010)

உள்ளத்தால் உயர்வாகி
வாழ்வுக்கு வழிகாட்டி எம்
இதயத்தில் இருக்கும் அன்பு அப்பாவே!
ஆண்டுகள் ஏழு சென்றாலும்,
அகலவில்லை உம் நினைவுகள்

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி,
மக்கள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
நாவலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

தோற்றம் 23.03.1929 மறைவு 26.09.2003

(104309)

# அரசின் பராமரிப்பில் தோட்ட வைத்தியசாலைகள்: நுவரெலியாவில் தாய்-சேய் மரணவீதம் குறைவு

## சுதேச வைத்திய அமைச்சர் அமரதுங்க தெரிவிப்பு

நுவரெலியா,ஒக். 08

நுவரெலியா மாவட்டத்திலுள்ள தோட்ட வைத்தியசாலைகள் அரசால் பொறுப்பேற்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டதன் பின்பு பெருந்தோட்டங்களில் நிகழும் தாய் - சேய் மரணங்கள் வெகுவாகக் குறைந்து வருகின்றன என மத்திய மாகாண சபை சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான சுனில் அமரதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதற்கு முன்பு பெருந்தோட்டப் புறங்களில் ஒரு லட்சம் பேருக்கு 105 என்ற சத வீதத்தில் ஏற்பட்ட மரணங்கள் இப்போது 70 சதவீதமாகக் குறைந்துள்ளன.

சுகாதார அமைச்சின் வைத்திய நிபுணர் குழுவால் நுவரெலியா மாவட்டத்தில் தாய்- சேய் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவற்றுக்கு மேலதிகமாக பொகவந்தலாவ, ரிகில்லகஸ், கடகல்ல, லிந்துலை மற்றும் மஸ்கெலியா வைத்தியசாலைகளில் விசேட வைத்திய நிபுணர்கள் குழாம் மேற்கொண்ட மருத்துவ முகாம்கள் மூலமும் தோட்ட வைத்தியசாலைகளின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

குடும்பநல மாதுகளின் நலன் கருதி தமிழ் மொழியில் அவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நுவரெலியா மாவட்டத்தைச் சேர்ந்த தோட்ட வைத்தியசாலைகளில் தாய்- சேய் மரண வீதம் கணிசமாகக் குறைந்துள்ளது. இதனை மேலும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - இப்படி அமரதுங்க தெரிவித்தார். (ளி)




# கேகாலை மாவட்டத்தில் அனர்த்த அபாய நிலை

கொழும்பு,ஒக்.8

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலையால் கேகாலை மாவட்டத்தின் பல பகுதிகளில் அனர்த்த அபாய நிலை தோன்றியுள்ளதாக மாவட்ட அனர்த்த நிவாரண முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

எட்டியாந்தோட்டை தலகொலவலயத்தில் ஏற்பட்ட மண்சரிவில் வீடொன்று பலத்த சேதத்துக்கு உள்ளாகியது. கலப்படமட, துணுமால தோட்டத்தில் நிலம் பிளவுபட்டுள்ளதால் அது விரைவில் அள்ளுண்டு செல்லக்கூடிய அபாயம் தோன்றியுள்ளது.

இதன் காரணமாக அப்பகுதி மக்கள் வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ருவன்வெலை நாரக்கல பிரதேசத்தில் 12 வயதுடைய பாடசாலை மாணவனொருவன் மின்னல் தாக்கி பலியாகியுள்ளான். அவனது சகோதரனுக்கும் எரிகாயங்கள் ஏற்பட்டுள்ளன. வீட்டின் சுவர்கள் வெடித்துள்ளதுடன், அங்கிருந்த மின் உபகரணங்கள் யாவும் மின்னல் தாக்கத்தில் செயலிழந்துள்ளன.

கொழும்பு - கண்டி பிரதான பாதையில் சுமார் 70 அடி நீளமான பகுதியொன்று சரிந்துள்ளது. மின்கம்பமொன்றும் தொலைபேசிக் கம்பமொன்றும் சரிந்து வீழ்ந்துள்ளன. பாதையில் உள்ள நீரோடைக் குழாயொன்று உடைந்து போவதற்கான சாத்தியம் தென்படுகின்றது - என அவ்விடத்தைப் பார்வையிடச் சென்ற கேகாலை மாவட்டச் செயலாளர் யூ.பீ. லியனாராச்சி தெரிவித்தார். (ளி)

# சிறுவனுக்கு கொள்ளியால் சூடுவைத்து கொடுமைப்படுத்தி வந்த பெண் கைது

கொழும்பு,ஒக்.08

கிரிஉல்ல பகுதியில் 11 வயதுச் சிறுவனை கொள்ளிக்கட்டையால் சுட்டுக் கொடுமைப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பெண்ணொருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கையில் தீக்காயங்களுக்குள்ளான இந்தச் சிறுவன் குருநாகல் வைத்தியசலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறுவனை சிறுவயது முதலே பராமரித்து வரும் பெண்ணாலேயே இவர் அடிக்கடி கொடுமைப் படுத்தப்பட்டுள்ளார். இது குறித்து சிறுவனின் பாடசாலை ஆசிரியை பாடசாலை நிர்வாகத்திற்குத் தெரிவித்தார். முறைப்பாட்டையடுத்து குறிப்பிட்ட பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இப்பெண் விசாரணைகளின் போது தெரிவித்தவை வருமாறு:-

''10 வருடங்களுக்கு முன்பு ஒரு வயதுக் குழந்தையான சிறுவனைச் சற்று நேரம் பார்த்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு அவரது தாய் கடைக்குச் சென்றார். பின்னர் அவர் பிரதேசத்தை விட்டுத் தலைமறைவாகி தங்கொட்டுவ ஓட்டுத் தொழிற்சாலைக்கு சென்றுவிட்டார்.

அன்று தொடக்கம் கடந்த 10 வருடங்களாக மிகவும் சிரமத்துடன் சிறுவனை வளர்த்துப் பாடசாலைக்கு அனுப்பினேன். சம்பவதினம் வீட்டிலிருந்த பணத்தை அவன் திருடிமாட்டிக் கொண்டதால் தண்டனையாக கையில் சூடு வைத்தேன்'' எனக் கூறியுள்ளார்.

எனினும், இதற்கு முன்பும் இப்பெண் சிறுவனை பல்வேறு விதங்களில் இம்சைப்படுத்தி வந்துள்ளார். மரத்தில் கட்டி வைத்து தண்டனை வழங்கியுள்ளார் என அயலவர்கள் தெரிவித்துள்ளனர். (ளி)

# வடமேல் மாகாணப் பாடசாலைகளின் தரம் 1 நேர்முகப் பரீட்சைகள் இரத்து

## மீண்டும் நடத்துவதற்குத் தீர்மானம்

கொழும்பு, ஒக்.08

வடமேல் மாகாணத்திலுள்ள 400 பாடசாலைகளில் அடுத்த வருடம் முதலாம் தரத்தில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சைகளை மீண்டும் நடத்துமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் சகல பாடசாலை அதிபர்களையும் பணித்துள்ளார்.

பரீட்சைகள் மீண்டும் நடைபெறும் போது மாகாணக் கல்வியமைச்சின் இரு அதிகாரிகள் பிரசன்னமாகியிருப்பர். அவகளில் ஒருவர் தேர்வுக்குழுவில் தலைவராகப் பதவி வகிப்பார் - என மாகாணக் கல்விப் பணிப்பாளர் சுற்று நிருபமொன்றின் மூலம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

கல்விப் பணிப்பாளரின் சுற்று நிருபத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், கல்வியமைச்சின் செயலாளரின் அறிவுறுத்தலின்படி சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களே தேர்வுக்குழுவின் தலைவர்களாகச் செயற்படுவார்கள் - என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

எனினும், மாகாணக் கல்விக் காரியாலயப் பிரதிநிதிகள் தேர்வுக்குழுவில் இடம்பெறக் கூடாது என கல்விமைச்சு அதிபர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

ஒன்றுக்கொன்று முரணான இந்த அறிவித்தல்கள் பற்றி வடமேல் மாகாணக் கல்விப்பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

மாகாண ஆளுநரின் உத்தரவுக்கமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நேர்முகத் தேர்வுகளில் பாரதூரமான முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன. இதன் காரணமாகவே நேர்முகப் பரீட்சைகளை மீண்டும் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது - எனக் கூறினார். (ளி)

# திருமலை - மூதூர் கப்பல் சேவையை ஆரம்பிக்கக் கோரி தனிநபர் பிரேரணை

பன்குளம், ஒக். 8

இடைநிறுத்தப்பட்டுள்ள திருகோணமலை - மூதூர் கப்பல் சேவையை ஆயிரக்கணக்கான பயணிகளின் நலன் கருதி, காலதாமதமின்றி மீள ஆரம்பிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு கிழக்கு மாகாண சுகாதார, விளையாட்டுத்துறை, தொழில்நுட்பக் கல்வியமைச்சர் அல்ஹாஜ் எம்.எஸ். சுபைர், கவனஈர்ப்பு தனிநபர் பிரேரணையொன்றை நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற கிழக்கு மாகாண சபையின் மாதாந்தக் கூட்டத்தில் சமர்ப்பித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டவை வருமாறு-

திருகோணமலை - மூதூர் கடல்வழிப்பயணத்தில் 'சேருவில-02' என்னும் கப்பலை இலங்கைத் துறைமுக அதிகாரசபை கடந்த 2000ஆம் ஆண்டு முதல் சேவைக்குப் பயன்படுத்தி வந்தது.

இக்கப்பல் சேவை மிகவும் அத்தியாவசியமானது. மூதூரில் இருந்து மிகவும் இலகுவான முறையில் திருகோணமலையைச் சென்றடைவதற்கு இச்சேவை ஏதுவாக அமைந்துள்ளது. மூதூரிலிருந்து நாளாந்தம் திருகோணமலைக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் அரச அலுவலகங்கள், நீதிமன்றங்கள், வைத்தியசாலைகள் ஆகியவற்றுக்குச் செல்கின்றனர்.

முக்கிய அரச அலுவலகங்கள், வங்கிகள், வைத்தியசாலைகள் ஆகியவை திருகோணமலையில் அமைந்திருப்பதால் பொதுமக்கள் நாளாந்தம் செல்ல வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உட்பட்டுள்ளனர்.

மூதூரில் இருந்து தரைவழியாகத் திருகோணமலைக்குச் செல்வதாயின் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. இதற்கு அதிக நேரத்தையும், அதிக பணத்தையும் செலவிட வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆனால் கடல்வழிப் பயணமோ மிகவும் இலகுவான பிரயாணமாகும்.

ஆயினும் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக 'சேருவில-02' என்னும் கப்பல் திருத்த வேலைக்குட்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கப்பல் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இத் திருத்த வேலைப் பணிகள் கவனிப்பாரற்ற நிலையில் உள்ளமையை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

பௌத்த மக்களின் சேருவில விகாரைக்கான புனித யாத்திரையை மையமாக வைத்தே மூதூர் - திருகோணமலைச் சேவையில் ஈடுபட்ட கப்பலுக்கு இலங்கைத் துறைமுக அதிகாரசபை 'சேருவில -02' எனப் பெயரிட்டது.

இக் கப்பல் திருத்த வேலை தாமதமடைவதால் மூதூர்-திருகோணமலை பயணத்தில் ஈடுபட்டு வரும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள், நோயாளிகள், மாணவர்கள், அரச அலுவலர்கள், உல்லாசப் பயணிகள், யாத்திரிகர்கள் ஆகியோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது வட கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டுள்ள அமைதிச் சூழ்நிலை காரணமாக ஆயிரக்கணக்கான உள்ளூர் உல்லாசப் பயணிகளும் கப்பல் சேவையின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே திருத்த வேலைக்காக இடைநிறுத்தப்பட்டுள்ள 'சேருவில -02' என்னும் கப்பலை உடனடியாகத் திருத்தி சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் திருகோணமலை கடல் வழிப் பயணத்தில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான பொது மக்களின் அத்தியாவசிய தேவையைப் பூர்த்தி செய்யலாம்.

ஆகவே 'சேருவில-02' கப்பல் சேவையை உடனடியாக மூதூர்- திருகோணமலை கடல் வழிப் பயணத்தில் ஈடுபடுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அத்துடன் ஜனாதிபதி உடனடியாக அக்கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு உத்தரவு விடுக்குமாறும் இச்சபையைக் கேட்டுக் கொள்கின்றேன்- இப்படி அவர் தெரிவித்தார். (ளி)

# மீன்பிடி இயந்திரப் படகுகளுக்கு கட்டாய அனுமதிப் பத்திரம்

மட்டக்களப்பு, ஒக்.8

ஆழ்கடல் மீன்பிடி இயந்திரப் படகுகளுக்கு கிழக்கு மாகாணத்தில் அனுமதிப்பத்திரம் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது.

கடற்றொழில் திணைக்களத்தின் மட்டக்களப்புக் காரியாலயத்தில் இதற்கான அனுமதிப்பத்திரம் பெறப்படவேண்டும்.

படகுகளுக்கான அனுமதிப் பத்திரப் பரிசோதனை வாழைச்சேனை துறைமுக முகாமிலும், பேத்தாழை கடற்படை முகாம்களிலும் மேற்கொள்ளப்படும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 500 இயந்திரப் படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 800ஆழ் கடல் மீனவர்கள் அடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்துள்ளனர்.

எனினும் 300பேருக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என கடற்றொழில் திணைக்கள மட்டக்களப்பு மாவட்டப் பிரதிப் பணிப்பாளர் ஏ.டி.ஜோர்ஜ் தெரிவித்தார். (ளி)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை பெரும் நிலப்பரப்பில் நெற்செய்கை

மட்டக்களப்பு, ஒக்.8

மட்டக்களப்பு மாவட்டத்தில் பரந்த அளவில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

2006ஆம் ஆண்டில் 25,461 ஹெக்டயராக இருந்த நெற்செய்கை விஸ்தீரணம் 2009ஆம் ஆண்டில் 58,320 ஹெக்டயராக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நெல் விளைச்சல் 2007/ 2008ஆம் பெரும்போகத்தில் 80,000மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது.

அரசின் உரமானியம், தரையைப் பண்படுத்தலுக்கான உதவி, விவசாய உபகரணங்கள் விநியோகம் ஆகியவற்றின் மூலமாக விவசாயிகள் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டுள்ளார்கள்.

இதேவேளை, விவசாயத்துக்கு உதவும் பொருட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர்ப்பாசனத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன.

புளுகுணாவி நீர்ப்பாசனத் திட்டம் 43 கோடியே 20லட்சம் ரூபா செலவிலும், உறுகாமம் திட்டம் 34 கோடி ரூபா செலவிலும், நவகிரி நீர்ப்பாசனத் திட்டம் 2 கோடி ரூபா செலவிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

- இப்படி மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் குறிப்பிட்டுள்ளார். (ளி)




# காத்தான்குடியிலிருந்து 300 பேர் ஹஜ்யாத்திரை

மட்டக்களப்பு, ஒக்.8

இம்முறை புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக கிழக்கு மாகாணத்தின் பழம் பெரும் முஸ்லிம் பிரதேசமான காத்தான்குடியிலிருந்து சுமார் 300பேர் புனித மக்கா பயணமாகவுள்ளனர்.

காத்தான்குடியிலிருந்து முதலாவது ஹஜ் யாத்திரிகர்கள் குழு இம்மாதம் 16ஆம் திகதி பயணமாகும். இலங்கையிலிருந்து முதலாவது ஹஜ் பயணிகள் புறப்படும் விமானத்தில் இக்குழுவினரும் செல்வர்.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஏனைய ஹஜ் முகவர் நிலையங்கள் ஆகியவற்றிற்கு ஊடாக மக்காவிற்குப் பயணிக்கும் ஏனைய ஹஜ்ஜாஜிகள் 20 ஆம் திகதி முதல் பயணமாவர்.

இம்முறை காத்தான்குடியில் அங்கீகரிக்கப்பட்ட 3 முகவர் நிலையங்களூடாகவும் கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலுமுள்ள முகவர் நிலையங்களூடாகவும் ஹஜ்ஜாஜிகள் புனித ஹஜ் கடமைக்காகச் செல்லவுள்ளனர்.

காத்தான்குடியிலுள்ள முகவர் நிலையங்களூடாக ஹஜ் கடமைக்கு புனித மக்கா செல்வோருக்கான பொது பிரியாவிடை வைபவம் எதிர்வரும் 13ஆம் திகதி காத்தான்குடி ஜாமியுழ்ழாபிரீன் பெரியபள்ளிவாசலில் நடைபெறும். பள்ளி வாசல்களும், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனமும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன. (ளி)

# லெபனானில் அமைதி காக்கும் பணியில் இலங்கை இராணுவம்

கொழும்பு, ஒக். 8

லெபனானில் அமைதிகாக்கும் படையில் பணியாற்றுவதற்கு இலங்கை இராணுவம் அனுப்பப்படவுள்ளது.

இது தொடர்பாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெடவெல தகவல் வெளியிடுகையில்,

அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்தில் லெபனானுக்கு இலங்கை இராணுவத்தினர் அமைதிப் படையில் பணியாற்ற அனுப்பப்படவுள்ளனர்.

லெபனான் அரசாங்கத்திடம் இருந்து கிடைத்த அழைப்பை அடுத்தே இலங்கை அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

படையினர் அங்கு அமைதி காக்கும் பணியில் ஈடுபடுவார்கள்.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான 30 வருடப் போரை வெற்றி கொண்டதையடுத்து இலங்கை இராணுவத்துக்கு அனைத்துலக ரீதியாக மிகப்பெரிய கேள்வி எழுந்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை ஏற்கனவே இலங்கை இராணுவத்தினர் ஹெய்டியில் ஐ.நா. அமைதிக்காக்கும் படையில் பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (த)

# பொன்சேகா அல்லது குடும்பம் மன்னிப்புக் கேட்டேயாக வேண்டும்

## ஜனாதிபதி மஹிந்த பிடிவாதம்

கொழும்பு, ஒக்.8

சரத் பொன்சேகா அல்லது அவரது குடும்ப உறுப்பனர்களிடம் இருந்த வரும் பொதுமன்னிப்புக் கோரிக்கையை மட்டுமே தன்னால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள முடியும் என்று சிறிலங்கா அதிபர் மகிந்த ராஜபக்ச திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அரசியல் நோக்கம் கொண்ட பொதுமன்னிப்புக் கோரிக்கைகளை கவனத்தில் எடுக்க முடியாது.

ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து வந்தாலும் சரி, வேறெவரிடம் இருந்து வந்தாலும் சரி அத்தகைய பொதுமன்னிப்புக் கோரிக்கையை நான் கவனத்தில் எடுக்கப் போவதில்லை.

சரத் பொன்சேகா அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களில் எவரேனும் தான் மன்னிப்பு அளிக்கும்படி கோர வேண்டும்.

1980களில் நக்சல் தீவிரவாதத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சிறைக்கு அனுப்பப்பட்ட விஜயகுமாரணதுங்கவின் சார்ப்பில் அவரது மனைவி சந்திரிகா மன்னிப்புக் கோரிக்கையை விடுத்தார்.

அதன்படியே அவர் விடுதலை செய்யப்பட்டார். அந்த நடைமுறையை மாற்ற முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விவகாரம் குறித்து அமைச்சர்கள் பலரும் கருத்து வெளியிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவரின் 'இளவரசன்' சஞ்சிகை வெளியீட்டு விழாவின்போது, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டி கோட்டக்கல்வி அதிகாரி தெய்வேந்திரராஜா விடமிருந்து மாணவன் பி.அபிஷேக் நூலின் சிறப்புப் பிரதி பெறுவதையும் அருகில் அதிபர் இ.இராகவன் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: கர்ணன்)*

# இஸ்லாமிய மாணவர்களின் ஆற்றுகைகளை வெளிப்படுத்தவுள்ள இஸ்லாமியக் கலை விழா

**கோப்பாய் ஆசிரிய கலாசாலை 'முஸ்லிம் மஜ்லிஸ்'ஸின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் இஸ்லாமியக் கலை விழா இடம்பெறுகிறது. அதனையொட்டி இந்த ஆக்கம் இங்கு இடம்பெறுகிறது.**

இஸ்லாம் என்ற சொல் அராபியவினைச் சொல்லான 'அஸ்லம' என்பதிலிருந்து பிறந்துள்ளது. 'அஸ்லம' என்றால் ஏற்றுக்கொள்ளுதல், சரணடைதல், கீழ்ப்படிதல் எனப்பொருள்படும். எனவே கடவுளை ஒத்துக்கொண்டு சரணடைதலே இஸ்லாம் என்பதனால் பெறப்படுகின்றது.

நம்பிக்கைக்கு இஸ்லாம் அதிக முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது. இப்பிரபஞ்சத்தில் உள்ளவைகள் அனைத்தும் இறைவனால் படைக்கப்பட்டவையாகும். இந்த அடிப்படையில் ஆறு விடயங்கள் குறித்து நம்பிக்கை கொள்ள வேண்டும் என இஸ்லாம் போதிக்கின்றது.

1. இறைவன் ஒருவனே; அவனது தூதர் முஹம்மது (ஸல்) என நம்புதல்.

2. மனிதனது புலன் உறுப்புக்களால் புரிந்துகொள்ள முடியாத, இறைவனது கட்டளைகளைச் செயற்படுத்துவதற்காக மட்டும் ஒளியைக்கொண்டு படைக்கப்பட்ட சக்திகளான 'மலக்குகளை' நம்புதல்.

3. முஹமது (ஸல்) அவர்களுக்கு முன்னர் வாழ்ந்த இறை தூதர்களுக்கு வேதங்கள் கொடுக்கப்பட்டது உண்மையே; என்பதனை நம்புதல்.

4. முன்னர் வாழ்ந்த இறை தூதர்களை நம்புதல். இதன்படி ஒரு லட்சத்து 24 ஆயிரம் நபிமார் உலகிற்கு அனுப்பப்பட்டனர். இவர்களுள் 25 தூதர்களுடைய பெயர்கள் திருக்குரானில் கூறப்பட்டுள்ளன.

5. இறப்பிற்குப் பின் வாழ்க்கை உண்டு என நம்புதல்.

6. விதிக் கொள்கையை ஓம்புதல். இது 'கலாகதர்' எனத் திருக்குரானில் கையாளப்படுகிறது.

இந்த நம்பிக்கைகளின் அடிப்படையில் அமைந்த இஸ்லாத்தின் புனித நூலாக 'திருக்குர் ஆன்' விளங்குகின்றது.

இந்நூலில் உள்ள அனைத்து வாக்கியங்களும், சொற்களும் இறைவனால் கூறப்பட்டவையாகும். இவ் வாசகங்களை இறைவன் மலக்குகளின் தலைவர் ஜுப்ரயில் (அலை) அவர்கள் மூலமாக முஹம்மது நபிக்கு அறிவித்தான்.

திருக்குர் ஆனின் வாசகங்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. ''இந்த உலகில் அல்லாஹ் மனிதனைப் படைத்த மறுகணமே மனிதனுக்கு அறிவைக் கற்றுக் கொடுத்தான்'' எனத் திருக்குர் ஆன் பேசுகிறது. மேலும் ''நபியே, உமது இறைவனின் திருநாமத்தைக் கொண்டு படிப்பீராக'' என்றும் ''அறிவினைப் பெற்றுக்கொள்வது ஆண், பெண் இருபாலாரதும் கட்டாயக் கடமையாகும்'' என்றும் குர்ஆன் குறிப்பிடுகின்றது.

அறிவூற்றாக விளங்கும் கல்வியை மற்றவர்களுக்குப் போதிப்பது சிறந்த கொடையாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கல்வி பற்றிப் போதிக்கும் வாசகங்கள் முக்கியத்துவமானவை. 'கற்பவனாக இரு அல்லது கற்றுக் கொடுப்பவனாக இரு அல்லது கற்பதற்கு உதவி செய்பவனாக இரு. நான்காம் நபராக இருந்து விடாதே'' என்ற அவரது வாசகம் ஆசிரியத்துவத்தின் மிகிமையையும் எடுத்தியம்புகிறது.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2009, 2010 கல்வி ஆண்டுகளில் 200 இற்கும் மேற்பட்ட இஸ்லாமிய மாணவர்கள் கல்வி கற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். ஆசிரியரியலைப் பயிலும் சூழலில் இன்று (08.10.2010) இஸ்லாமியக் கலைவிழா எடுத்து ஆசிரியத்துவத்தை வெளிக்காட்டும் வாய்ப்பை இறைவன் இவர்களுக்கு நல்கியிருக்கின்றான்.

வட புலத்தில் இஸ்லாமிய சகோதரர்கள் மீளக்குடியமர்ந்த பின்னர் இடம்பெறும் முதலாவது இஸ்லாமியக் கலைவிழா என்ற நிலையிலும் பெரும்பாலும் வடபுலம் சார்ந்த இஸ்லாமிய மாணவர்களின் ஆற்றுகைகள் வெளிப்படுகின்ற விழா என்ற நிலையிலும் இவ்விழா முக்கியத்துவம் பெறுகிறது.

மிக நீண்ட காலத்தின் பின்னர் வட புலத்தில் இஸ்லாமியச் சகோதரர்கள் தங்கள் தமிழ்ச் சகோதரர்களுடன் இணைந்து கற்கவும், யாழ்ப்பாணத்து ஆசான்களிடம் பாடங் கேட்கவும் வாய்ப்பைப் பெற்றமை இறைவன் நல்கிய கிருபையேயாகும்.

காலை, மாலை என இரண்டு அமர்வுகளாக இன்று இடம்பெறும் இவ் விழாச் சிறப்படைய - இறையருள் கை கூடப் பிரார்த்திப்போம்.

**அப்துல் லத்தீப் பிலால்**
*தலைவர், முஸ்லிம் மஜ்லிஸ்*
*கோப்பாய் ஆசிரிய கலாசாலை*

# நாடாளுமன்றத்துக்குரிய மைதானத்தை யாருக்காவது விற்றுவிட்டீர்களா?

## ஜோசப் மைக்கல் பெரேரா கேள்வி

கொழும்பு, ஒக்.08

நாடாளுமன்றத்திற்குச் சொந்தமான விளையாட்டு மைதானத்தை யாருக்காவது விற்றுவிட்டீர்களா அல்லது குத்தகைக்கு விட்டுள்ளீர்களா? இதனைத் தெளிவுபடுத்தவேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார் ஐ.தே.க. உறுப்பினரான ஜோஸப் மைக்கல் பெரேரா.

நாடாளுமன்றத்திற்கு அருகில் உள்ள விளையாட்டு மைதானம் நாடாளுமன்றத்திற்குச் சொந்தமானது. ஆனால் அங்கு தொடர்ச்சியாகக் களியாட்டங்கள் நடைபெறுகின்றன. மைதானம் சேறும் சகதியுமாக இருக்கின்றது. இது நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்குக் குந்தகம் ஏற்படுவதாக இருக்கின்றது. இதனைச் சபாநா யகர் பரிசீலனை செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார் ஜோஸப் மைக்கல் பெரேரா.

உறுப்பினர் முன்வைத்த விடயம் தொடர்பாகப் பரிசீலனை செய்யப்படும் எனச் சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

### அவையில் கேட்டவைகள்

இதனைத் தொடர்ந்து வழமை போல் உறுப்பினர்களின் வாய்மூல விடைக்கான பதில்கள் அளிக்கப்பட்டன.

பெரும்பாலான கேள்விகளுக்கு ஆளும் கட்சிக் கொரடாவான அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவே பதில் அளித்துக்கொண்டிருந்தார்.

இவ்வேளையில் ஐ.தே.க. உறுப்பினர் ரவி கருணாநாயக்க பூர்வாங்க ஆட்சேபனை ஒன்றைக் கிளப்பிவிட்டார்.

அமைச்சர்களிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு பிரதம கொரடாவே பதில் அளிக்கின்றார். அவரிடம் இணைக் கேள்விகளை எழுப்ப முடியாமல் இருக்கின்றது. அப்படியே கேட்டாலும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு அறிவிப்பதாகக் கூறிச் சமாளித்து விடுகின்றார். இதனால் கேள்வி கேட்பதில் எந்தப் பயனும் கிடைப்பதில்லை. எனவே எமது கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதில் அளிக்க வேண்டும் என்று கூறினார்.

ரவி கருணாநாயக்கவின் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சபாநாயகர் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அல்லது பிரதி அமைச்சர்கள் வந்து பதில் அளிக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

கேள்வி நேரம் முடிவடைந்த பின் விமான சேவைகள் தொடர்பான 'குடியியல் வான் செலவுகள்' தொடர்பான திருத்தச்சட்ட வரைபை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சபையில் சமர்ப்பித்தார்.

இத்திருத்தப் பிரேரணை மீதான விவாதம் தொடர்பாக சபையில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது.

அதாவது,விவாதம் நடைபெறும்போது அதில் கொண்டுவரப்படும் திருத்தங்களின் பிரதி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படவேண் டும். ஆனால் அதன் பிரதி எங்களுக்கு வழங்கப்படவில்லை. இப்படியான நிலையில் நாம் எப்படி எங்களுடைய கருத்துகளை வெளிப்படுத்த முடியும் என எதிரணி உறுப்பினர்களான ஜோஸப் மைக்கல் பெரேரா, சுனில் ஹந்துன்நெத்தி உட்படப் பலரும் ஆட்சேபனை எழுப்பினர்.

இது தொடர்பாக ஆளும்கட்சிக் கொரடா விளக்கம் அளித்தார்.

இவ்விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி நேற்று நாடாளுமன்றிற்கு வருகை தந்து இந்தச் சட்டம் தொடர்பான ஆலோசனைக் குழுக் கூட்டத்தை நடத்தினார். இக் கூட்டத்தில் பல்வேறுபட்ட விடயங்கள் பரிசீலனை செய்யப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இக்கூட்டங்களில் ஐ.தே.க.உறுப்பினர் ரவி கருணாநாயக்கவும் கலந்துகொண்டார். அவருக்கு இவ்விடயம் நன்கு தெரியும். குழுநிலை விவாதத்தின் போது திருத்தங்களின் நகல்கள் வழங்கப்படும் என்று கூறினார்.

குழுநிலை விவாதத்தின்போது உறுப்பினர்கள் பேசுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுவதில்லை. எனவே எமக்கு திருத்தத்தின் நகல்கள் வழங்கப்பட்ட பின்னரே விவாதம் நடத்தவேண்டும் என வாதிட்டனர் எதிர்க்கட்சி உறுப்பினர்கள். எனினும், அவர்களின் கோரிக்கை எடுபடவில்லை. இதனை அவதானித்த சபாநாயகர் திருத்தங்களின் பிரதிகளைத் தாமதமின்றி உறுப்பினர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டார்.

எதிர்க்கட்சிகளின் சார்பில் ரவி கருணாநாயக்க விவாதத்தை ஆரம்பித்துப் பேசினார். அவர் பேச எழுந்த நேரம் முதல் ஆளும் தரப்பு உறுப்பினர்கள் அவருக்கு குறுக்கீடு செய்துகொண்டே இருந்தனர்.

ரவி கருணாநாயக்க இன்று தேசிய சொத்துகள் எல்லாம் தனியார் மயப்படுத்தப்படுகின்றன என்று குற்றம்சாட்டினார். அப்போது, 'மிஹின் எயார்' விமானசேவை பற்றியும் விட்டு வைக்கவில்லை.

அப்போது ஆளும் தரப்பு பின்வரிசை உறுப்பினர்கள், ''சதொச சொத்துகள் எங்கே? முண்டா கேஸ் எங்கே?'' என கோஷம் எழுப்பினர்.

இவ்விடயம் தொடர்பாக பகிரங்க விவாதம் நடத்துவோமா என்றும் கேட்டனர்.

விவாதம் நடத்த நான் தயார். ஆனால், உங்களுடைய அரச ஊடகத்தில் அல்ல. தனியார் ஊடகங்களில் விவாதிப்போம். உங்கள் மிஹின் எயார் தொடர்பாகவும் விவாதிப்போம் என்றார். ஒருவழியாக கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் பேச்சை முடித்தார் ரவி கருணாநாயக்க.

தொடர்ந்து ஜே.வி.பி. உறுப்பினரான சுனில் ஹந்துன்நெத்தி பேசினார். அப்போதும் இடையூறுகள் குறையவில்லை.

நேற்றைய விவாதத்தில் இரு தரப்பு உறுப்பினர்களும் பெரிதாக ஆர்வம் காட்டவில்லை.

இறுதியாக விமான சேவைகள் பிரதி அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன விவாதத்துக்குப் பதில் அளித்தார்.

அவ்வேளையில், அவசரமாக சபைக்குள் வந்த ரவி கருணாநாயக்க, ''என்னுடைய பெயர் இங்கு உச்சரிக்கப்பட்டது. அதனால் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்புகிறேன்'' என்றார்.

எயார் லங்கா, டெலிகொம் போன்ற நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்தியது உங்களுடைய அரசுதான். எல்லா விடயங்களுக்கும் ஐ.தே.கவை குற்றம் சுமத்தக்கூடாது என்றார் ரவி கருணாநாயக்க.

அப்போது பதில் அளித்துக்கொண்டிருந்த பிரதி அமைச்சர் ஒரு சுவாரஸ்யமான கூற்றை வெளிப்படுத்தினார்.

நண்பர் வழமையான கோட் சூட்டை விட்டு விட்டு யாருடைய உடுப்பையோ போட்டுக் கொண்டு வந்துள்ளார்.

அவர் அவசரமாக வந்தபோது எங்கே கால் தடுக்கி விழுந்து விடுவாரோ என்று பயந்தார். அப்படி அவர் விழுந்திருந்தால் நிலைமை என்னவாகி இருக்கும் என்றார்.

அப்போது ரவி கருணாநாயக்க உட்பட எல்லோருமே சிரித்துவிட்டனர்.

# 42 பணியகங்கள், 3 பிரிவுகளுடன் இயங்குகிறது விடுதலைப்புலிகளின் அனைத்துலக வலையமைப்பு

## நல்லிணக்க ஆணைக்குழு முன் றொகான் குணரட்ண

கொழும்பு, ஒக். 8

இலங்கை இராணுவத்தால் விடுதலைப்புலிகள் அமைப்பு இல்லாதொழிக்கப்பட்டு ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் இன்னமும் அப்படியே இருக்கும் அந்த அமைப்பின் அனைத்துலக வலையமைப்பை இல்லாது செய்வதில் அரசாங்கம் சிறிதும் கவனம் செலுத்தவில்லை என சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான றொகான் குணரட்ண கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகள் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், நியூசிலாந்து மற்றும் அவுஸ்ரேலியாவில் 42 பணியகங்களை வைத்திருப்பதாகப் பயங்கரவாதம் தொடர்பான வல்லுநரான றொகான் குணரட்ண கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் பயங்கரவாதம் 17 மாதங்களுக்கு முன்னரே இல்லாதொழிக்கப்பட்டபோதும், விடுதலைப்புலிகளின் அனைத்துலக வலையமைப்பை இல்லாது செய்யவேண்டியதன் அவசியத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளிலுள்ள விடுதலைப்புலிப் போராளிகளின் மனநிலை மாறவில்லை. அரசாங்கம் அந்த அனைத்துலக வலையமைப்பை இல்லாது செய்வதில் எந்தக் கவனமும் செலுத்தவில்லை என அவர் குறிப்பிட்டதாக டெய்லி நியூஸ் பத்திரிகை தெரிவிக்கிறது.

பல்வேறு நாடுகளிலும் நிதி சேகரிக்கும் நடவடிக்கை வேறுபட்ட வடிவங்களை எடுத்துள்ளது. அது நன்கொடை, அரச சார்பற்ற நிறுவனம், இலாபநோக்கற்ற நிறுவனம் போன்ற வடிவங்களை எடுத்திருப்பதாக அவர் ஆணைக்குழுவின் முன்னிலையில் தெரிவித்தார்.

முன்னாள் சட்டமா அதிபர் சித்த ரஞ்சன் டி சில்வா தலைமையிலான இந்த ஆணைக்குழுவிடம் விடுதலைப்புலிகளின் அனைத்துலக வலையமைப்பு பரப்புரை, நிதி சேகரிப்பு, ஆயுதக் கொள்வனவு மற்றும் கப்பல்துறை என 3 பிரதான பிரிவுகளைக் கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்சவினால் இந்த ஆண்டு மே மாதம் நியமிக்கப்பட்ட எட்டுப்பேர் கொண்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவானது பெப்ரவரி 2002 முதல் மே 2009 வரை இடம்பெற்ற சம்பவங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதுடன், எதிர்காலத்தில் இத்தகைய சூழ்நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பதையும் பரிந்துரைக்கும்.

அனைத்துலக பரப்புரையில் ஈடுபடும் விடுதலைப்புலிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் பல்வேறுபட்ட தவறான தகவல்களைப் பரப்புவதுடன் அரசாங்கத்திற்கும் படையினருக்கும் எதிராகப் புனையப்பட்ட கதைகளையும் கூறிவருகின் றனர் என்கிறார் வல்லுநர்.

போரின் இறுதி நாள்களில் அரசாங்கத்தினால் 'சூனியப் பிரதேசம்' என அறிவிக்கப்பட்ட பகுதிகளில் 7000 இற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர் என்று பரப்புரை செய்து அனைத்துலக ஊடகங்களை நம்பவைப்பதில் புலம்பெயர்ந்த நாடுகளில் செயற்படும் விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்கள் வெற்றி கண்டுள்ளனர் என்பதை குணரட்ண சுட்டிக்காட்டியதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

உண்மையான தொகை 1400 எனவும் அவர் தெரிவித்தார். தான் மரண விசாரணை அதிகாரிகளையும் வைத்தியர்களையும் விசாரித்ததாகவும் இந்தத் தொகை 1400இற்கும் அதிகமில்லையென அவர்கள் வலியுறுத்தியதாகவும் குணரட்ண தெரிவித்தார்.

எவ்வாறிருந்தும், விடுதலைப் புலிகளின் பிரசாரத்தில் கூறப்பட்டதைப்போலவே, அமெரிக்காவும் இன்னும் 7000 மக்கள் கொல்லப்பட்டதாகக் கூறிவருகிறது எனவும் உண்மையில் சூனியப் பிரதேசத்தில் என்ன நடைபெற்றது என்பதைத் தெளிவுபடுத்துவதற்கு அரசாங்கம் தவறிவிட்டது எனவும் குணரட்ண தெரிவித்தார். (த)

# செயலமர்வு

சுன்னாகம், ஒக். 8

வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் 10ஆம், 11ஆம் தரங்களில் விவசாயமும் உணவுத் தொழில்நுட்பவியலும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை சனிக்கிழமை மானிப்பாய் ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. (த-38)

# ஒன்றுகூடல்

கைதடி, ஒக். 8

யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகத்தில் கடமை புரியும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் அத்துறை சார்ந்த நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் ஆகியோருக்கான மாதாந்த ஒன்றுகூடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்லத்திலுள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாக மாவட்ட சமூகசேவை அலுவலர் ஆ.ஞானவேல் தெரிவித்துள்ளார். (ந-288)

# புலிகளின் முக்கிய சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்பட மாட்டார்கள்

## தேசிய பாதுகாப்புச் சபை தீர்மானம்

கொழும்பு, ஒக். 8

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் இயக்க முக்கிய சந்தேக நபர்கள் எவருமே விடுதலை செய்யப்படமாட்டார்கள் என்று இலங்கை காவல்துறை தலைமையகம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

தடுப்புக்காவலில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய சந்தேக நபர்கள் தொடர்பாக இலங்கையின் தேசிய பாதுகாப்புச் சபை நேற்றுமுன்தினம் கூடி ஆராய்ந்துள்ளது.

இந்தக் கூட்டதிலேயே முக்கிய சந்தேக நபர்களை விடுதலை செய்வதில்லை என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இலங்கை காவல்துறை தலைமையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தேசிய பாதுகாப்பு சபையின் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ளவர்கள் மீதான சாட்சியங்களுக்கு ஏற்ப, அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வருகிறது.

ஆதாரங்கள் உள்ள பயங்கரவாத சந்தேக நபர்கள் எவருமே விடுதலை செய்யப்படமாட்டார்கள்.

இதேவேளை, போதுமான சாட்சியங்கள் இல்லாத சந்தேக நபர்களை விடுதலை செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தடுப்புக்காவில் உள்ள அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு இலங்கை அரசுக்கு அண்மைக் காலமாக அழுத்தங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்தநிலையிலேயே புலிகள் இயக்க முக்கிய சந்தேக நபர்களை விடுவிக்க முடியாது என்று இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. (த)

# மணியந்தோட்டத்தில் காணிகளை துப்புரவு செய்ய அனுமதியில்லை

அண்மையில் மீளக்குடியமர்ந்த மணியந்தோட்டத்தில் முதலாம் 2ஆம் குறுக்குத் வீதிப் பகுதிகளில் காணிகளை துப்புரவு செய்யவும் குடியேறவும் இதுவரை அனுமதிக்கப்படவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் வெடிபொருள்களின் அச்சம் காணப்படுவதால் பாதுக்காப்புக் கருதி மீள்குடியமர்வை தாமதப்படுத் தியுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை மணியந்தோட்டத்தின் முற்பகுதிகளில் கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை காண முடிகிறது.

பல இடங்களிலும் பற்றைகளுக்குள் வெடிபொருள்கள் காணப்பட்டு அவை அப்பகுதி படையினரால் அகற்றப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (த-135)

# உயர்தரப் பாடசாலையாக கல்வியில் உயர்ந்து நின்று நூற்றாண்டு விழாக் காணும் நவாலி மகா வித்தியாலயம்

*1910 இல் ஆரம்பிக்கப்பட்ட நவாலி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.*

வலிகாமம் தென்.மேற்கில் வயல் சார்ந்த - கடற்கரையை அண்டிய இயற்கை எழில் நிறைந்த இனிய கிரமம் நவாலி.

இக்கிராமத்தின் நடுவே புலவர் - பண்டிதர் - கல்வியாளர் - ஆசிரியர்களின் உயர்ந்த சிந்தனையால் தோற்றம் பெற்றுத்தான் நவாலி மகா வித்தியாலயம்.

1910 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நவாலியில் சைவப்பாடசாலையாக 'பார்வதி வித்தியாலயம்' என்னும் நாமத்துடன் இவ்வித்தியாலயம் உருப்பெற்று வளர்ச்சி காணத் தொடங்கியது.

இதற்கான கருவூலத்தை பண்டிதர் தம்பையா, க.சோமசுந்தரப் புலவர், இராமலிங்க உபாத்தியாயர் சி.சுப்பையா ஆசிரியர் ஆகியோர் மேற்கொண்ட அயராத முயற்சியும் - கடும் உழைப்பும் ஏற்படுத்தின.

1919 ஆம் ஆண்டு உடுவில் வட்டார வித்தியாதரிசி க.தில்லையம்பலத்தின் உதவியுடன் இப்பாடசாலை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கல்வியிலும் - ஏனைய சக நிகழ்வுகளிலும் தன்னை வெளிக்காட்டிய இப் பாடசாலை 1951 இல் கனிஷ்ட வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது. பின் 10 ஆண்டு (1961) களின் பின்னர் ''நவாலி மகா வித்தியாலயம்'' என இன்னும் தனது தரத்தை அதிகரித்து உயர்தரப் பாடசாலையாக நவாலியில் மட்டுமல்லாது கல்விப் புலத்தில் வலிகாமத்தில் - ஒரு தனித்துவமான பாடசாலையாக மிளிர்ந்தது.

பாடசாலை வரலாற்றில் இக்காலம் ஒரு ''பொற்காலமாக'' வர்ணிக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் க.நவரட்ணராஜா அதிபரின் கீழ் பாடசாலை துரித அபிவிருத்தியைக் கண்ட காலம் ஆகும்.




அன்று உயர்தரப் பாடசாலையாக விளங்கிய நவாலி மகா வித்தியாலயம் முதன்முதலாக இரு பெண்களை பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி மாவட்டத்தில் ஒரு புதிய சாதனை ஏற்படுத்தியது இக்காலத்தில் தான்.

அவ்வாறு பல்கலைக்கழகம் புகுந்து வெளியேறிய கல்விமான்களாக நவாலியூரைச் சேர்ந்த முன்னாள் கல்வி பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன், உடுவில் மாக்ஸ் பாடசாலை முன்னாள் அதிபர் திருமதி திரேசா ஹென்றி ஆகியோர் குடாநாட்டின் கல்வித்துறைக்குப் பெரும்பங்காற்றினர்.

எனினும் நவாலி மகா வித்தியாலயம் திடீரென மந்த நிலையை அடைந்தது. உயர்தரத் துறை வலுவிழந்ததால் சாதாரண வகுப்புகளுடன் நவாலி மகா வித்தியாலயம் கல்விப் பணியை தளர்வு டன் தொடர்ந் தது.

நவாலி மகா வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் திருமதி விஸ்வலிங்கம், உப அதிபர் சி.சந்திரராஜா, அதிபர் அ.அலெக்சாண்டர் ஆகியோரின் அயராத முயற்சியால் பாடசாலையின் உட்கட்டுமான அபிவிருத்தி, குடிதண்ணீர் வழங்கல், நூலக அபிவிருத்தி போன்ற பல்துறைகள் வளர்ச்சி அடைந்தன.

தொடர்ந்து 25. 07.2003 இல் அதிபராக கடமையேற்ற கல்விமான் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன்.

இவரது காலத்தின் தோற்றத் - வளர்ச்சி - பரிமாணம் - புதிய சிந்தனை என்பன பல வழிகளில் மாறுதல்களை ஏற்படுத்தி வளர்ச்சி கண்ட நவீன காலமாக இருந்தது. இவரது காலத்தில் -

நவாலியூர் சிற்பக் கலை மாணி சந்திரன் அவர்களது உதவியைபெற்ற அதிபர் - நவாலியூர் சோமசுந்தரப் புலவருக்கும் -

நவாலியூர் தம்பையா பண்டிதருக்கும் பாடசாலை வளாகத்தில் உருவச்சிலை அமைத்து பெருமை சேர்த்து உலகறியச்செய்தார்.

அத்துடன் பிரதான வீதியோரம் மதில் அமைத்து அழகுபடுத்தியதுடன் -

'யுனிசெவ்' உதவியுடன் வகுப்பறை கட்டடத்தொகுதியையும் அமைத்து, கணனி கூடத்தையும் ஆரம்பித்து வைத்தார்.

இக்காலப்பகுதியில் அவர் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு பதவியுயர்வு பெற்று மாற்றாலாகிச் சென்றார்.

இந்நிலையில் நவாலி மகா வித்தியாலயத்திற்கு நிர்வாகியாக - ஆசிரியராக - அதிபராக - மக்களின் நன்மதிப்பை பெற்றவரான இரா.வசந்தகுமார் 30.04. 2008 இல் பணியில் அமர்ந்ததும் தன்னுடைய பழைய மிடுக்கை நோக்கிப் பாடசாலை பயணிக்கத் தொடங்கியது.

நவாலி மகா வித்தியாலயத்தை கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோரின் முயற்சியால் உயர்தர கலைப்பிரிவு பாடசாலையாகத் தரம் உயர்த்தி மீண்டும் நவாலிக்குப் பெருமை சேர்த்து பொற்காலத்தை மீண்டும் நிலை நாட்டினார். அத்துடன் அதிபர் இரா.வசந்தகுமாரின் அயராத முயற்சியும் கடும் எத்தனத்தாலும் 2010 இல் 13 மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர்.

இது தவிர பாடசாலையில் -

* விஞ்ஞான ஆய்வுகூடம் அமையப்பெற்றது.
* 30.04.2008 இல் 16 உயர் தரமாக தரம் உயர்த்தப்பட்டது.
* வலுவிழந்து இருந்த பழைய மாணவர் சங்கம் புத்துயிர் பெற்றது.
* நவாலியூர் ரவீந்திராவின் உதவியுடன் 5 கணனிகள் பெறப்பட்டன.
* இருமாடிக் கட்டடம் அமையப்பெற்றன.
* தொலைத் தொடர்பு வசதிகள் கிடைக்கப்பெற்றன.
* சமையலறைக் கூடம் அமைக்கப்பட்டது.
* நவீன வசதிகொண்ட கணனி அறை அமைக்கப்பட்டது.
* இல்ல விளையாட்டு போட்டி - வினைத்திறனான பரிசளிப்பு விழா - என்பன இடம்பெற்று வளர்ச்சி அடைந்து வருகின்றது.

இக் காலம் நவாலிப் பகுதி மாணவர்கள் மட்டுமன்றி வலி. தென்மேற்கு பிரதேச மாணவர்களும் நவாலி மகா வித்தியாலயத்தில் கல்வியைத் தொடர கால் பதித்த வண்ணம் உள்ளனர்.

அந்த அளவுக்கு இன்று வளர்ச்சி கண்ட பாடசாலையாக அதிபர் இரா.வூசந்தகுமார் காலத்தில் நூற்றாண்டு விழாவைக் காண்கின்ற வரலாற்று சிறப்பு எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் ஆகிய தினங்களில் கொண்டாடப்படவுள்ளது.

நவாலியூர் செ.ரமேஷ்

# கல்விச்சுடர்
## O/L மாவட்ட வலம் - 2010
### கல்விப் பொதுத்தராதர (சா/த) மாதிரிவினாத்தாள்


ஆக்கம்:



எம்.ஐ.எம்.அஸ்மி
B.Ed (NDT- Science SLTS
கமு/சாஹிரா தேசிய பாடசாலை

எம்.எம்.நிம்சாட்
B.A, (SPL) Dip.in.Edu,SLTS
சது/அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரி




விஞ்ஞானம் அம்பாறை வலம்

## விஞ்ஞானம் 01 பகுதி - நேரம் 1 மணித்தியாலம்

* ஒவ்வொரு வினாக்களுக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

01. ஒளித்தொகுப்பின் முதன்நிலை விளைபொருள் எது?
1) மாப்பொருள். 2) ஒட்சிசன். 3) குளுக்கோஸ். 4) யாவும் சரி.

02. பங்கீடு புகவிடும் மென்சவ்வினூடாக நிகழும் நீர்ப்பரவல் முறை,
1) திணிவுப்பாய்ச்சல். 2) பரவல்.
3) பிரசாரணம். 4) ஆவியாதல்.

03. ஒருவருடைய உடலில் ஏற்பட்ட காயத்திலிருந்து வெளியேறிய குருதி சிறிது நேரத்தில் தடைப்பட்டது. அதற்குக் காரணமான விற்றமின்,
1) A 2) B 3) D 4) K

04. உடலில் நீர்ச்சமநிலையைப் பேணுவதில் பங்குபற்றும் ஓமோன்,
1) ADH 2) GH 3) TSH 4) ACTH

05. வரித்தசை சுருங்கும்போது ஏற்படும் ஒரு மாற்றம் அல்லாதது,
1) ஒட்சிசன் பயன்படுத்தப்படும். 2) காபனீரொட்சைட்டு வெளியேற்றப்படும்.
3) ATP தொகுக்கப்படும். 4) வெப்பம் பிறப்பிக்கப்படும்.

06. தாவர இனப்பெருக்கம் பற்றிய கூற்றுக்களுள் பிழையானவை எவை?
1) வில்வம், ஈரப்பலா, கறிவேப்பிலை என்பன வேர்களிலிருந்து அரும்புகளை உருவாக்குகின்றன.
2) வற்றாளை, வல்லாரை, சிறுபுல்லடி என்பன ஓடிகள் மூலமாக இனப்பெருக்கம் ஏற்படும்.
3) பெகோனியா, சதைகரைச்சான் என்பன இலைகளிலிருந்து அரும்புகளை உருவாக்குகின்றன.
4) வெங்காயம், உருளைக்கிழங்கு என்பன இலைகளிலிருந்து அரும்புகளைத் தோற்றுவிக்கின்றன.

07. கருக்கட்டலின் பின் நடைபெறும் மாற்றங்களுள் பிழையானது.
1) சூல்வித்து-வித்தாக மாறும். 2) சூல்வித்தின் சுவர்-வித்துறையாக மாறும்.
3) சூலகம்-அழிவடையும். 4) சூலகச்சுவர்-பழச்சுவராக மாற்றமடையும்.

08. மனித இனப்பெருக்கம் தொடர்பாக சரியானது,
1) மனிதன் ஈரிலிங்க நிலைமையைக் கொண்டுள்ளான்.
2) ஆண்களில் துணைப்பாலியல்புகளை ஏற்படுத்தல், விந்துகளை உற்பத்தி செய்தல் என்பன தெசுதெஸ்திரோன் ஓமோனினால் நடைபெறும்.
3) மனிதனின் கர்ப்பகாலம் 80 வாரங்களாகும்.
4) நிசேரியா கொனேரியா பற்றீரியா மூலம் சிபிலிசு நோய் ஏற்படும்.

09. பின்வருவனவற்றுள் பிழையான கூற்று எது?
1) ஒரே நிறமூர்த்தத்தில் காணப்படும் சுயாதீனமாகத் தனிப்படுத்த முடியாத பரம்பரையலகுகள் இணைந்த பரம்பரையலகுகள் எனப்படும்.
2) இதரநுக நிலை (Tt) நோய்க்காவிக்குரிய சந்தர்ப்பமாகும்.
3) பின்னடைவான சமநுக நிலையிலேயே விகாரம் வெளிக்காட்டப்படும்.
4) விகாரக்காரணிகள் மூலம் விகாரத்தை ஏற்படுத்த முடியாது.

10. 

தாவரப்பகுதி ஒன்றின் குறுக்குவெட்டுத் தோற்றத்தின் பருமட்டான வரிப்படம் இங்கு தரப்பட்டுள்ளது. இத்தாவரம் பின்வருவனவற்றுள் எது?
1) புல்லின் தண்டு.
2) புல்வேர்.
3) அவரைத்தண்டு. 4) அவரைவேர்.

11. சிறுநீரகத்தில் கல் உருவாகக் காரணமாக அமையாதது,
1) அதிக தேநீர் அருந்துதல். 2) அதிகளவு சொக்கலேட்டு உண்ணுதல்.
3) அதிகளவு பசளிக்கீரை உண்ணுதல். 4) பழங்கள் அதிகளவு உண்ணுதல்.

12. பின்வருவனவற்றுள் கணம் அனெலிடாவைச் சேர்ந்த அங்கி எது?
1) நத்தை. 2) சிலந்தி. 3) அட்டை (லீச்) 4) சிப்பி.

13. தண்டின் நடுப்பகுதியை வெட்டி வேறாக்கப்பட்டிருந்த ஒரு வாழைமரத்தில் நிலத்திற்கு மேலே எஞ்சியிருக்கும் பகுதியில் வெட்டிய இடத்திலிருந்து திரவம் கசியக் காணப்பட்டது. இதற்குப் பின்வரும் எதன் செல்வாக்குக் காரணமாக இருக்கும்?
1) வேரமுக்கம். 2) ஆவியுயிர்ப்பு.
3) மயிர்த்துழைக்கவர்ச்சி. 4) ஈர்ப்பு.

14. எளிய மின்கலத்திலிருந்து இலத்திரன்கள் தோற்றுவிக்கப்படுவது,
1) Cu இலிருந்து 2) Zn இலிருந்து
3) $H_2SO_4$ இலிருந்து 4) Cu, Zn இலிருந்து

15. தீ முக்கோணத்தில் காணப்படும் ஒரு காரணி அல்லாதது,
1) எரிபொருட்கள். 2) எரிபற்றுநிலை.
3) தகனத்துணையி. 4) தகனத்துணையிலி.

16. பின்வரும் அணுக்கள் பற்றிய கூற்றுக்களுள் பிழையானது.
1) மூலக அணுக்கள் இலத்திரன்களை வெளியேற்றுவதால் நேர் அயன்களும், இலத்திரன்களைப் பெறுவதனால் மறை அயன்களும் உருவாகும்.
2) தனித்தனி அணுவினால் தோற்றுவிக்கப்பட்ட அயன்களும், ஒன்றுக்கு மேற்பட்ட அணுக்களினால் தோற்றுவிக்கப்பட்ட அயன்களும் உள்ளன.
3) ஒவ்வாத ஏற்றமுடைய அயன்களுக்கிடையிலான கவர்ச்சி காரணமாக அயன் பிணைப்புக்கள் தோன்றும்.
4) அய்ன்கள் மாத்திரம் வலுவளவைக் கொண்டும், மூலகங்கள் வலுவளவைக் கொண்டிராமலும் காணப்படும்.

17. பின்வரும் சேர்வைகளுள் அயன்பிணைப்பைக் கொண்டிராத சேர்வைகள் எவை?
1) MgCl, NaCl 2) CaCl, HCl 3) KCl, MgOH 4) $CO_2$, HCl

18. கொப்பர் (II) குளோரைட்டு கரைசல் மின்பகுப்புச்செய்யும் கலத்தொகுதியில் நடைபெறாத மாற்றம் எனக் கருதுவது,
1) கதோட்டு முடிவிடத்தில் செப்புப்படிவடையும்.
2) அனோட்டு முடிவிடத்தில் செப்புப்படிவடையும்.
3) அனோட்டு முடிவிடத்தில் குளோரின் வாயு வெளியேறும்.
4) தொகுதியின் வெப்பநிலை படிப்படியாக அதிகரிக்கும்.

19. காபனீரொட்சைட்டின் மூலக்கூற்றுச் சூத்திரம் $CO_2$ ஆகும். 66g $CO_2$ இல் இருக்கும் அணுக்களின் எண்ணிக்கையாவது, (C =12, O =16)
1) $6.023\times10^{23}$ 2) $2\times6.023\times10^{23}$ 3) $1.5\times6.023\times10^{23}$ 4) $4\times6.023\times10^{23}$

20. கீழ்வரும் பதார்த்தங்களில் எதன் அணுமூலும், மூலக்கூற்று மூலும் ஒரே பெறுமானம் உடையது?
1) ஒட்சிசன். 2) நைதரசன். 3) ஹீலியம். 4) குளோறின்.

21. மின்னினால் ஏற்படும் தீக்களை அணைக்கச் சிறந்த தீயணைப்பான்,
1) ஹலோன் தீயணைப்பான். 2) சோடாஅமிலத் தீயணைப்பான்.
3) நுரைத் தீயணைப்பான். 4) நீர்த்தீயணைப்பான்.

22. எதிலீன் மூலக்கூற்றின் கட்டமைப்பைக் குறிப்பது,

1)
```
H   H
|   |
C = C
|   |
H   H
```
2)
```
   H   H
   |   |
H—C — C — H
   |   |
   H   H
```
3)
```
   H
   |
H—C — H
   |
   H
```
4) H–C≡C–H

23. நீரின் வன்மைக்குக் காரணமாக அமையும் அயன்களைக் கொண்ட கூட்டம்,
1) $Mg^{++}$, $A^{+++}$ 2) $Fe^{++}$, $Na^{+}$ 3) $Ca^{++}$, $Mg^{+++}$ 4) $Zn^{++}$, $Cl^{++}$

24. 85g வெள்ளி நைத்திரேற்றைக் கரைத்து 250 ml கரைசல் பெறப்பட்டது. இக்கரைசலின் செறிவு குறிப்பது, (Ag =108, N =14, O =16)
1) 2 $moldm^{-3}$ 2) 1 $moldm^{-3}$ 3) 0.5 $moldm^{-3}$ 4) 0.2 $moldm^{-3}$

25. இங்கு ஒரு அலையின் வடிவம் தரப்பட்டுள்ளது.
அதன் அலைநீளமும் வீச்சமும் முறையே,
1) 60cm, 12cm 2) 10cm, 6cm.
3) 40cm, 6cm. 4) 20cm, 12cm.




26. பின்வரும் கதிர்ப்படங்களுள் மிகச்சரியானது எது?




27. பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?
அ- வீட்டின் மின்வழங்கலினை முற்றாகத் துண்டிப்பதற்கு பிரதான ஆளி பயன்படுகிறது.
ஆ- பிரதான ஆளியில் உயிர்க்கம்பிகள், நடுநிலைக்கம்பிகள் காணப்படும்.
இ- உயிர்க்கம்பியிலேயே உருகி காணப்படும்.
1) அ. ஆ. 2) ஆ. இ. 3) அ. இ. 4) அ. ஆ. இ.

28. செவ்விய கடத்தியில் வெப்பநிலை அதிகரிப்பு கடத்தாற்றை,
1) அதிகரிக்கும். 2) குறைக்கும்.
3) கூட்டிக்குறைக்கும். 4) மாற்றாது.

29. ரேடியோ அலைகள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறான கூற்று யாது?
1) ரேடியோ அலைகள் ஒருவகை மின்காந்த அலைகளாகும்.
2) ரேடியோ அலைகள் ஊடுகடத்தப்படுவதற்கு வாயு ஊடகம் தேவை.
3) ரேடியோ அலைகள் ஒளி அலையின் வேகத்திற்செல்லும்.
4) ரேடியோ அலையின் அலைநீளம் அதன் மீடிறனுக்கு அமைய தீர்மானிக்கப்படும்.

30. 50 Kg திணிவுள்ள வண்டி ஒன்றில் 2 $ms^{-2}$ ஆர்முடுகலை உண்டாக்குவதற்குப் பிரயோகிக்க வேண்டிய சமநிலைப்படாத விசை,
1) 250 N 2) 500 N 3) 1000 N 4) 750 N

31. தங்க ஆபரண (Au, Cu கலப்புலோகம்) மாதிரி ஒன்றில் 5g திணிவு 0.5g செம்பைக் கொண்டுள்ளது. இத்தங்கத்திலுள்ள பொன்னின் திணிவு (W/W%) நூற்றுவீத அமைப்பு,
1) $\frac{0.5}{5}\times100$ 2) $\frac{4.5}{5}\times100$ 3) $\frac{5}{1}\times100$ 4) $\frac{0.5}{4.5}\times100$

32. இயற்கைத்தேர்வு நடைபெறும் படிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - மிகைக்குடித்தொகை. B - இயற்கைத் தேர்வு.
C - மாறல்கள் உண்டாதல். D - வாழ்வதற்கான போட்டி.
E - பொருத்தமான இயல்பு சந்ததிக்கு கடத்தப்படல்.
F - புதிய இனந்தோன்றல்.
இப்படிமுறைகளை ஒழுங்காகக் காட்டும் அமைப்பு.
1) A→D→B→C→E→F 2) A→B→C→D→E→F
3) A→C→B→F→E→D 4) A→D→C→B→E→F

33. நான்கு தடைகள் சுற்றொன்றில் இணைக்கப்பட்டுள்ளதை படம் காட்டுகின்றது. இவற்றின் சமானத்தடை யாது?
1) 6 Ω 2) 14Ω
3) 18Ω 4) 12Ω




* 34, 35 ஆம் வினாக்கள் கீழுள்ள படத்தை அடிப்படையாகக் கொண்டவை.




34. துரலியொன்றின் இயக்கத்திற்கான வேக-நேர வரைபு ஒன்று தரப்பட்டுள்ளது. இவ் வரைபில் 6 செக்கனில் துரலியின் ஆர்முடுகல், சென்ற தூரம் என்பன முறையே
1) 2$ms^{-2}$, 36m 2) 12$ms^{-2}$, 72m 3) 0$ms^{-2}$, 0m 4) 2$ms^{-1}$, 20m

35. வரைபடத்தில் வரைபுக்கோடு A யினால் குறிப்பிடப்படுவது,
1) சீரான வேகம். 2) சீரான ஆர்முடுகல்.
3) ஓய்வு நிலை. 4) சீரற்ற வேகம்.

36. பின்வருவனவற்றுள் நீரில் கரையும்போது காரக் கரைசலைத் தோற்றுவிக்காத சேர்வை எது?
1) $Na_2O$ 2) CaO 3) $NO_2$ 4) MgO

37. வெள்ளொளிக்கற்றை ஒன்றை அரியத்தினூடாகச் செலுத்தும்போது பெறப்படும் நிறங்களில் அதிகூடிய விலகலையும், அதிகூடிய அலைநீளத்தையும் கொண்ட ஒளிக்கதிர்கள் எவை?
1) சிவப்பு, ஊதா. 2) ஊதா, சிவப்பு. 3) சிவப்பு, பச்சை. 4) நீலம், சிவப்பு.

38. ஒரே இனத்தைச் சேர்ந்த அங்கிகளாக இருப்பதற்கு காரணம் அவ்வங்கிகள்,
1) ஒரே பிரதேசத்தில், ஒரே சூழலில் வாழ்கின்றமையாகும்.
2) ஒத்த போசனைத் தேவைகளை கொண்டிருப்பதாகும்.
3) உயிர்த்தொழிற்பாட்டிற்காக கிடைத்தொடர்புகளைக் கொண்டிருத்தலாகும்.
4) இடைப்பிறப்பாக்கம் மூலம் வளமான எச்சங்களைத் தோற்றுவிக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருத்தலாகும்.

39. ஓர் அங்கியை மயக்க நிலைக்குக் கொண்டுவருவதற்குப் பயன்படுத்தக்கூடிய ஓர் இரசாயனப் பதார்த்தம்,
1) சோடியம் குளோரைட்டு. 2) குளோரபோம்.
3) கல்சியம் ஐதரொட்சைட்டு. 4) சிலிக்காஜெல்.

40. பின்வருவனவற்றுள் சேனர் இருவாயிக்கான குறியீடு எது?




## English Language Part I

01-4 02-5 03-1 04-2 05-3
Test 2. 2- Kantha 3- Mrs.Nathan 4- Mrs.Rajaratnam 5- Maths 6- English 7- Science
8- tamil 9- Very kind 10- tell stories 11- comes to school early 12- can sing well
Test 4. 1-10 2-3 3-6 4-4 5-1 6-8 7-2 8-5 9-7
10-9

(19ஆம் பக்கம் பார்க்க)

மாணவர்களே: உங்களுக்கு எழும் விளக்கமின்மை, தெளிவின்மைகள் என்பவற்றை குறித்த ஆசிரியர்களின் தொலைபேசி இலக்கங்களினூடாகத் தொடர்புகொண்டு இன்றைய தினம் இரவு 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரையும் தெளிவுபடுத்திக்கொள்ள முடியும். (ஆசிரியர்கள்: எம்.ஐ.எம்.அஸ்மி, எம்.எம்.நிம்சாட் தொலைபேசி இலக்கங்கள்: 077 9353634, 071 5344918)

(18ஆம் பக்கத் தொடர்ச்சி) பகுதி II, A - அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01. A. மாணவர் குழுவொன்று சூழலில் காணப்படும் உயிரிகளையும், அவற்றுக்கிடையிலான இயல்பு வேறுபாடுகளையும் அறிந்துகொள்வதற்காக பாடசாலையின் தோட்டப்புறத்திற்குக் களப்பயணம் ஒன்றினை மேற்கொண்டு தங்களது கண்டாய்வுக்கான அறிக்கைகளை வெளியிட்ட விதம் பின்வருமாறு அமைந்திருந்தது.

குழு a: அவதானித்த விலங்குகளின் இயல்புகளைப் பின்வருமாறு வெளியிட்டனர்.
- அங்கியின் கலங்களில் மூட்டுக்கள் காணப்பட்டன.
- உடலானது வெளிப்புறத் துண்டுபடலைக் காட்டியது.
- அங்கியில் உணர்கொம்புகளை அவதானிக்க முடிந்தது.

குழு b: அவதானித்த விலங்குகள் பின்வரும் இயல்புகளைக் காண்பித்தது.
- உடல் ஈரலிப்பானதாகக் காணப்பட்டது.
- உட்புறமாகத் தென்படக்கூடிய துண்டுபடலைக் கொண்டிருந்தது.
- கட்டுச்சேனம் எனும் அமைப்பைக் கொண்டிருந்தது.

குழு c: பின்வரும் தாவரங்களை அவதானித்தனர்.
பன்னங்கள், சைக்கஸ், நெப்ரலோபிஸ்.

குழு d: மா, தென்னை, பலா, கமுகு போன்ற தாவரங்களை அவதானித்தனர்.

1) மேலுள்ள குழுக்களில் முள்ளந்தண்டற்ற விலங்குகளை அவதானித்த குழு எது? குழுக்கள் எவை?
2) குழு a மாணவர்கள் அவதானித்த அங்கிகள் கணம் மொலாஸ்காவைச் சேர்ந்தவை என ஒரு மாணவன் குறிப்பிட்டான். இக்கூற்று சரியானதா?
3) மேலுள்ள குழுக்களில் a, b என்பன அவதானித்த விலங்குகளின் கணங்களை எழுதுக.
4) முள்ளந்தண்டற்ற விலங்குகள் அடக்கப்படும் வேறு கணங்கள் இரண்டைத் தருக.
5) மேலுள்ள கணங்கள் கொண்டுள்ள இயல்புகள் இவ்விரண்டு தருக.
6) மாணவர் குழு c இனால் அவதானிக்கப்பட்ட தாவரங்கள் உள்ளடக்கப்படும் பிரிவு யாது?
7) பன்னங்கள் மார்கான்றியாவில் இருந்து வேறுபடும் இயல்பு ஒன்றைக் குறிப்பிடுக.
8) குழு a இனால் அவதானிக்கப்பட்ட இயல்புகளை ஒத்திருக்கும் இரு விலங்குகளைப் பெயரிடுக.
9) குழு b இனால் அவதானிக்கப்பட்ட இயல்புகளைக் கொண்டிருக்கும் இரு விலங்குகளைப் பெயரிடுக.
10) ஆய்வில் ஈடுபட்ட மாணவர்கள் குறித்த சில அங்கிகளைப் பெற்று தாம் அவதானித்த இயல்புகளின் அடிப்படையில் அவ்வங்கிகளை இணைக்கவர்ச்சுட்டி ஒன்றினைப் பயன்படுத்தி வேறுபடுத்தியறிய முற்பட்டனர். அவர்கள் பாவித்த இயல்புகளைப் பூரணப்படுத்துக.




02. A. மனிதன் தனது வேலைகளை இலகுவாக்குவதற்காக தற்காலத்தில் பொறிகளைப் பயன்படுத்துகின்றான். இதன் காரணமாக மனிதன் அவனது நேரத்தை மீதப்படுத்துவதுடன் புதிய கண்டுபிடிப்புக்களிலும் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது. ஒரு பொறியானது சிறந்ததாக இருப்பதற்கு அப்பொறியின் திறன் உயர்வானதாக அமைதல்வேண்டும்.
1) பொறிகளின் பொறிமுறை நயம் என்பது யாது?
2) பொறிகளின் வேகவிகிதம் என்பது யாது?
3) மனித உடலில் இயக்கங்களை இலகுபடுத்துவதற்காக நெம்பை ஒத்த அமைப்புக்கள் தொழிற்படுகின்றன. அவ்வாறான இரு அமைப்புக்களைத் தருக.
4) மனிதனால் பயன்படுத்தப்படுகின்ற எளிய பொறிகளுக்கும், சிக்கலான பொறிகளுக்கும் இவ்விரு உதாரணங்கள் தருக.
5) பொறிகள் பயன்படுத்தப்படுகின்றபோது அவற்றில் ஏற்படும் உராய்வுத் தன்மையைக் குறைப்பதற்குக் கையாளப்படும் நடைமுறைகள் இரண்டினைத் தருக.

B. கீழுள்ள அமைப்பானது தொழிலாளி ஒருவர் தேங்காய் எண்ணெய் பீப்பா ஒன்றை லொறியினுள் ஏற்றுவதற்காக சாய்தளம் ஒன்றைப் பயன்படுத்தி தனது வேலையை இலகுவாக்கும் நுட்பத்தினைக் காண்பிக்கின்றது.




1) அருகில் உள்ள சாய்தளத்தின் பொறிமுறை நயம் யாது?
2) இச்சாய்தளத்தின் வேகவிகிதத்தைக் காண்க.
3) சாய்தளத்தின் திறனைக் காண்க.
4) சாய்தளம் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
5) இரட்டைச் சாய்தளங்களும் தற்காலத்தில் பாவனையில் உள்ளன. அவ்வாறு பயன் படுத்தப்படும் சந்தர்ப்பம் ஒன்றைத் தருக.

03. A. ஆய்வுகூடத்தில் குறித்த வாயுவைத் தயாரிப்பதற்காக மாணவன் ஒருவனால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள பரிசோதனை அமைப்பு ஒன்றைப் படம் காட்டுகின்றது.




1) மேற்படி அமைப்பைக் கொண்டு தயாரிக்கப்படும் வாயு யாதாக இருக்கும்?
2) குறித்த வாயுவை இனங்காண்பதற்கான முறையைத் தருக.
3) மேற்படி இரசாயனத் தாக்கம் நடைபெறும்போது ஏற்படும் தாக்கத்திற்கான ஈடுசெய்த சமன்பாட்டைத் தருக.
4) இவ் இரசாயனத் தாக்கம் எவ்வகையானது?
5) தலைகீழாக வைக்கப்பட்டுள்ள சோதனைக் குழாயில் உள்ள நீருக்கு யாது நிகழும்?

B. 1) மேற்படி இரசாயனத் தாக்கத்தில் 4g ஐதரசன் வாயுவைத் தயாரிக்கவேண்டி ஏற்படின் பயன்படுத்தவேண்டிய Mg இன் திணிவு யாது?
2) மேற்படி தாக்கத்தின்போது தோன்றும் வாயு விளைவு தவிர்ந்த மற்றுமோர் விளைவு யாது?
3) அவ்விளைவான சேர்வை எவ்வகையைச் சார்ந்தது?
4) அச்சேர்வை கொண்டுள்ள இயல்புகள் இரண்டைத் தருக.
5) மேலுள்ள சேர்வை தோன்றும்போது உருவாகும் அயன்களின் குறியீடுகளைத் தருக.
6) மேற்படி சேர்வை உருவாகும் விதத்தை வரைந்துகாட்டுக.

04. A. சுற்றாடலில் ஒரு குறித்த பொருளின் சுழற்சியைப் பின்வரும் உரு காட்டுகிறது. இச்சுழற்சியுடன் தொடர்புபட்ட மூன்று செயன்முறைகள் A,B,C எனக் காட்டப்பட்டுள்ளன.




1) வரிப்படத்தில் காண்பிக்கப்படும் வட்டச் செயன்முறை யாதாக இருக்கும்?
2) இவ்வட்டச் செயன்முறை தவிர சூழலில் காணப்படும் வேறு இரு வட்டச் செயன்முறைகள் யாவை?
3) மேலுள்ள செயன்முறையில் A,B,C குறிப்பவற்றைத் தருக.
4) எந்த அங்கிக்கூட்டம் செயன்முறை D உடன் தொடர்புபட்டுள்ளது?
5) உயிர்ச்சுவடாக்கத்தின் போது மண்ணில் உள்ள போசணைப் பொருட்கள் உட்படும் மாற்றத்தைக் குறிப்பிடுக.

B. தற்காலத்தில் மனிதனின் பல்வேறு செயற்பாடுகள் காரணமாக மேலுள்ள வட்டச் செயன்முறை பாதிப்படைவதுடன் முழுவுலகும் பல்வேறு விதமாக பாதிப்புக்குட்படுகின்றதை அவதானிக்கமுடிகின்றது.
1) வளிமண்டல காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிப்பதனால் புவிக்கோளத்தில் ஏற்படும் அடிப்படைத் தாக்கம் யாது?
2) அது எவ்வாறு அழைக்கப்படும்?
3) இச்செயற்பாடு காரணமாக நடைபெறும் மாற்றங்கள் இரண்டினைத் தருக.
4) மேலுள்ள தாக்கம் நடைபெறுவதற்கு மனிதன் பங்களிப்புச்செய்யும் விதங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
5) மேலுள்ள செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் இரண்டைக் குறிப்பிடுக.

பகுதி II, B - கட்டுரை வினாக்கள்

உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் ஆகிய பகுதிகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொரு வினாவைத் தெரிந்தெடுத்து மூன்று வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

உயிரியல்

05. A. மனிதச் செவியின் உட்கட்டமைப்பைக் காட்டும் வரிப்படம் உருவில் தரப்பட்டுள்ளது.




1) உருவில் A - H வரையுள்ள பகுதிகளைப் பெயரிடுக.
2) செவியின் பிரதான தொழில்கள் யாவை?
3) புறச்செவியை வந்தடையும் ஒலியானது மூளையைச் சென்றடையும் விதத்தை பாய்ச்சற்கோட்டுப் படம் மூலம் காட்டுக.
4) a) மனிதச்செவியின் புலனுணர்வு அதிர்வு வீச்சு யாது?
b) உடலின் சமநிலையைப் பேணும் காதின் பகுதி யாது?
5) a) செவிப்பறையினால் பெறப்படும் அதிர்வுகளை விரியலாக்கி நீள்வட்டப் பலகணி மென்சவ்வுக்குக் கடத்தும் அமைப்பு எது?
b) காதினுட் புகும் தூசுத் துணிக்கைகள், நோய்க்கிருமிகள், எவ்வாறு உட்புகாது தடுக்கப்படுகின்றன?

B. விலங்குகளினது உடலை வெளிச்சூழலில் இருந்து எல்லைப்படுத்தி மூடிப் பாதுகாத்துக் காணப்படும் போர்வை உடல் உறை எனப்படுகிறது. மனித உடல் உறை பொதுவாகத் தோல் என்று அழைக்கப்படுகிறது.
1) மனிதத்தோலின் பாதுகாத்தல் தவிர்ந்த பிரதான் தெழிந்பாடுகள் இரண்டு தருக.
2) மனிதத் தோலின் கட்டமைப்பில் பின்வரும் பகுதிகளின் தொழிற்பாட்டினைக் குறிப்பிடுக.
a) புறத்தோல். b) வியர்வைச் சுரப்பி.
3) பாலூட்டிகளின் வெப்பநிலைச் சீராக்கத்தில் தோலின் பங்களிப்பை விளக்குக.

06. தாவரங்களில் நடைபெறும் ஆவியுயிர்ப்பு, வேர்கள் மண்ணில் இருந்து உறிஞ்சிய நீரையும் கனியுப்புக்களையும் இலைகளை நோக்கிக் கொண்டுசெல்ல உதவுகின்றன. நீர் பற்றாக்குறையான சந்தர்ப்பங்களில் வறள்நிலத் தாவரங்கள் ஆவியுயிர்ப்பைக் குறைத்துக்கொள்ளக்கூடிய பல வகையான இசைவாக்கங்களைக் கொண்டுள்ளன.
1) தாவரத்துக்குத் தேவையான நீரையும் கனிப்பொருட்களையும் உள்ளெடுப்பதற்கு உதவும் வேரில் உள்ள விசேட கட்டமைப்பு எவ்விழையத்தில் இருந்து தோற்றுவிக்கப்படுகின்றது?
2) தாவரத்தின் இலைகளில் ஆவியுயிர்ப்பு நிகழ காரணமான கட்டமைப்பின் படத்தை வரைந்து பெயரிடுக.
3) இலைகளில் காணப்படும் இலைவாய்களில் நீராவி வெளியேற்றம் தவிர நிறைவேற்றப்படும் வேறொரு தொழிலைக் குறிப்பிடுக.
4) ஆவியுயிர்ப்பில் பங்களிப்புச்செய்யும் மூன்று புறக்காரணிகளைக் குறிப்பிடுக.
5) ஆவியுயிர்ப்பின் மூலம் காழக்குழாயினூடு நீர்நிரல் தொடர்ச்சியாக மேல்நோக்கி இழுக்கப்படுவதற்கு நீர் மூலக்கூறுகளுக்கிடையே இருக்கவேண்டிய விசை யாது?
6) a) வறள்நிலத் தாவரங்கள் என்றால் என்ன?
b) பின்வரும் தாவரங்களில் ஆவியுயிர்ப்பைக் கட்டுப்படுத்த காரணமாக உள்ள இசைவாக்கம் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.
1) நாகதாளி. 2) அலரி. 3) சதைகரைச்சான்.
7) ஆய்வுகூடத்தில் தாவரத்தின் ஆவியுயிர்ப்பு வீதத்தை அளவிடப் பயன்படும் கருவி படத்தில் காட்டப்பட்டுள்ளது.




a) இக்கருவியின் பெயர் யாது?
b) தாவரக் கிளையை இக்கருவியில் பொருத்துமுன் எடுக்க வேண்டிய முக்கிய பாதுகாப்பு நடவடிக்கை யாது?
c) இக்கருவியின் மூலம் காற்றின் வேகம் ஆவியுயிர்ப்பு வீதத்தில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகிறது என்பதை எவ்வாறு காண்பீர்?

இரசாயனவியல்

07. A. புவியோட்டில் காணப்படும் கற்பாறைகள், கனியங்கள், மணல் ஆகியன பல்வேறு கைத்தொழில்களுக்குப் பெறுமதிமிக்க வளங்களாகக் காணப்படுகின்றன.
1) கனியம் என்றால் என்ன?
2) எமது நாட்டில் காணப்படும் கனியங்கள் இரண்டினைப் பெயரிடுக.
3) பாறைகளின் வகைகள் யாவை?
4) சுண்ணாம்புக் கல்லில் அடங்கியுள்ள இரசாயனப் பொருள் எது?
5) 10kg சுண்ணாம்புக் கல்லைச் சுடுவதால் பெறப்படும் நீறாத சுண்ணாம்பின் திணிவைக் கணிக்குக. (Ca=40, C=12, O=16)
6) உள்நாட்டு முறையில் சுண்ணாம்பு உற்பத்தியில் காணப்படும் குறைபாடுகள் 2 தருக.

B. இரும்பு பிரித்தெடுப்புக்காகப் பயன்படுத்தப்படும் உபகரணத்தின் அமைப்பு உருவில் காட்டப்பட்டுள்ளது.




1) இரும்பு பிரித்தெடுக்கப் பயன்படும் உருவில் உள்ள அமைப்பு எவ்வாறு அழைக்கப்படும்?
2) இரும்பு பிரித்தெடுப்பின்போது பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களைப் பெயரிடுக.
3) இலங்கையில் காணப்படும் இரும்பின் தாதுக்கள் இரண்டைக் குறிப்பிடுக.
4) இரும்பு பிரித்தெடுப்பில்,
a) மூலப்பொருட்கள் எப்பகுதியில் இடப்படும்?
b) $CO_2$ எப்பகுதியால் வெளியேறும்?
c) சூடான வளி செலுத்தப்படும் பாதை யாது?

08. A.

| மூலகம் | A | B | C | D | E | F |
|---|---|---|---|---|---|---|
| அணுவெண் | n-2 | n-1 | n | n+1 | n+2 | n+3 |

அட்டவணையில் தரப்பட்டுள்ள மூலகங்கள் ஆவர்த்தன அட்டவணையில் அடுத்துள்ள மூலகங்களாகும். இவை இரண்டாம், மூன்றாம் ஆவர்த்தனத்தைச் சேர்ந்தவை. மூலகம் C இரு இலத்திரன்களை ஏற்பதன் மூலம் விழுமிய வாயு இலத்திரன் நிலையமைப்பைப் பெறும். (தரப்பட்டுள்ள மூலகங்களின் குறியீடுகள் அவற்றின் நியமக் குறியீடுகள் அல்ல)
1) தரப்பட்டுள்ள மூலகங்களை ஆவர்த்தன அட்டவணையில் குறித்துக்காட்டுக.
2) ஓரணு வாயு மூலகம் எது?
3) அ[illegible]ன் குடும்பத்தைச் சேர்ந்த மூலகம் எது?
4) மூலகம் F விழுமிய வாயு இலத்திரன் நிலையமைப்பைப் பெறும் விதத்தைப் படம் வரைந்து விளக்குக.
5) a) C, F சேர்ந்து உருவாகும் பிணைப்பு எவ்வகையானது?
b) நீர் கூறிய பிணைப்பின் இயல்புகள் மூன்று தருக.
6) மூலகம் D இன் இரு அணுக்கள் சேர்ந்து உருவாகும் பிணைப்பினைக் காட்டப் படம் வரைக.
7) கார உலோகக் குடும்பத்தைச் சேர்ந்த மூலகம் எது?

B. சுண்ணாம்புக் கற்றுண்டு ஒன்றை பரிசோதனைக் குழாயில் உள்ள அமிலத்தில் மெதுவாக இடும்போது அது அவ்வமிலத்துடன் தாக்கமுறுவது அவதானிக்கப்பட்டது.
1) சுண்ணாம்புக் கற்றுண்டு பரிசோதனைக் குழாயில் உள்ள அமிலத்துடன் தாக்கமுறுகிறது எனக் கூறுவதற்காகப் பெறப்பட்ட அவதானிப்புக்களைக் கூறுக.
2) அமிலத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது தாக்கவீதத்தை அதிகரிக்க யாது செய்யலாம்?
3) சுண்ணாம்புச் சூளையினை எரிக்கும்போது மரக்குற்றிகளை இடுவதை விட மரத்துண்டுகளை இடுவதன் மூலம் துளையை நன்கு எரியூட்டலாம். இதனை விஞ்ஞான ரீதியாக விளக்குக.

பௌதிகவியல்

09. A. கிரிக்கெட் உலகில் பிரபல்யமான விளையாட்டுக்களில் ஒன்றாகும். பல்வேறு விதமான கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படுகின்றன. டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டம் 5 நாட்கள் நடைபெறும். இதில் பங்குபற்றும் வீரர்கள் வெண்ணிற ஆடைகளை அணிவர்.
1) டெஸ்ட் கிரிக்கெட் வீரர்கள் வெண்ணிற ஆடை அணிவதற்கான காரணத்தை விளக்குக.
2) பந்துவீச்சாளரின் கையிலிருந்து பந்து விடப்பட்டு துடுப்பாட்ட வீரர் வரை வரும்போது நடைபெறும் சக்தி மாற்றத்தை எழுதுக.
3) பந்தின் நிறை 0.15kg ஆகும். அதன் வேகம் $30 ms^{-1}$ ஆயின் பந்துக்குக் கிடைத்த சக்தியின் அளவைக் காண்க.
4) துடுப்பாட்ட வீரர் பந்தைத் துடுப்புமட்டையால் அடிக்கும்போது ஏற்படும் ஒலி தொலைவில் உள்ள பார்வையாளர் ஒருவருக்கு 2 செக்கனகளின் பின் கேட்கிறது. வளியில் ஒலியின் வேகம் $330 ms^{-1}$ எனின், துடுப்பாட்ட வீரருக்கும் பார்வையாளர்களுக்கும் இடையிலான தூரம் எவ்வளவு?
5) மேலே கூறப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒலி எவ்வலை வடிவில் பார்வையாளர்களின் செவியை வந்தடையும்?

B. நுணுக்குப்பன்னியின் முன் அமர்ந்து இப்போட்டி தொடர்பான வர்ணனையை வழங்குபவரின் குரலை வீட்டில் உள்ள வானொலியின் மூலமாகக் கேட்கக்கூடியதாகவுள்ளது.
1) நுணுக்குப்பன்னியினால் ஆற்றப்படும் தொழிற்பாடு யாது?
2) நுணுக்குப்பன்னியின் வகைகள் இரண்டு தருக.
3) வானொலி அலை ஊடுகடத்தலுக்குப் பயன்படுத்தப்படும் காவி அலை யாது?
4) வானொலி அலை ஊடுகடத்தலில் மட்டிசைப்பு என்றால் என்ன?
5) தற்போது இலங்கையில் மீடிறன் மட்டிசைப்பு (FM) வானொலி அலைகளே அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. இதன் அனுகூலம் யாது?

10. A. தரப்பட்டுள்ள உபகரண ஒழுங்கமைப்பு உப்பு நீரில் இருந்து குடிநீரைப் பெற்றுக்கொள்ளும் முறை ஒன்றைக் காட்டுகின்றது. கறுப்புத் துணியினால் உறிஞ்சப்படும் நீர் ஆவியாகி கண்ணாடியில் நீர்த்துளியாக ஒடுங்கி A எனும் வெளியேறும் வாயில் மூலமாக நீர் வெளி யேற்றப்படுகிறது.




1) மின்காந்த அலை வகைகளில் வெப்பக் கதிர்கள் எவ் வகையைச் சார்ந்தவை?
2) கறுப்புநிறத் துணியைப் பயன்படுத்துவதால் பெறக்கூடிய அனுகூலம் யாது?
3) கறுப்புத் துணியில் இருந்து கண்ணாடியை நோக்கி நீர் ஆவியாகிச் செல்லும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?
4) வெளியேறும் வாயில் B இன் அவசியம் யாது?

B. 1) நீரின் தன்வெப்பக் கொள்ளளவு $4,200\ Jkg^{-1}\,^{0}C^{-1}$ என்பதனால் நீர் விளங்குவது யாது?
2) அமிழ்ப்பு வெப்பமாக்கி ஒன்றின் வலு 1,000 W ஆகும். நீரின் தன்வெப்பக் கொள்ளளவு $4,200\ Jkg^{-1}\,^{0}C^{-1}$ ஆகும். அவ் அமிழ்ப்பு வெப்பமாக்கியின் மூலம் உற்பத்தியாக்கப்படும் வெப்பம் முழுவதும் நீரைச் சூடாக்குவதற்கே பயன்படுத்தப்பட்டதாகக் கொண்டு $30^{0}C$ இல் உள்ள 3 kg நீரை $100^{0}C$ வரை சூடாக்குவதற்குச் செலவாகும் நேரத்தைக் கணிக்குக.

# தேசிய அணி தெரிவுப் பயிற்சிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து இருவர்



கோகுலன்



ரியூடர்

யாழ்ப்பாணம்,ஒக்.8

19வயதுக்கு உட்பட்டோருக்கான தேசிய கிரிக்கெட் அணியைத் தெரிவுசெய்வதற்கான பயிற்சி முகாமுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இரு வீரர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆசியக் கிண்ண கிரிக்கெட் மற்றும் இங்கிலாந்து 19 வயதுக்குட்பட்ட அணியுடனான கிரிக்கெட் போட்டி என்பன எதிர்வரும் நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளன.

இதற்கான இலங்கை அணியைத் தெரிவுசெய்வதற்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சி முகாமுக்கு யாழ்ப்பாணம் புனித சென். பற்றிக்ஸ் கல்லூரி கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளரும் சிறந்த துடுப்பாட்ட வீரருமான க.றிசாந் ரியூடர் மற்றும் யாழ். மத்திய கல்லூரி கிரிக்கெட் அணியின் இடதுகை சுழல் பந்து வீச்சாளர் தங்கராசா கோகுலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர் 2010ஆம் ஆண்டிற்கான வடமாகாண 19, 21 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணி வீரரும் 2010ஆம் ஆண்டு வடமாகாண 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணியின் உபதலைவரும் ஆவார்.

றிசாந் ரியூடர் 2010 ஆம் ஆண்டுக்கான வடமாகாண 19, 21 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணி வீரரரும் வடமாகாண 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணி வீரரும் வடமாகாண 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் அணியின் தலைவருமாவார்.

(உ-23)

# மத்திய கல்லூரி இல்ல கிரிக்கெட் பேர்சிவல் அணி வென்றது



யாழ்ப்பாணம்,ஒக்.8

றொமெய்ன் இல்ல அணியுடனான ஆட்டத்தில் பேர்சிவல் இல்ல அணி வெற்றி பெற்றது.

யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகமும் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க யாழ். கிளையும் இணைந்து யாழ்.மத்திய கல்லூரி இல்லங்களுக்கு இடையே ருவென்ரி-20 கிரிக்கெட் தொடரை நடத்துகின்றன

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் பேர்சிவல் இல்ல அணியை எதிர்த்து றொமெய்ன் இல்ல அணி மோதியது.

முதல் துடுப்பெடுத்தாடிய றொமெய்ன் இல்ல அணி 18.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 87 ஓட்டங்களை மட்டும் பெற்றது. யோசி 20 ஓட்டங்களையும் நிசாந் றூபன் 18 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் பேர்சிவல் இல்ல அணி வீரர்களான, நிஷந்தன் 3.5 ஓவர்கள் பந்து வீசி, எட்டு ஓட்டங்களை கொடுத்து மூன்று விக்கெட்டுகளையும் கோகுலன்,4 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

88 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய பேர்சிவல் இல்ல அணி 18.4 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுகளை இழந்து 88 ஓட்டங்களைப் பெற்றது.

கோகுலன் 22 ஓட்டங்களையும், துசியந்தன் 12 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர். றொமேன் இல்ல அணி வீரர்களான டனுசாந் 4 ஓவர்கள் பந்து வீசி 13 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் விமல்ராஜன், 4ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பேர்சிவல் இல்ல அணி 2 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது

(உ-23)



அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே தேசிய மட்டத்தில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் 3 தங்கம் 1 வெள்ளிப் பதங்கங்கள் பெற்ற அளவெட்டி அருணோதையக் கல்லூரி வீர, வீராங்கனைகள் கல்லூரி மாணவர்கள் ஆசிரியர்களினால் பாராட்டப்பட்டார்கள்.

இந்த நிகழ்வில் அதிபர் நா.கேதீஸ்வரன், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் மாணவர்களைப் பாராட்டுகின்றனர்.

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஒக்.8

கோப்பாய் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது

(உ-23)

## நாளைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஒக்.8

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட பாடசாலை அணிகளின் 13 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

* இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை.
* சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் ஆனைக்கோட்டை உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்.
* மாதகல் சென்ஜோசப் வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.
* மானிப்பாய் மொமோறியல் ஆங்கிலப் பாடசாலை எதிர் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.

(உ-86)

## தேசிய தடகளப் போட்டி: யாழ்.மாணவனுக்கு சிறப்பு விருது

யாழ்ப்பாணம்,ஒக்.8

கொழும்பில் இடம்பெற்ற தேசிய மட்டத் தடகளப் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சென்.பற்றிஸ் கல்லூரி மாணவன் எரிக் பிரதாப் சிறந்த மெய்வன்மைப் பெறுபேற்றுக்கான விருதினை வென்றுள்ளார்.




இவர் 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தை 58.12 செக்கனில் பூர்த்தி செய்து வர்ணவிருது பெற்றார். இவருக்கு மக்கள் வங்கியால் ஒரு லட்சம் ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டது.

# கண்டியில் ஹொக்கிப் போட்டி

கண்டி,ஒக். 08

கண்டி மாவட்டத்தில் 15 வயதுக்கு உட்பட்டோருக்கான ஹொக்கிப் போட்டிகளில், புனித சில்வெஸ்ரர் கல்லூரி அணியும், கிங்ஸ்வூட் கல்லூரி அணியும் முன்னிலை வகிக்கின்றன.

கண்டி அஸ்கிரிய சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றுவரும் இந்தப் போட்டிகளில், கிங்ஸ்வூட் கல்லூரி அணியும், புனித சில்வெஸ்ரர் கல்லூரி அணியும் பல போட்டிகளில் வெற்றி பெற்றதன் மூலம், இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் கழகங்களுள் முன்னிலை பெற்றுள்ளன.

இதேவேளை, 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கிடையிலான ஹொக்கிப் போட்டியில், சுவர்ணமாலி வித்தியாலயத்துடனான போட்டியில், 17-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சீதாதேவி வித்தியாலயம் சாதனை படைத்துள்ளது.

# மகாஜனக் கல்லூரி வெற்றி

வலி.வடக்கு,ஒக்.8

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆண்டு விழாவையொட்டி யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்திய 19 வயதுப் பிரிவினருக்கான மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டி யில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி விக்கெட் இழப்புகள் இன்றி வெற்றிபெற்றது.

மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதின.

முதல் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி 05 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றது. சபேசன் 17 ஓட்டங்களைப் பெற்றார்.

மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த பார்த்தீபன் , கபில்தேவ், தயாளன் முறையே 04, 07, 08 ஓட்டங்களைப் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி விக்கெட் இழப்பின்றி 4.3 ஓவர்களில் 35 ஓட்டங்களைப் பெற்று வெற்றிகண்டது. கோகுலன் 17, கபில்தேவ் 12 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றார்கள். (உ-86)

## 16 ஓவர்கள் கிரிக்கெட்;

# பல்கலை. அணி வெற்றி!

வலி.வடக்கு,ஒக்.8

அளவெட்டி மத்தி விளையாட்டுக் கழகம் அமரர் சுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக நடத்திய 16 ஓவர்கள் மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியின் ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

தெல்லிப்பழை பூமா விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் தெல்லிப்பழை கலை ஒளி விளையாட்டுக்கழகமும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டு அணியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கலை ஒளி விளையாட்டுக் கழகம் 11.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 48 ஓட்டங்களைப் பெற்றது.

தனுஜன் 14, நிதர்சன் 11 ஓட்டங்களைப் பெற்றனர்.

பல்கலைக்கழக அணியைச் சேர்ந்த சுவிசாந் 5 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் இராகுலன் 9 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் லிவின்ரன் 11 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் கோகுலன் 11 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

49 ஓட்டங்கள் வெற்றி இலக் காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பா ணம் பல்கலைக்கழக அணி 12 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

கலைஒளி விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த தஜிகன் 10 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் ஜபாகர், அன்ரன் 5, 19 ஓட்டங்களுக்கு தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (உ-86)




யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை நடத்தும்

மாபெரும் பளு, வலு தூக்கும் போட்டி

(Weight Lifting & Power Lifting)

உதயன் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையும் யாழ்.பல்கலைக்கழக பளுதூக்கும் அணியும் இணைந்து நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான போட்டி.

★ யாழ். மாவட்டத்துக்குட்பட்ட அனைத்து வீரர்களும் கலந்துகொள்ள முடியும்.
★ இடம்: யாழ்.பல்கலைக்கழக மைதானம்
★ காலம்: ஒக்ரோபர் 16 ஆம், 17 ஆம் திகதிகளில்
★ விண்ணப்பப்படிவங்களை யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் பெற்றுக்கொள்ளலாம்.
★ இன்று வெள்ளிக்கிழமை முதல் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.
★ விண்ணப்ப முடிவுத் திகதி : 15.10.2010

# சச்சினுக்கு இரட்டை விருதுகள்!

பெங்களூர், ஒக். 08

ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான ஐ.சி.சி. விருது மற்றும் இம்முறை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ரசிகர்கள் தெரிவுசெய்யும் விருது என இரண்டு விருதுகளை டெண்டுல்கர் பெற்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) ஆண்டுதோறும் சிறந்த வீரர்களைத் தெரிவுசெய்து பல்வேறு விருதுகளை வழங்கிக் கௌரவித்து வருகிறது.

இதன்படி இந்த ஆண்டுக்கான ஐ.சி.சி. விருதுகள் பெங்களூரில் நேற்றுமுன்தினம் நடந்த விழாவின்போது அறிவிக்கப்பட்டன.

இதில், ஆண்டின் சிறந்த வீரராக இந்திய நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவுசெய்யப்பட்டார்.

ஷேவாக் (இந்தியா), ஆம்லா (தென்னாபிரிக்கா), ஸ்வான் (இங்கிலாந்து) ஆகியோரும் இந்த விருதுக்கான பிரிவில் போட்டியிலிருந்த நிலையில், அவர்களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு டெண்டுல்கர் முதல்முறையாக இந்த உயரிய விருதைப் பெற்றுள்ளார்.

விருதுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட காலகட்டத்தில் (2009 ஓகஸ்ட் 24ஆம் திகதி முதல் 2010ஆம் ஆண்டு ஓகஸ்ட் 10ஆம் திகதி வரை) டெண்டுல்கர் 10 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி, 6 சதங்கள் உட்பட ஆயிரத்து 64 ஓட்டங்களையும், 17 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி இரட்டைச் சதம் உட்பட 914 ஓட்டங்களையும் குவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இம்முறை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ரசிகர்கள் தெரிவுசெய்யும் விருதுக்கும் டெண்டுல்கரே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.




இந்த விருதுப் பட்டியலில் இடம்பெற்றிருந்த டி வில்லியர்ஸ், மஹேல ஜெயவர்த்தன, மைக் ஹஸி ஆகியோரை விட டெண்டுல்கருக்கு முன்னுரிமை கொடுத்து ரசிகர்கள் அவரைத் தெரிவுசெய்துள்ளார்கள்.

ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரருக்கான விருதை இந்திய வீரர் ஷேவாக் தட்டிச்சென்றார். விருதுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட காலகட்டத்தில் ஷேவாக் 10 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி, 6 சதங்கள் உட்பட ஆயிரத்து 282 ஓட்டங்களைச் (சராசரி 85.46) சேர்த்துள்ளார்.

டெண்டுல்கர், தென்னாபிரிக்காவின் ஸ்ரெய்ன், ஆம்லா ஆகியோரின் பெயர்களும் இவ்விருதுக்கான பரிந்துரையில் இடம்பெற்றிருந்தன. எல்லா வகைகளிலும் அவர்களை முந்திய ஷேவாக், சிறந்த டெஸ்ட் வீரர் விருதைப் பெற்றுள்ளார்.

ஆண்டின் சிறந்த ஒரு நாள் போட்டி வீரருக்கான விருது தென்னாபிரிக்க வீரரான டி வில்லியர்ஸுக்குக் கிடைத்துள்ளது. இதேபோல், நியூஸிலாந்து அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரரான பிரன்டன் மக்கலம், ஆண்டின் சிறந்த 'இருபது-20' போட்டி வீரராகத் தெரிவு செய்யப்பட்டார். கடந்த பெப்ரவரி மாதம் நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் 116 ஓட்டங்களை (ஆட்டமிழக்காமல்) விளாசியமையே அவருக்கு இந்த விருதைப் பெற்றுக்கொடுத்தது. இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரீபன் பின், வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரருக்கான விருதைப் பெற்றுள்ளார். 21 வயதான ஸ்ரீபன் பின், இதுவரை 8 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 32 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்கிறார்.

சிறந்த நடுவருக்கான விருதை அலிம்தரும் (பாகிஸ்தான்), கிரிக்கெட்டை உத்வேகத்துடன் ஆடிய அணிக்கான விருதை நியூஸிலாந்தும் பெற்றன.

## உலக அணிகள் தெரிவு:

# டெஸ்ட் அணியில் சங்கக்காரவுக்கு வாய்ப்பு!

ஐ.சி.சி. விருது விழாவின்போது ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்ட் போட்டிகளுக்கான இரு உலக அணிகள் தெரிவுசெய்யப்பட்டு அந்தத் தெரிவுகள் அறிவிக்கப்பட்டன. டெஸ்ட் அணியில் இலங்கை அணியின் தலைவர் குமார் சங்கக் காரவும் இடம்பிடித்துள்ளார்.

சிறப்பாகச் செயற்பட்ட வீரர்களைக் கொண்ட, ஒருநாள் போட்டி மற்றும் டெஸ்ட் போட்டிகளுக் கான கௌரவ உலக அணிகளை ஐ.சி.சி. தெரிவுசெய்து நேற்று முன்தினம் அறிவித்திருக்கிறது.

இதன்படி, ஒரு நாள் போட்டிக்கான அணிக்கு ஆஸ்திரேலிய வீரரான ரிக்கி பொண்டிங்கும், டெஸ்ட் அணிக்கு இந்திய வீரரான டோனியும் அணித்தலைவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ஒருநாள் போட்டி அணிக்கு டோனி தொடர்ந்து 3ஆவது ஆண்டாக விக்கெட் காப்பாளராக நீடிக்கிறார்.

இதேவேளை, எந்தவொரு பிரிவி லும் விருதுக்காகத் தெரிவு செய்யப்படாத இலங்கை அணி சார்பாக, உலக டெஸ்ட் அணிக்கு இலங்கை அணியின் தலைவ ரான சங்கக்கார தெரிவுசெய்யப் பட்டுள்ளார்.

ஐ.சி.சி. உலக ஒரு நாள் போட்டி அணி வருமாறு:-

டெண்டுல்கர் (இந்தியா), வோட்சன் (ஆஸ்திரேலியா),




மைக் ஹஸி (ஆஸ்திரேலியா), டி வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா), கொலிங்வுட் (இங்கிலாந்து), ரிக்கிபொண்டிங் (ஆஸ்திரேலியா, அணித்தலைவர்), டோனி (இந்தியா, விக்கெட் காப்பாளர்), விற்றோரி (நியூஸிலாந்து), ஸ்டூ வர்ட் பிராட் (இங்கிலாந்து), போலிஞ்சர் (ஆஸ்திரேலியா), ரையான் ஹரிஸ் (ஆஸ்திரேலியா).

ஐ.சி.சி. உலக டெஸ்ட் அணி வருமாறு:-

ஷேவாக் (இந்தியா), சைமன் கடிச் (ஆஸ்திரேலியா), டெண்டுல்கர் (இந்தியா), ஹாசிம் ஆம்லா (தென்னாபிரிக்கா), சங்கக்கார (இலங்கை), கலிஸ் (தென்னா பிரிக்கா), டோனி (இந்தியா, அணித் தலைவர்), ஸ்வான் (இங்கிலாந்து), ஆண்டர்சன் (இங்கிலாந்து), ஸ்ரெய்ன் (தென்னா பிரிக்கா), போலிஞ்சர் (ஆஸ்திரேலியா).

# உதைபந்தாட்டப் போட்டிகளைக் காண 4 லட்சம் வெளிநாட்டு ரசிகர்கள் வருகை

உதைபந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரின்போது, போட்டி ஏற்பாட்டாளர்கள் 3 லட்சம் வெளி நாட்டு ரசிகர்கள் போட்டிகளைக் காண வருவார்கள் என எதிர் பார்த்திருந்தார்கள். எனினும், அவர்கள் எதிர்பார்த்ததைவிடக் கூடுதலான வெளிநாட்டு ரசிகர்கள் (4 லட்சம்) தென்னாபிரிக்காவுக்கு வந்துள்ளனர் என்று, இதுகுறித்து நடத்திய ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளதாக கிரான் டோன்டரன் என்ற அமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

# தங்கம் வென்ற பளுதூக்கும் வீராங்கனை தன்னந்தனியாக மைதானத்தில் தவிப்பு!

தங்கம் வென்ற பளுதூக்கும் வீராங்கனை ஒருவர், 5 மணி நேரம் மைதானத்தில் தன்னந் தனியாகத் தவித்துள்ளார். பின்னர் தாமாகவே சென்று ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி தாம் தங்கும் விளையாட்டுக் கிராமத்துக்குச் சென்றுள்ளார்.

புதுடில்லியில் நடைபெற்று வரும் கொமன் வெல்த் போட்டி களில், 69 கிலோ பளுதூக்கும் போட்டிப் பிரிவில் இந்திய வீராங்கனையான ரேணுசானு பாலா தங்கம் வென்றார்.

அதேவேளை, கொமன்வெல்த் போட்டிகளில் இது புதிய சாதனையாகவும் அமைந்தது.

அவர் நேற்றுமுன்தினம் போட்டி முடிந்தவுடன் மைதானத்தில் இருந்திருக்கிறார். எனினும், அவரை எவரும் கண்டு கொள்ளாமல் விளையாட்டுக் கிராமத்துக்குச் சென்றமையால், அவர் 5 மணி நேரம் நேரு மைதானத்தில் தவித்துள்ளார். பின்னர், அவரே ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தி விளையாட்டுக் கிராமத்திற்குச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம், இந்திய விளையாட்டு ஆர்வலர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

### கொமன்வெல்த் போட்டிகளில் நாடுகள் பெற்ற பதக்கங்களின் பட்டியல் நேற்றுவரை

| நாடு | தங்கம் | வெள்ளி | வெ.கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 22 | 16 | 10 | 48 |
| இந்தியா | 11 | 13 | 02 | 26 |
| இங்கிலாந்து | 05 | 09 | 12 | 26 |
| தென்னாபிரிக்கா | 05 | 02 | 01 | 08 |
| மலேஷியா | 03 | 05 | 03 | 11 |
| கனடா | 02 | | 07 | 09 |
| ஸ்கொட்லண்ட் | 01 | 01 | 05 | 07 |
| நைஜீரியா | 01 | 01 | 01 | 03 |
| சிங்கப்பூர் | 01 | 01 | 01 | 03 |
| நியூஸிலாந்து | | 06 | 05 | 11 |
| வாலெஸ் | | 01 | 04 | 05 |
| பங்களாதேஷ் | | | 01 | 01 |
| இலங்கை | | | 01 | 01 |
| டிரினாட் - ரொபோகோ | | | 01 | 01 |

# கொமன்வெல்த் நிறைவு விழாவின்போது பெரியளவில் விருந்து வழங்க ஏற்பாடு!

புதுடில்லி, ஒக். 08

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழா எதிர்வரும் 14ஆம் திகதி நடைபெறவுள்ளது. அன்றையதினம் போட்டிகளுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மிகப்பெரிய விருந்து வழங்க ஏற்பாடாகியுள்ளது.

போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் போட்டிகளுடன் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் விருந்து வழங்கப்படவுள்ளது.

தொடக்க விழா மற்றும் நிறைவு விழா என்பவற்றுக்காக திட்டமிடப்பட்டு ஒதுக்கப்பட்ட செலவுத் தொகை, சுமார் 525 கோடி ரூபாவாகும். நிறைவு விழாவுக்கான டிக்கெட்டுகள் இந்தியப் பெறுமதியில் ரூ.50 ஆயிரம், ரூ.20 ஆயிரம், ரூ. 4 ஆயிரம், ரூ.750 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



கொமன்வெல்த் போட்டிகளில் 25 மீற்றர் கைத்துப்பாக்கி சுடுதல் போட்டியில் (இரண்டு வீரர்கள் கொண்ட போட்டி) தங்கம் வென்ற இந்திய வீரர்களான விஜயகுமார், குர்பிரீத்சிங் ஆகியோர் வெற்றிக்களிப்பில்...

# இந்திய அணி தோற்றால் பங்குச்சந்தையில் வீழ்ச்சி

ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணி தோற்றால், அது இந்தியாவின் பங்குச் சந்தையில் சரிவை ஏற்படுத்துகிறது என்று, அதுகுறித்து நடத்தப்பட்ட ஆய்வின்மூலம் தெரியவந்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் மோனாஸ் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறையைச் சேர்ந்த ரஸல் ஸ்மித், வினோத் மிஸ்ரா ஆகியோர் இந்திய பங்குச் சந்தையில் ஏற்படும் மாற்றங்கள் குறித்து ஆய்வு நடத்தியுள்ளனர்.

அதில், எப்போதெல்லாம் ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணி தோற்கிறதோ அப்போதெல்லாம் இந்திய பங்குச் சந்தைகளில் சரிவு ஏற்படுகிறது என்று தங்கள் ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இந்திய அணி வெற்றி பெற்றால் அதனால் இந்திய பங்குச் சந்தையில் உயர்வேதும் ஏற்படவில்லை என்றும் அவர்கள் தங்கள் அறிக்கையில் கூறியுள்ளனர்.

ஆய்வு நடத்திய இருவரில் ஒருவரான ஸ்மித், மோனாஸ் பல்கலையின் பொருளாதாரத் துறையின் தலைவர் என்பது குறிப்பிடத்தக்கது. (12)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். பல்கலைக்கழகத்தில் 06.10.2010 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் எமது நண்பன்

**சூசை அன்ரனி யூட்லியோன்**

(யூட்போட்டோ, வேலணை)

அவர்கள் முகாமைத்துவ கற்கை நெறியில் (B.Com) பட்டம் பெற்றதையிட்டு எமது குடும்பத்தினர் சார்பில் மனமகிழ்வடைவதோடு இவர் மேலும் கல்வித்துறையில் பல பட்டங்களைப் பெற்று உயர்வுகளையும், சாதனைகளையும் புரியவேண்டும் என்று மனதார வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
விஜயன் வெதுப்பகம் (இ.விஜேந்திரன்),
கஜமுகன் மல்ரி சொப் (வ.வசிகஜன்)
வேலணை.

## யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி தரம் 6 அனுமதி

மேற்படி அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தை கல்லூரி அலுவலகத்தில் பெற்று 10.11.2010 இற்கு முன் சமர்ப்பிக்கவும்.

குறிப்பு: தரம் 6 இல் ஆங்கில மூலமான கற்கைக்கு அனுமதிக்கப்படுவர்.

அதிபர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி விவேகானந்தன் பூபாலதேவி**

தோற்றம் 30 - 09 - 1950 மறைவு 30 - 09 - 2008

ஆண்டு இரண்டு ஓடிச் சென்றாலும்
ஆறவில்லை அம்மா! எம் துயரம்
அன்புடன் எமைக்காத்து அறிவுடன்
பண்பு வளர்த்து வையகத்தில் சிறப்புற
உயர்ந்தோங்க வாழ வழிகாட்டி
எமையெல்லாம் திணறி தவிக்கவிட்டு
நீ மட்டும் தனி வழி சென்றாயோ...
*எம் அன்புத் தெய்வம் ஆத்மா சாந்தி*
*அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

பெரியார் பகுதி,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

கணவர் - விவேகானந்தன், பிள்ளைகள்

## தமிழ் மொழிபெயர்ப்பு

நீதிமன்றம் குடும்ப வழக்கு

கனடா
கியூபெக் மாகாணம்,
மாவட்டம்.

No: 500- 12- 297738- 092

உருத்திரபதி லிங்கேஸ்வரன்
வழக்காளி

உதயகுமாரன் சோபனா
எதிராளி

### நீதிமன்ற உத்தரவு

உதயகுமாரன் சோபனா அவர்களுக்கு இட்ட கட்டளை உத்தரவு. நியூ உதயன் பத்திரிகை நிறுவனத்தின் மூலம் 60 நாள்களுக்குள் பிரசுரிப்பதற்கான கட்டளை, இலக்கம் 1Notre - Dame Est, மொன்றியல் நீதிமன்றத்தின் அறை இலக்கம் 1.120 இல் வழங்கப்பட்டது.

மேற்சொல்லப்பட்ட எதிராளிக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்கு விசாரணை 16ஆம் திகதி மார்கழி மாதம் 2010ஆம் ஆண்டு 9 மணிக்கு அறை இலக்கம் 2.17 மொன்றியல் பலே நீதிமன்றத்தில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றது.

மேற்சொல்லப்பட்ட எதிராளிக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட வழக்கின் பிரதி உதயகுமாரன் சோபனாவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

யசோதராணி, தி
மொழி பெயர்ப்பு

சிவமலர் கந்தையா
உறுதிப்படுத்துபவர் (103925)

## அலுவலகத்திற்கு இடம் தேவை

கொழும்பில் இயங்கும் கல்வி நிறுவனத்திற்கு யாழ்.நகரத்திற்கு அண்மித்த பிரதேசங்களில்,பிரதான வீதிகளுக்கு சமீபமான இடம் உடனடியாகத் தேவை. சிறிய/பெரிய வீட்டு அமைப்புக்களும் விரும்பத்தக்கது

தொடர்பு:-0777415161

## வான் சேவை

யாழ்.- கொழும்பு வான் சேவை வீட்டில் வந்து ஏற்றி வீட்டில் இறக்கி விடப்படும்.

கட்டணம் 1000/=

தொடர்பு:-
T.P 0773575310

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1977 இல் பிறந்த 2இல் செவ்வாய் ஆயிலிய நட்சத்திரம் (16 பாவம்) B.A பட்டதாரி மணமகனுக்கு படித்த அல்லது வெளிநாட்டில் P.R உள்ள மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். தொடர்பு:-0778425125

## STR COMPUTER SYSTEM

384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 222 4459, 0774192275, Fax :222 4460.

**CERTIFICATE IN INTERNET & E-MAIL**

Chatting, Dawnloding, Web & E-Mail Address Creating, Face Book, Video Call, Net Call. என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

**8 Students in a Batch**

MS Office, Hardware Technology, DTP, Kids Programme போன்ற டிப்ளோமா கற்கை நெறிகளும் ஆரம்பமாகவுள்ளன. பாடசாலை மாணவர்களுக்கு, தொழில் புரிபவர்களுக்கென விசேட வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

DURATION 1 MONTH, RS. 1000/-
[கைலச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்]

## STR COMPUTER SYSTEM

384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 222 4459, 0774192275, Fax:222 4460

**COMPUTER REPAIRING**

COMPUTER REPAIRING
SOFTWARE INSTALLATION
VIRUS ELIMINATION
COMPUTER MAINTENANCE
MONITOR, UPS, LAPTOPS,

என்பன உங்கள் வீடுகளில் அல்லது காரியாலயங்களில் வந்து ஒரே நாளில் திருத்தி கொடுக்கப்படும். உங்கள் நிறுவனங்களிலோ or பாடசாலைகளிலோ உள்ள கணனிகளை, மாதாந்த கொடுப்பனவு மூலம் குறைந்த செலவில் பராமரித்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளில் ஏற்படும் வைரஸ் பிரச்சினைகளுக்கு (eset antivirus, Licence Version) மூலம் உத்தரவாதத்துடன் தீர்வுபெற்றுக் கொடுக்கப்படும்.

அனைத்து Laptop, Desktop கணனி உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக் கொள்ளலாம்.

[கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்]

## Two-day Seminar on Teaching O/Level English Literature

For all teachers of English interested in teaching O/L English literature.

**Dates:** 12 &13 October
**Time:** 8.30am - 4.30pm
**Venue:** Library Auditorium University of Jaffna

Sessions conducted by lecturers from Universities of Sri Jeyawardanapura, Kelaniya and Jaffna and the Syllaubus designing committee.

**Call: 0774457308 for more details**

Organised by the Sri Lanka Federation of University Women (SLFUW) in collaboration with ELTC-UJ, sponsored by the US Department of state.

(104354)

## பாமசிக்கு ஆள் தேவை

வடமராட்சியில் இயங்கும் பாமசிக்கு அனுபவமுள்ளவர்கள் தேவை. பாமசியில் வேலையில் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.ஆண்/பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புக்கு:-0779234235

## கண்ணீர் அஞ்சலி

வலிகாமம் கல்விவலயத்தைச் சேர்ந்த மனைப்பொருளியல் ஆசிரியர் திருமதி ந.தவராணி அவர்களின் அன்புக் கணவர்

**குமாரசாமி நவரட்ணம்**

அவர்களின் திடீர்மறைவினால் துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின்ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

வலிகாமம் கல்வி வலயம்.
மனைப்பொருளியல் ஆசிரியர்கள்.


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2162 திகதி 06-10-2010

ஆங்கில எழுத்திற்கும் F

வெற்றி எண்கள் 06 09 32 40

போனஸ் இல: 54

ஜக்பொட் பரிசு ரூ. 16,368,425/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 191936 | 20/- | 3,838,720/- |
| 2 இல | 13734 | 100/- | 1,373,400/- |
| 3 இல | 278 | 1,000/- | 278,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7612 | 40/- | 304,480/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 542 | 1,000/- | 542,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 14 | 10,000/- | 140,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 16,368,425/- | - |
| 1 இல + போனஸ் இல | 9061 | 100/- | 906,100/- |
| 2 இல + போனஸ் இல | 408 | 500/- | 204,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 386 | 200/- | 77,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 22 | 1,500/- | 33,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 9,296,900/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 224010 | | 9,896,900/- |

ரு. 60,000/- வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கம்பஹா | 202365450-6-09 |
| மாத்தளை | 202363486-3-45 |
| குருநாகல் | 202360596-3-19 |
| யாழ்ப்பாணம் | 202373668-4-25 |
| வவுனியா | 202371453-4-07 |
| மட்டக்களப்பு | 202363270-0-05 |
| அம்பாந்தோட்டை | 202362140-1-47 |
| மொனராகலை | 202360150-5-33 |
| கொழும்பு | 202371827-4-02 |
| இரத்தினபுரி | 202368967-0-43 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 16,891,900/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2010 ஒக்டோபர் 09 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7


## மரண அறிவித்தல்

### திருமதி கந்தசாமி தங்கம்மா



பருத்தித்துறை, 3 ஆம் குறுக்குத் தெருவை வசிப்பிடமாகக் கொண்ட கந்தசாமி தங்கம்மா 2010.10.05 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் (முன்னாள் பரிசோதகர், இ.போ.ச.) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுமத்திராதேவி மற்றும் கமலாதேவி,பழனிநாதன் (கொழும்பு) பவானிதேவி ,நாகேந்திராதேவி, ஜெயபாலச்சந்திரராசா, (ஜெயா,ஜேர்மனி) ,செல்வராதாதேவி, சிறிராமசோதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் தேவலிங்கம்,உருக்மணி (கொழும்பு), தர்மலிங்கம், தசரதர், ஜெயந்தினி (ஜேர்மனி), கெங்காதரன் (பொது முகாமையாளர், யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிச் சங்கங்களின் சமாசம்), கிருபாலினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.10.2010) சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரியடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள் நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயில் வீதி,
3ஆம் குறுக்குத் தெரு,
பருத்தித்துறை. (சி/571659)

தகவல்:
பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



06.10.2010 யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 26ஆவது பட்டமளிப்பு விழாவில் இளநிலை கலைமாணி பொருளியல் சிறப்புப் பட்டம் (B.A.ECO.SP) பெற்ற கோப்பாயைச் சேர்ந்த

**திரு. பஞ்சலிங்கம் கிரிதரன்**

அவர்களை மேலும் பல பட்டங்களைப் பெற்றுயர மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**கோப்பாய் ஸ்ரார் கிரிக்கெட் நண்பர்கள்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த 2009 ஆம் ஆண்டு பட்டமளிப்பின்போது B.Com. (Hons) பட்டம் பெற்ற

**செல்வி ராஜேஸ்வரன் பிரியதர்சினி**

அவர்களையும் இம்முறை நடைபெற்ற 26ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற

**செல்வி சிறிராம் உஷாந்தினி**

அவர்களையும் மனப்பூர்வமாக வாழ்த்துவதுடன் இவர்கள் மென்மேலும் பட்டங்கள் பலபெற்று சிறப்புடன் வாழ இறைவனை வேண்டுகிறோம்.

அன்புடன் வாழ்த்தும்:
செ.கந்தசாமி, முகாமையாளர்,
மக்கள்வங்கி, மானிப்பாய்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA NO. - 1 புறொயிலர் குஞ்சுகள் 09.10.2010 காலை 8 மணிக்கு விநியோகிக்கப்படும் பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும்.

**ராஜின்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P. No. 222 2867, 0776090926

## அறிவித்தல்

கிளிநொச்சி, மாவட்ட நீதிவான் நீதிமன்ற இடைக்காலத் தடைக்கட்டளையின் பிரகாரம் "02.10.2010 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் பிரசுரமான கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி இறைச்சிக் கடைக்கான கேள்வி அறிவித்தல்" தவிர்க்க முடியாத காரணத்தினால் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

பொன்.நித்தியானந்தன்
சிறப்பு ஆணையாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.

## மகளிருக்கான துரித 3 மாத சான்றிதழ் பயிற்சிகள்

### சனி, ஞாயிறு பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

ஆரம்பம்: 17-10-2010 ஞாயிறு (விஜயதசமி நாளில்)

கேக் ஐசிங் · உணவு தயாரித்தல் · கூந்தல் அலங்காரம்

மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் 15 நாள் Facial, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure, முடிஅயன்செய்தல், Perming, நிறமூட்டுதல், முடிவெட்டுதல் பயிற்சிகளும் நடைபெறும்.

தையல் அறிவு அற்றவர்களுக்கான **6 மாத உடை தயாரித்தல் பயிற்சிகள்**
தையல் தெரிந்தவர்களுக்கான 15 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுறிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.
மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

**கலாலயா**
பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

Guru


## மொழி விருத்திக் கற்கை; நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், ஒக். 8

தேசிய கல்வி நிறுவகத்தால் நடத்தப் படவிருக்கும் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழி விருத்திக் கற்கை நெறிகளுக்கு ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வு நாளையும் நாளை மறுதினமும் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிப் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகத் தேர்வுக்கான அழைப்புக் கடிதங்கள் விண்ணப்பதாரிகளின் சொந்த முகவரிகளுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஒ-ஐ)

## அதிபர் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.8

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களுக்கு இன்று நடைபெறவிருந்த கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டு எதிர்வரும் 13ஆம் திகதி நடைபெறும் என்று கோட்டக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-72)

## பனைவிதை நடுகைவிழா

யாழ்ப்பாணம், ஒக்.8

பனைவிதை நடுகைவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பாரம்பரிய கைத்தொழில் மற்றும்சிறு தொழில் முயற்சி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார். கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட அரச அதிபர்திருமதி இமெல்டா சுகுமார், யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, உலக உணவுத் திட்டப் பொறுப்பாளர் தேவதாஷ் சங்கதாச், உடுவில் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஆறுதிருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-15-86)

## விழிநீரில் உறவாடும் உயிரே உமக்கு பிறந்தநாள் நினைவஞ்சலி



அமரர் **பற்குணன் சதீஸ்குமார்**

(தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனாவைத்தியசாலை)

பூபாளம்: 08.10.1976 உதிர்வு: 04.06.2009

வைகறை விடியலில் பூத்திட்ட நறுமலரே!
வையகத்தில் வந்து பண்புடன்
பரிவைக்காட்டி பாசத்தை விதைத்தாய்
எங்கள் கைகளில் கிடைத்த அட்சய பாத்திரமே!
எம் செல்வமே! உன் கம்பீர நடை எங்கே.?
நீ ஆற்றிய சேவைகள் எங்கே?
வையகம் போற்றும் அழகும் பண்பும்
வாய்த்தவர முனக்கென நாம் இருக்கையில்
பொய்யவை என்று நீ புவி நீத்துச் சென்றது ஏனோ?
புலம்பு எம் நெஞ்சினுக்காறுதல் உண்டோ சொல்?
அழகனே! சதீஸ் உன் அன்பு முகம் மறப்போமோ?
நெஞ்சினில் தீப்படும் நிலையினில் தவிக்கிறோம்
அன்னையாய் தந்தையாகி அனைவருக்கும் அரணாய் நின்றாய்
ஐயா! நீ இன்று இருப்பின் அகவை முற்பத்திநான்கு
உன் பிறந்த நாளை கொண்டாடியிருப்போமே.
முடியவில்லை உன்னை மறக்க.

உம்பிரிவால் வாடும்
அன்பு அம்மா, அப்பா,
தம்பி, தங்கைமார்.

## மத்திய கல்லூரியின் பரிசளிப்பு

யாழ். மத்திய கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு வைப வம் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு தம்பர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இப் பரிசில் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவனும் தென் கிழக்குப் பல்கலைக் கழக பொருளியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளருமான ஆறுமுகம் சௌந்தரலிங்கம் கலந்து கொள்வார். (ஒ-16)


**PERSONAL CLASS**
364, Stanly Rd., Jaffna (Near DMI)
GAQ / BA I
BA Final
தமிழ் - K.தர்மராஜா
Pol.Sci
Hin.Cul
Drama
English - MAHESWARAN
SPOKEN SINHALA
ஆரம்பம் 09.10.2010

## போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்

* வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை வகுப்பு சனி, ஞாயிறு 2.00-5.00 இவ்வார வகுப்பு ஞாயிறு (10.10.2010) 2.00 மணிக்கு ஆரம்பமாகும்
* SLAS மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை வகுப்பு ஒவ்வொரு ஞாயிறும் 9.30-2.00 மணிவரை நடைபெறுகிறது.

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு யாழ். போதனாவைத்தியசாலை எதிரே.


# மரண அறிவித்தல்கள்

## நாகநாதி நாகமணி



(புங்குடுதீவு, 04ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், பருத்தித்துறை வீதியை வசிப்பிடமாகவும், தற்போது திருநெல்வேலியில் வசித்து வந்தவருமான நாகநாதி நாகமணி நேற்று (07.10.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதி நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான குமரவேலு -அமுதம் தம்பதிகளின் அன்பு மருமகனும், அமரர் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும் கருணாகரன், நவநீதன், ஆகியோரின் பாசமிகு தங்கையும் பிறேமாவதியின் பாசமிகு மாமனாரும், கதிர்சனின் பாசமிகு பேரனும், அமரர்களான செல்லம்மா, கந்தையா, ஆறுமுகம், வைத்திலிங்கம், சடாசிவம், வேலாயுதம் மற்றும் மாரிமுத்து ,அமரர் சிவக் கொழுந்து, மற்றும் சிவஞானம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செல்வரட்ணம், மஞ்சுளா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2010) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் பி.ப 2 மணிக்கு தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோயில் வீதி, திருநெல்வேலி. (104373)
தகவல்: குடும்பத்தினர்.

## நாகலிங்கம் பாக்கியம்

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் (கடை) பாக்கியம் வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கத்தின் அன்புத் துணைவியாரும் சாரதாமணி காலஞ் சென்ற ஜெயசோதி பாலலட்சுமி (சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) கிருஸ்ணவேணி (யாழ்/ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் அற்புதலிங்கம், சண்முகவடிவேல், சங்கரி (கிளி/சென்.திரேசா வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும் பிரதீப், பிரசாந்தி, பயோதரி ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.10.2010) வெள்ளிக்கிழமை ந.ப. 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சுன்னாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சுன்னாகம்.
தகவல்: நா.ஸ்ரீகந்தராசா

## கந்தையா தம்பிராசா



உடுவில் வீதி, மானிப்பாயைச் சேர்ந்த கந்தையா தம்பிராசா நேற்று (07.10.2010) வியாழக்கிழைமை பிற்பகல் 3.30 மணிக்கு இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பையா - கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பரிமளத்தின் அன்புக் கணவரும், தர்மகுலசிங்கம், தவமலர், சற்குணராசா, பத்மாவதி, தயாபரன், பத்மராணி, பத்மலோஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும், பரமரத்தினம் (பிரான்ஸ்), நியன்சி (இந்தோனேசியா), ரேஜினா, அலெக்ஸ் சாண்டர் யோசெவ், யோகராசா (டோகா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், கனகரத்தினம், தர்மலிங்கம், அசபதி மற்றும் இராசரத்தினம், குணலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், றோகணா தர்மினி, போலினா, உமா ஆனந்தன், சஞ்சயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற நவரத்தினத்தின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.10.2010) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3.00 மணியளவில் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப் பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

உடுவில் வீதி, மானிப்பாய்.
தகவல்: த.தர்மகுலலிங்கம் (மகன்) T.P. 0774019227

## திருமதி அந்தோனிப்பிள்ளை மேரி யோசப்பின்



யாழ்ப்பாணம், 59, வேம்படி வீதியில் வசித்தவரும் பெரிய விளானை பிறப்பிடமாகக் கொண்டவருமான திருமதி அந்தோனிப்பிள்ளை மேரியோசப்பின் நேற்று (07.10.2010) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் மனைவியும், அமரர் பற்றிமா மற்றும் மேரிஸ்ரெலா, புஸ்பதேவி, சகாயநாதன் (சுவிஸ்)ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் அந்தோனியாப்பிள்ளை, லில்லிமேரி, எலிசபேத், மேரிமார்க்றேன் ஆகியோரின் சகோதரியும், ஜீர்த்தன், செல்வி, விஜயா, வாணி கஜேந்திரன் (கட்டார்), விஜேந்திரன் (கட்டார்), அனித் (சுவிஸ்) ஆகியோரின் பேத்தியும், அமரர் வேதராசா (முன்னாள் உதயன் ஊழியர்)வின் மைத் துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (09.10.2010) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று பின்னர் யாழ்.அடைக்கல அன்னை ஆலயத் தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை அனைவ்ரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மேரி ஸ்ரெலா (மகள்)

# ஆர்ப்பாட்டங்கள்-சுவரொட்டி ஒட்டுவதை பொலிஸார் தடுப்பது மனித உரிமை மீறல்

## தொழிற்சங்க சம்மேளனம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 08

ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதையும், அதற்கு ஆதரவாக சுவரொட்டி ஒட்டுவதையும் பொலிஸார் தடுப்பது அரசமைப்பின் 3ஆவது பிரிவு 14ஆவது சரத்தின்படி மனித உரிமை மீறல்களாகும்.

இதுபோன்ற சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்றால் தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து பெரும் போராட்டங்களை முன்னெடுக்கும் என்று தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, ராஜகிரியவில் அமைந்துள்ள தொழிற்சங்க சம்மேளத்தின் தலைமை காரியாலயத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்த சம்மேளத்தின் தலைவர் அன்ரனி மார்க் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தொழிற்சங்கங்களின் சுதந்திரத்துக்கு தடை ஏற்படுத்த பொலிஸார் ஊடாக அரசு முயலுகிறது. அரசமைப்பின் 3ஆம் பிரிவு 14ஆம் சரத்தின்படி தொழிற்சங்கங்களுக்கு அறிவிப்புகளை அறிவிக்க, கருத்துகளை வெளியிட, கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்களில் ஈடுபட உரிமை உண்டு.

எனினும், அவ்வாறு சுவரொட்டிகள் ஒட்டுபவர்களையும், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களையும் கைதுசெய்யுமாறு பொலிஸ் அதிபரினால் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருந்தது.

இதுகுறித்து நாம் பொலிஸாரிடம் வினவினோம். அதற்கு அவர்கள் சுவரொட்டிகளை ஒட்டினால் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் என்றும், டெங்குநோய் பரவ அது வழிவகுக்கும் என்றும் கூறினர்.

சுவரொட்டிகள் ஒட்டுவதன் மூலம் டெங்குநோய் பரவுவது வேடிக்கையான ஒரு விடயமாகும்.

இதேவேளை, கடந்த ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின்போது அரசினால் தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகள் மண்ணுள் புதைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்திலும் அவை நிறைவேற்றப்படுவதற்கு வாய்ப்புகள் இல்லை.

தொழிற்சங்கங்களை முடக்கும் நடவடிக்கைகளைத் தடுக்க அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்காத பட்சத்தில் அனைத்துத் தொழிற்சங்கங்களையும இணைத்து நாடளாவிய ரீதியில் பெரியளவிலான போராட்டங்களில் ஈடுபடத் தயாராக உள்ளோம் - இப்படி அவர் கூறினார்.

# போரின் பின்விளைவான விரக்தியால் கிளி.யில் நாள் ஒன்றுக்கு 4 பேர் தற்கொலை

கொழும்பு, ஒக். 08

கிளிநொச்சியில் யுத்தத்தின் பின்னர் தற்கொலைகள் அதிகரித்துள்ளன எனவும் நாளொன்றுக்கு 4 பேர் என்ற வீதத்தில் தற்கொலைகள் அதிகரித்து வருகின்றன எனவும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உளநல மருத்துவர் மா.ஜெயராசா தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு -

கிளிநொச்சியில் இவ்வாறான நிலைமைக்கு பிரதான காரணம் சமூகப்பின்னணியே ஆகும். குறிப்பாக விதவைகள் கணவன்மார் காணாமல்போன நிலையில் வாழும் பெண்களே இவ்வாறு தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர்.

இதேபோல் யுத்தத்தினால் மனநோயாளியானோர் மற்றும் பாடசாலை செல்லாத சிறார்களின் எண்ணிக்கையும் மாவட்டத்தில் கணிசமாகவுள்ளது. யுத்தத்திற்கு முன்னர் 300 பேராக இருந்த மனநோயாளிகளாக இருந்தர்களில் 100 பேர் வரையில் காணமல் போயுள்ளனர்.

எஞ்சியவர்களுடன் 500 மனநோயாளிகள் தற்போது மாவட்டத்தில் உள்ளனர். இவர்களில் பலரிடம் பேசியபோது, இவர்களுக்கு நெருக்கமான யாராவது ஒருவர் யுத்தத்தில் காணாமல் போயுள்ளதோடு இடப்பெயர்வுகளே காரணமாயிருப்பது தெரியவருகின்றது.

மேலும் கிளிநொச்சி வைத்தியசாலையில் மனநோயாளிகளுக்கான விடுதி 2 ஆம் மாடியிலேயே உள்ளது. இதனால் பலர் அங்கிருந்து குதித்து தற்கொலை செய்ய முயற்சித்துள்ளனர்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

## அமைச்சர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜீ.எல்.பீரிஸ்ஸால் தடுத்து நிறுத்த முடியவில்லை. அந்த முயற்சிக்கு எதிராக அணிசேரா நாடுகளின் ஆதரவைத் திரட்ட அவரால் இயலாமல் போய்விட்டது.

சீனா அவருக்கு விடுத்திருந்த அழைப்பில் குறிப்பிடப்பட்டிருந்த காலத்துக்கு மேலாக அவர் அங்கு தங்கியிருந்தார். இதன்மூலம் அழைப்புவிடுத்த நாட்டின் விருந்தோம்பலை துஷ்பிரயோகம் செய்து எமது நாட்டுக்கு அகௌரவத்தை ஏற்படுத்திவிட்டார்.

இந்த அரசின் வெளிவிவகார அமைச்சராக பீரிஸ் தொடர்ந்தும் செயலாற்றுதல் தொடர்பான ஆற்றலில் நாடாளுமன்றம் நம்பிக்கை இழந்துள்ளது என இந்நாடாளுமன்றம் தீர்மானிக்கின்றது.

நாம் சர்வதேச நாடுகளுடன் நல்ல உறவைப் பேணி வந்தோம். ஆனால், இப்போது அந்த உறவில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றியம் இந்நாட்டின் மீது நம்பிக்கை இழந்துள்ளது. இதனால் ஜீ.எஸ்.பி. பிளஸ் இழக்கப்பட்டுள்ளது. ஜீ.எஸ்.பி. பிளஸ் இல்லாததால் ஆடை ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. நாம் எமது நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதென்றால் நாம் வெளிநாடுகளுடன் நல்லுறவைப் பேண வேண் டும்.

வெளிவிவகார அமைச்சர் பிழை விடும்போது அதைச் சுட்டிக்காட்ட வேண்டியது எமது கடமை. அந்த வகையில்தான் நாம் இந்த நம்பிக்கையில்லா பிரேரணையை பீரிஸுக்கு எதிராகக் கொண்டு வந்தோம். - என்றார்.

(சி)

## பிரேரணை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவற்றைச் சேர்த்த எம்.பிக்கள் வாக்களிப்பு நேரத்தில் சபையில் இருக்கவில்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசு டன் இணைந்து வாக்களித்தது.

(மேலும் செய்திகள் 02 ஆம் பக்கத்தில்)

## எம்.பி. பதவியை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு மாவட்ட பட்டியலில் லக்ஷ்மன் நிபுணாராச்சி அடுத்த இடத்திலுள்ளார். இவர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## தமிழ்க் கட்சிகளின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும் ஆராயவேண்டும்.

அப்படி அவர்கள் வாழ்ந்தவர்களாக ஆதாரம் இல்லாவிடில் இதனைச் சிங்களக் குடியேற்றமாகவே கருதவேண்டும்.

இது தொடர்பாக யாழ். அரச அதிபருடன் நான் பேசவிருக்கிறேன் - என்றார் அவர்.

ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரான எம்.சந்திரகுமார் தெரிவித்தவை வருமாறு:-

எந்த இன மக்களும் இந்த நாட்டில் எந்தப் பகுதியிலும் வாழலாம். ஆனால் அதற்கு கட்டுப்பாடு எதுவும் இல்லை. ஆனால் இன்றைய யாழ்ப்பாண சூழ்நிலையில் காணிகளைப் பகிர்ந்தளிக்கின்ற அளவுக்கு அரச காணிகள் எதுவுமில்லை.

சிங்கள மக்கள் மீண்டும் தங்களை மீளக் குடியமர்த்துமாறு அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக பத்திரிகை வாயிலாக அறிந்தேன். சிங்கள மக்களின் மீள் குடியேற்றம் எந்தளவுக்குச் சாத்தியப்படும் என்று என்னால் உடனடியாகக் கூறமுடியாது. இது தொடர்பாக பரிசீலனை செய்யவேண்டும் - என்றார் அவர். (ஒ-ஜ-9)

## கனடாவுக்குள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லவுள்ளது என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இருப்பினும், தாம் இது தொடர்பாகக் கடுமையான முன்னெச்சரிக்கையுடன் இருப்பதாக கனேடிய பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சின் பேச்சாளர் லோரா மார்க்கேய்ல், இத்தகவல் தொடர்பில் தாங்கள் ஆராய்ந்து வருகின்றனர் என்றும் எவ்விதத் தகவலையும் உறுதியாக வெளியிட முடியாது என்றும் தெரிவித்துள்ளார். (உ-சி)

## மேலும் 500......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமக்கு அரச காணிகளை ஒதுக்கித் தருமாறு அரச அதிபரிடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில் மேலும் 500 சிங்களக் குடும்பங்கள் மீளக்குடியேறும் நோக்கத்தோடு யாழ்ப்பாணம் வரஉள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

''மீளக்குடியேறுவதற்காக தாமும் யாழ்ப்பாணம் வரப் போகின்றனர் என அந்த மக்கள் எமக்கு அறிவித்துள்ளனர். ஆனால், இங்கே எங்களுக்கு போதிய ஏற்பாடுகள் ஏதும் இல்லை.

ரயில் நிலையத்தில் அடிப்படை வசதிகள் ஏதும் அற்ற நிலையிலேயே இருக்கின்றோம். எமது மீள்குடியேற்றம் தொடர்பில் யாழ். அரச அதிபர், ஜனாதிபதி ஆகியோருக்கு மனுக்கள் அனுப்பப்பட்ட போதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. விரைவில் நல்ல பதில் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். அயலில் உள்ள தமிழ் மக்களே இப்போதைக்கு எமக்கு உதவிகளை வழங்கி வருகின்றனர்'' - என்றார்.

ஏற்கனவே யாழ்ப்பாணம் வந்துள்ள சிங்கள மக்களை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி இன்று சந்தித்துப் பேசுவார் என்றும் மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

ரயில் நிலையத்தில் தங்கி உள்ள சிங்களக் குடும்பங்களின் விவரங்கள் பொலிஸாராலும் இராணுவத்தினராலும் நேற்றுப் பதிவு செய்யப்பட்டன.

ரயில் நிலையத்தில் தங்கி இருக்கும் சிங்கள மக்களுக்கு முழுப் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. செய்தியாளர்கள் உட்பட யார் சென்றாலும் விவரங்கள் பதியப்பட்ட பின்பே அவர்களைச் சந்திக்க அனுமதிக்கப்படுகின்றது.

இதற்கிடையே, மீளக்குடியமரும் நோக்கத்துடன் யாழ்ப்பாணம் வந்துள்ள சிங்கள மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு யாழ். செயலகத்தில் உள்ள உரிய அதிகாரிகளுக்கு மேலிட உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-9)


**வெளிவந்துவிட்டது**

தீபாவளி வாழ்த்து மடல்கள் - போஸ்காட் - (சுவாமி - நடிகர் - சீநெறி) இரு மடிப்புக் காட்டுகள் - கட்டிங் காட்டுகள் சகல விதமான காட்டுகளும் இன்றுமுதல் விற்பனையில் வியாபாரிகளுக்கு நிறைவான விசேட விலைக்கழிவு உண்டு.

அன்னை புத்தகசாலை

யாழ்ப்பாணம் 2229881 — சாவகச்சேரி 2270003

**Spoken with Grammar**

ஆங்கிலம், சிங்கள வகுப்புக்கள்

ஆங்கிலம் : சனி, ஞாயிறு - 7.30 a.m.

சிங்களம் : சனி, ஞாயிறு - 7.00 a.m.

ஆரம்பம் 09.10.2010 சனி காலை 7 a.m.

திகழ் கல்வி நிறுவனம்

கே.கே.எஸ். வீதி, இணுவில்.

GAQ, B.A Part-I, IIயாழ். பேராதனை மீட்டல் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**THE SCIENCE CORNER**

Clock Tower Lane, Jaffna.

CHEMISTRY - 2011

ORGANIC

(ENGLISH MEDIUM)

COMMENCE ON 11/10/10 (MON)

MON, TUE : (3-4) P.m

PHYSICAL

(தமிழ் மொழி மூலம்)

WED, FRI : (5.15-61.15) P.m

BENZENE

ஆரம்பம் : 09/10/10 (SAT)

SAT, SUN : (5.15-6.15) P.m

By - அன்பு

**கணக்கீடு**

R.வின்சன் BBA (HRM)

2011 - வருமான செலவுக் க/கு

சனி, ஞாயிறு : 6.30-7.45 Am

2012 - கட்டுப்பாட்டு க/கு

சனி, ஞாயிறு : 7.45-8.45 Am

2010 - காசேடு

சனி, ஞாயிறு : 4.00-5.00 Pm

ஆரம்பம் : 09.10.2010 சனி

ஐடியல்

ஆஸ்பத்திரி பின் வீதி, மானிப்பாய்.

**NALIN INFORMATION TECHNOLOGIES Pvt Ltd**

HP LAPTOP 420 - CPU 2.1 GHz \ RAM 2GB DDR3 \ HDD 320 GB \ BLUETOOTH WIFI \ SCREEN 14.6" \ WEB COM 2MB > 67,750/-

HP LAPTOP 620 - CPU 2.1 GHz \ RAM 2GB DDR3 \ HDD 320 GB \ BLUETOOTH WIFI \ SCREEN 15.6" \ WEB COM 2MB > 69,000/-

LAPTOP கணனிகளிற்கு 1 வருட உத்தரவாதம் வழங்கப்படுவதுடன் FREE HP BAG, HEAD PHONE, KASPERSKY & CARD READER என்பன வழங்கப்படும்

LCD, மற்றும் GRAPHICS LCD MONITOR களும் பெற்றுக்கொள்ளமுடியும். 3 year warranty (16" - 23") 12,100/- தொடக்கம் 30,000/-

கணனிகள் (ASSEMBLE PC), BRANDED கணனிகள் (HP), LAPTOPS (HP, DELL) மற்றும் அதன் உதிரிப்பாகங்கள், PRINTER, SCANNER அனைத்தும் எமது நிறுவனத்தில் மிகவும் மலிவான விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

MICRO SOFT ORIGINAL WINDOWS SOFT WARE DVD களை பெற்றுக்கொள்ள முடியும்

சகலவிதமான WOOFER களும் 2300/- தொடக்கம் 25,000/- வரையில்

அனைத்து விதமான Casing களையும் பெற்றுக்கொள்ள முடியும் 2750/- தொடக்கம் 10,000 வரை

WINDOWS 7 STARTER 6500/-

இச்சலுகைகள் அனைத்தும் 8ம் 9ம் திகதிகளில் மட்டுமே

PROCESSOR - 2.70 GHz / MOTHER BOARD - G31 / RAM - KING 1GB (800) / H.D.D - 500 GB SAMSUNG / DVD WRITER - SAMSUNG / KEY.B/MOUSE - P.LOGIC MULTI MIDIA (1 YEAR W) / UPS - POWER III / MONITOR - AOC 19"

கணனிகளுக்கு 3 வருட முழு உத்தரவாதம் வழங்கப்படுவதுடன் விற்பனைக்கு பிந்திய சேவைகளும் வழங்கப்படும் மேலும் கணனியை பெற்றுக் கொள்பவர்களுக்கு COMPUTER TABLE, KASPERSKY (1 USER), HEAD PHONEஎன்பன இலவசமாக வழங்கப்படும் 51800/-

KASPERSKY ANTI VIRUS 2011 (1,3 User) எம்மிடம் மிக மலிவான விலையில்

D LINK Router 802C - 4600/- (3 year W)

TP LINK Router 8817 - 4100/- (1 year W)

DONGLE 6750/- தொடக்கம் 8000/- அத்துடன் FREE HEAD PHONE வழங்கப்படும

NALIN information Technologies Pvt Ltd

195/4 PARAMESWARA JUNCTION TP:0212221166, 0777667974

**THE SCIENCE CORNER**

Clock Tower Lane, Jaffna.

2011 A/L DAY CLASS

(பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு)

| | |
|---|---|
| CHEMISTRY<br>அன்பு<br>SAT, SUN : (8.30-10) | PHYSICS<br>செல்வன்<br>SAT, SUN : (10-11.30) |
| BIOLOGY<br>பொன் திவாகரன்<br>SAT, SUN : (11.30-1.00)<br>WED, THU, FRI : (7-8.30) | PHYSICS<br>செந்தில்குமரன்<br>SAT, SUN : (2.00-3.30) |
| COM.MATHS<br>சிவகரன்<br>SAT, SUN : (3.30-5) | பாட அலகு ரீதியான மீட்டல் வகுப்புகள் நடைபெறும் |

09.10.2010 - சனிமுதல்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.